## நன்றி நவிலல்

*முகாமைத்துவமானது விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுக்கும் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும், நிதி வழங்கும் நிறுவனங்களுக்கும் பயிற்சிக்கான வசதிகளை வழங்குவதற்காகவும் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட நிதி உதவிக்காகவும் தனது பாராட்டுதல்களை தெரிவிக்கின்றது. நிலையத்தின் தலைவரும், பணிப்பாளர் சபையும் அதன் சகல ஊழியர்களுக்கும் நிலையத்தின் செயற்பாடுகளுக்காக அவர்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்காகவும், உதவிகளுக்காகவும் அவர்களுக்கு தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.*

*எந்திரி. சவிந்திரநாத் பெர்னாந்து*
தலைவர்
இலங்கை தே.எ.ஆ.அ. நிலையம்

# உள்ளடக்கம்

| தலைப்பு | | பக்க எண் |
|---|---|---|
| 01. | சட்டங்கள் சட்டவாக்கம் மற்றும் கூட்டு நிர்வாகம் | 2-3 |
| 02. | பணிப்பாளர் சபை மற்றும் நிறுவனக் கட்டமைப்பு | 4-6 |
| 03. | தலைவரின் செய்தி | 7-9 |
| 04. | சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் நிறைவேற்று சபை | 10-13 |
| 05. | மனித வள முகாமைத்துவம் | 14-21 |
| 06. | 2016 ஆம் ஆண்டின் செயலாற்றுகை வெளிப்பாடு | 22-42 |
| 07. | நலனோம்பல் மற்றும் சமய விவகாரங்கள் | 43-44 |
| 08. | 2016.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | 45 |
| 09. | 2016.12.31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான செலவு வகைப்படுத்தல் செயற்பாட்டு அடிப்படையிலான விரிவான விளக்கம் | 46 |
| 10. | *2016.12.31* இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 47 |
| 11. | *2016.12.31* இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பான கூற்று | 48 |
| 12. | அடிப்படைக் கணக்கீட்டுக் கொள்கைகள் | 49-56 |
| 13. | 2016.12.31 இல் உள்ளவாறான கணக்கீட்டுக் குறிப்புக்கள் | 57-64 |
| 14. | இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையத்தின் 2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார ச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமைஅதிபதியின் அறிக்கை | 65-72 |
| 15. | கணக்காளர் நாயகத்தின் நிதி அறிக்கை மீதான பணிப்பாளர் சபையின் | 73-80 |

# 01. சட்டங்கள் சட்டவாக்கம் மற்றும் கூட்டு நிர்வாகம்

இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (தே.எ.ஆ.அ.ந) 1957 ஆம் ஆண்டின் 49 இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 1974 இல் தாபிக்கப்பட்டது .தற்போது இது தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் செயற்படுகிறது.மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட முதன்மை நிறுவனங்களில் தே.எ.ஆ.அ.நிலையமும் ஒன்றாகும்.உள் நாட்டு எந்திரவியல் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான ஆராய்ச்சி கைத்தொழில் அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்தி இலகுபடுத்தும் முதன்மை நோக்குடன் இந்த நிலையம் ஜாஎல ,ஏக்கல கைத்தொழில் பேட்டையில் நிறுவப்பட்டுள்ளது .

## நோக்கம்

தெற்காசிய பிராந்தியத்தில் தலைசிறந்த எந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமாக திகழ்தல

## நோக்கம

இலங்கையின் சமூகஇ பொருளாதார அபிவிருத்திக்கு எந்திரவியல் பங்களிப்பை வழங்குதல்.

## குறிக்கோள்

"இலங்கையின் சமூக பொருளாதார வளர்ச்சியில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு எந்திரவியல் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் அதேவேளை ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களின் கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் போன்றவற்றை சீரமைப்பதற்கான கலாச்சாரத்தை நிலையத்தினுள் ஏற்படுத்துதல்."

## குறிக்கோள்கள்

1. இலங்கையில் உள்நாட்டு தொழில்நுட்பத்தின் முன்னேற்றகரமான அபிவிருத்திக்கு தேவைப்படும் ஊக்குவிப்பு, அங்கீகாரம்,புத்தாக்கம், ஆக்கப்பூர்வ திறமையை விருத்தி செய்வதற்கான நிறுவன ரீதியான பொறிமுறை தொழில்நுட்பத்தை வழங்குதல்.

2. கூட்டிணைந்த முயற்சிகளினூடாக ஆக்கப்பூர்வமான வகையில் பல்வேறு அரசாங்கம் மற்றும் தனியார் துறை கைத்தொழில் சாலைகள் மற்றும் நிறுவனங்களின் தொழில்நுட்பவியல், எந்திரவியல் மற்றும் ஆராய்ச்சி திறன்களை ஒருங்கிணைப்பதற்கான வசதிகளை வழங்கள்.

3. நாட்டின் வளங்கள் மற்றும் தேசிய திட்டமிடல் செயற்பாடுகளுடன் இயைபுடையதான மொத்தமான தெழில்நுட்பங்களை தெரிவு செய்து அij பின்பற்றுவதை உறுதி செய்தல்.

4. நேரடியான மற்றும் மறைமுகமான தொழில்நுட்ப பொறிமுறை மாற்றங்களை சோதனை செய்தல் மற்றும் இலங்கையிலுள்ள அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்கள் அவ்வாறு செய்வதற்கு கோரப்படும் போது அது சம்பந்தமாd பொருத்தமான ஆலோசனை வழங்குதல்.

5. பொருத்தமான தொழில்நுட்ப வளர்ச்சியை விருத்தி செய்வதனூடாக நாட்டின் மனித மற்றும் மூலப்பொருள் வளங்களின் உச்ச அளவான பயன்பாட்டினை பெற்றுக்கொள்ளுதல்.

6. சிக்கனமானதொரு முறையில் கைத்தொழில், வர்த்தக மற்றும் ஏனைய இறுதி பயன்பாட்டாளர்களின் தேவைக்கேற்ப, முன் மாதிரி இயந்திர சாதனங்களையும் பொறித்தொகுதிகளையும் வbவமைத்தல் தயாரித்தல் மற்றும் சோதனை செய்தல்.

7. சர்வதேச மற்றும் தேசிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் எந்திரவியல் வடிவமைப்புக்கள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான தொழில்நுட்ப தரவுகளை தொடர்ச்சியாக கண்காணித்தல் மற்றும் ஆவணப்படுத்துவதற்கும் வசதிகள் அளித்தல்.

8. அரச மற்றும் தனியார் துறை தொழில் முயற்சியாளர்களுக்கு நிலைபேறான நிபுனத்துவ ஆலோசனை சேவைகளை வழங்கல் மற்றும் நாட்டின் எந்திரவியல், கைத்தொழில் சார் வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி பற்றிய திறன்களை விரிவாக்கும் நோக்குடன் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

9. மேற்கூறப்பட்ட விடயங்களுடன் தொடர்புடையதாக எந்திரவியல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற நோக்கங்களுக்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

# 02 பணிப்பாளர் சபை மற்றும் நிறுவனக் கட்டமைப்பு

## தலைவர்

01. பொறியியலாளர் திரு. ஜே.எல்.சவீந்திரநாத் பெர்னாண்டோ (2016.05.03 முதல்)
B Sc(Hon)Eng., M Eng, FIESL, MIET, C Eng.

02. கலாநிதி திரு. ரீ.ஏ.ஜீ குணசேகர (2016.05.03 வரை)
M Eng(SL), M Sc(Hon) (Ire), PhD(Ire), MIE(SL), FIIE(SL), C Eng. I Eng.

## பணிப்பாளர் சபை

1. பொறியியலாளர் திரு. ஈ.ஏ.ஸ்.கே. எதிரிசிங்ஹ
C.Eng., MIET

2. திரு. ஜீ. சந்திரசிரி
B Com Degree

3. திரு. ஏ.எஸ்.ஆர். வைத்தியசேகர
MBA(PIM-USJ), Chartered Marketer

4. பொறியியலாளர் திரு. ஏ.எஸ். சமரசிங்ஹ
C.Eng

5. திருமதி டி.ஜீ. நிலூகா குமாரி
Master of Business Studies, CBA

6. திரு. ஏ.எச்.அம். அன்வர்

## பணிப்பாளர் நாயகம்/ பணிப்பாளர் சபையின் செயலாளர்

பொறியியலாளர் திரு. டி.டி.ஏ. நாமல்
M Eng (Energy Technology), Bsc Eng (Hons), C Eng, MIE(SL)

**அலுவலகம்**

2பீ /17பி, கைத்தொழில்
குடியிருப்பு.
ஏகலை, ஜா-எலை

**தபால் குறியீட்டு இலக்கம்**

11380

**தொலைபேசி இலக்கங்கள்**

**+ 94-011-2236284**
**+ 94-011-2236384**
**+ 94-011-2236307**
**+ 94-011-5354597**

**+ 94-011-2233153**

nerdcentre@nerdc.lk

www.nerdc.lk

**வங்கியாளர்கள்**


- **இலங்கை வங்கி - ஜா-எலை**
- **இலங்கை வங்கி - தாபனக் கிளை**
- **மக்கள் வங்கி - ஜாஎலை**

**கணக்காய்வாளர்**

**கணக்காய்வாளர் நாயகம்**
**கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்**

## இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம்

# அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க நிறுவனக் கட்டமைப்பு



## 03. தலைவரின் செய்தி



நாட்டின் முன்னணி பொறியியல் மற்றும் அபிவிருத்தி அமைப்பு என்ற வகையில் இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (NERDC) செயலாற்றுகையை மீளாய்வு செய்து சமர்ப்பிக்க வாய்ப்புக்கிட்டியமை மகிழ்ச்சியளிக்கிறது.

தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமானது நவீன கண்டுபிடிப்புக்கள், தயாரிப்புக்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் இதர சேவைகள் மூலம் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் பங்குகொண்டு, நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு மாத்திரமின்றி பொதுமக்களுக்கும் இலாபங்களை ஈட்டிக்கொடுத்து 2016ம் ஆண்டின் பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்கிறது. நவீன தொழில்நுட்பங்களை அடிப்படையாகக்கொண்ட சுயதொழில் வாய்ப்புக்களை வழங்குவதில் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் முக்கிய பங்காற்றுகிறது. தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்தல், வளங்களை சேமித்தல் போன்ற துறைகளிலும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 2016ம் ஆண்டில் மிகவும் சிறப்பாக செயற்பட்டது. புதிய கண்டுபிடிப்பாளர்களின் திறன்களை மெருகேற்ற வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்ததோடு பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை பரப்புவதிலும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுள் கட்டிடப் பொறியியற்துறையில் இடம்பெறும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் விலைப் பயன்திறன் கொண்ட கட்டிடத் தொழில்நுட்பம் தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. பாரம்பரிய ஓடுகள் மற்றும் எஸ்பெஸ்டஸ்(asbestos) கூரைத் தகடுகளுக்குப் பதிலாக சிமெந்து மற்றும் மணல் கலந்து செய்யப்பட்ட கூரைத் தகடுகளை தயாரிக்கும் தொழில்நுட்பத்தை 2016ம் ஆண்டு எமது மையம் அறிமுகப்படுத்தியது. மேலும் எமது மையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தாங்குசுவர்களுக்கான ஏலத்தகை - முன் வார்ப்புக் கொங்கிரீட் பேனல்கள், "L" வடிவிலான ஏலத்தகை - முன் வார்ப்புக் கொங்கிரீட் படிகள், விலை பயன்திறன் கொண்ட கூரைக்கட்டமைப்பு மற்றும் சீமெந்தினால் வலுவூட்டப்பட்ட மண் தொகுதிகள் ஆகியன காரணமாக கட்டுமானப் பணிகளுக்கான காலம் மற்றும் செலவுகள் குறைக்கப்படுவதோடு உபயோகிக்கப்படும் வளங்களும் பெருமளவில் சேமிக்கப்படுகின்றன.

விலைப் பயன்திறன் கொண்ட கட்டிடத் தொழில்நுட்பம் சார்ந்த சகல மதிப்பளவு மற்றும் விபரக்கூற்று நுட்பங்களடங்கிய ஒரு கையேடு எம்மால் 2016ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இக்கையேடானது, கட்டுமான தொழில்நுட்பத்தை தமது கட்டுமானப்பணிகளில் உபயோகிக்க விரும்பும் அனைத்து பங்குதாரர்களுக்கும் பெரிதும் உதவியாக இருக்கும் என்றால் அது மிகையாகாது.

நீர்ப்பாசன கால்வாய்களில் பெருகிக் காணப்படும் களைகளை அகற்றிச் சுத்தம் செய்து நன்னீர் மீன்களை இனப்பெருக்கம் செய்ய இயந்திரங்களை வடிவமைத்தமை, தேங்காய் உற்பத்தித் துறைக்கு இயந்திர சாதனங்கள் அறிமுகம் செய்தமை, மீன்களை புகைப்பதனஞ் செய்யும் உலை அலகொன்றை உருவாக்கியமை, பால் கறக்கும் இயந்திரங்களை மேம்படுத்தியமை, மற்றும் அரை

தானியங்கி அப்பம் தயாரிக்கும் இயந்திரங்களை உருவாக்கியமை போன்றன 2016ம் ஆண்டில் எமது நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான சான்றுகளாகும். மேலும், நோயாளர் காயங்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படும் மிகை அழுத்த ஒட்சிசன் கூடமொன்றை உருவாக்கியமை, சிலிப் ஃபோர்ம் சுவர்(slip form wall) கட்டுமான வேலைகளுக்குப் பயன்படும் இயந்திரத் தொகுதியொன்றை அறிமுகம் செய்தமை, கட்டிட நிர்வாக அமைப்புக்களுக்கான தகவல் சேகரிக்கும் அலகினை அறிமுகப்படுத்தியமை மற்றும் வாகனத் தரிப்பிடப் பிரதான நுழைவாயிலிலேயே வாகனங்களை நிறுத்துவதற்கான வெற்றிடங்களை அறிந்துகொள்ளத் தேவையான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியமை ஆகியனவும் 2016இல் முன்னெடுக்கப்பட்ட எமது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுள் அடங்கும்.

பாதசாரிகளுக்கான பாலங்களை அமைத்தமை மற்றும் சிறிய அளவிளான கழிவு நீர்ச் சுத்திகரிப்பு ஆலையை அறிமுகப்படுத்தியமை ஆகியன 2016ம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட திட்டங்களாகும். ஆயுர்வேதத் துறை சார்ந்த இயந்திரங்களை உற்பத்தி செய்தமை மற்றும் கைத்தறி துணியை ஆய்வு செய்யும் இயந்திரம் உருவாக்கியமை போன்றவை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் நவீன தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட வெற்றிகரமான வணிகத் திட்டங்களாகும்.

தனித்துவமான மற்றும் நிறைவான தொழில்முறைச் சேவைகளை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கத் தேவையான திறன்களை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் தன்னகத்தே கொண்டுள்ளது. எரிசக்தி மற்றும் சுற்றாடல் முகாமைத்துறை சம்பந்தமான தொழில்நுட்பச்சேவைகளின் தேவை தினசரி அதிகரித்தவண்ணம் காணப்படுகின்றது. இதுவரை அச்சேவையை 1000 இற்கும் மேலான கைத்தொழில் மற்றும் வாணிப நிறுவங்கள் நாடியுள்ளன. மேலும், தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட கழிவு நீர்ப்பரிசோதனை மற்றும் ஒலி நிலை அளவீடு ஆகிய சுற்றாடல் முகாமைச் சேவைகளுக்கான ஆய்வுகூடங்களுக்கு "ISO 17025 தரநிர்ணயம் மற்றும் அங்கீகாரம்" 2016ம் ஆண்டு கிடைக்கப்பெற்றதன் மூலம் அளப்பரியவொரு சேவையினை வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்தும் எம்மால் வழங்க இயலுமானது.

அதுமாத்திரமின்றி, கைத்தொழிற்துறையில் காணப்படும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சிவில் பொறியியல், மின் மற்றும் மின்னணுப் பொறியியல், எரிசக்தி மற்றும் சுற்றாடல்முகாமை, விவசாயப் பொறியியல், மற்றும் அறுவடைத் தொழில்நுட்பங்கள் முதலிய பொறியியற் துறைகளில் ஆலோசனை வழங்கும் சேவைகளையும் 2016ம் ஆண்டு தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் வழங்கியது. சிறிய முதல் பெரிய அளவிலான கைத்தொழில்களுக்கான துல்லியமான இயந்திர முறைகள், பொறியியற் திட்டமிடல் மற்றும் கட்டுருவாக்கம், கைத்தொழிற்துறை செயல்முறைகளை மேற்பார்வை செய்தல், ஆய்வக சேவைகள், சுற்றாடல் நிர்வாகம் மற்றும் கட்டுமானம் போன்ற சேவைகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், நாட்டின் பல பாகங்களில் கைத்தொழிற் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு, எரிசக்தி மற்றும் சுற்றாடல் நிர்வாகம், தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் வளர்ச்சியடைந்த தொழில்நுட்பங்கள், இயந்திர சாதனங்களின் தயாரிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள், மற்றும் தொழிற்துறை, சுகாதார, பாதுகாப்பு விடயங்களை ஒருங்கிணைத்த விசேட பயிற்சி நிகழ்ச்சிகளை 2016ம் ஆண்டு முழுவதிலும் முன்னெடுப்பதில் எமது மையம் வெற்றி கண்டுள்ளது.

தொழில்நுட்பப் பரிமாற்றல் செயல்முறை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மற்றுமொரு முக்கியமான பணியென்பதோடு 2016ம் ஆண்டில் 17 தொழில்நுட்பப்பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் தொழில்நுட்பத்துக்காக விநியோகிக்கப்படும் வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் 59இனைப் புதுப்பிக்கும் நிகழ்வுகளும்

வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளன. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் அறிமுகப்படுத்திய தொழில்நுட்பங்களை பொதுமக்கள் மத்தியில் தெளிவூட்டவும் பிரபல்யப்படுத்தவும் பல நிகழ்வுகள் 2016இல் இடம்பெற்றன. 2016ம் ஆண்டு நவம்பர் மாதம்19ம் திகதி ஏற்பாடுசெய்யப்பட்ட தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் திறந்த நாள் பொறியியல் மற்றும் தொழிநுட்பக் கண்காட்சியானது மேற்கூறிய விடயம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும். 2016 தேசிய அறிவியல் வாரத்தையொட்டி தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆராய்ச்சி மாநாடு இடம்பெற்றது. அத்தோடு, தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களை மக்கள்முன் பிரபல்யப்படுத்தும் நோக்கில் ஊடக நிகழ்வுகள் பலவற்றை 2016ம் ஆண்டு முழுதும் எமது நிறுவனம் ஏற்பாடு செய்தது.

அரச ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களில் பணிபுரியும் ஆராய்ச்சிப் பொறியியலாளர்களுக்கான குறைந்த சம்பள மற்றும் சலுகைத் திட்டங்களோடு, திறமையான ஆராய்ச்சிப் பொறியியலாளர்களை நிறுவனத்தில் சேர்த்துக்கொள்ளவும் தக்கவைத்துக்கொள்ளவுமுள்ள சிக்கல்களுக்கு மத்தியில், இலங்கையின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு நேரடித் தாக்கங்கள் செலுத்தக்கூடிய பொறியியல் தொழில்நுட்பங்களை மேம்படுத்தல், கையகப்படுத்தல், பொருந்தச் செய்தல், மற்றும் பரிமாற்றம் செய்தல் போன்றவற்றுக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் முதலான நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதென்பது ஒருபோதும் சுலபமான காரியமல்ல என்பதை இவ்விடம் தெரிவித்துக்கொள்கிறேன். ஆயினும், இந்த சவால்களை எதிர்கொள்ளத் தேவையான திறன்களை ஊழியர்களிடம் வளர்த்து அவர்களை ஊக்குவிக்க திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் பலவற்றை எமது நிறுவனம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்தது. அறிவியல் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் இவ்வாறான நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான செயற்பாடுகளை மேலும் அதிகரிப்பதற்காக, அரச நிறுவனங்களில் ஆராய்ச்சிகளுக்காக, குறிப்பாக பொறியியல் ஆராய்ச்சிக்காக, கவர்ச்சிகரமான சம்பள மற்றும் கொடுப்பனவுத் திட்டமொன்றை இயற்றவேண்டிய தலையாயக் கடமை தற்போது கொள்கை வகுப்பாளர்களுக்கு உண்டு என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்நிலையத்தின் சகல பணிகளையும் செவ்வனே வழிநடாத்தி, நாட்டின் முன்னணி பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாக இம்மையத்தினைத் திகழச்செய்யும் நோக்கில் மையத்தின் பணிப்பாளர் நாயகம், பொறியாளர். டீ.டீ. ஆனந்த நாமல் அவர்களினால் மேற்கொள்ளப்படும் தலைமைப் பணிகள் மிகவும் மெச்சத்தக்கவை. அவருடன் சேர்ந்து இந்நிறுவனத்தின் நலனுக்காக அதன் பணிகளை சிறப்பாக வழிநடாத்தக் கிடைத்தமையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு, மையத்தின் 2016ம் ஆண்டின் இலக்குகளை அடைந்துகொள்ளப் பங்களிப்புச்செய்தபணிப்பாளர் சபை, , உயர்மட்ட நிர்வாகக்குழு, முகாமையாளர்கள், துறைத் தலைவர்கள், ஆராய்ச்சி ஊழியர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர்
பொறியாளர், டப். ஜெ. எல். எஸ். பெர்னாண்டோ

# 04. சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் நிறைவேற்று சபை

## தலைவர்

01. பொறியியலாளர் திரு. டபிள்யு.ஜே.எல். சவீந்திரனாத் பெர்னாண்டோ (2016.05.03 முதல்)
B Sc(Hon)Eng., M Eng, FIESL, MIET, C Eng.

02. கலாநிதி திரு. ரீ.ஏ.ஜீ. குணசேகர (2016.05.03 வரை)
M Eng(SL), M Sc(Hon) (Ire), PhD(Ire), MIE(SL), FIIE(SL), C Eng. I Eng.

## பணிப்பாளர் நாயகம்

பொறி. திரு. டி.டி.ஏ. நாமல
M Eng (Energy Technology), Bsc Eng (Hons), C Eng, MIE(SL)

## பிரதிப் பணிப்பாளர் நாயம் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி

பொறியியலாளர் திரு. ஜீ.கே.கே. ஏ. டி சில்வா
Msc (Building Technology), Bsc Eng (Hons), C Eng, MIE (SL)

## பிரதிப் பணிப்பாளர் நாயம் (சேவைகள்)

திரு. ஏ.எச். பியசிரி
Msc (Management of Technology), Bsc Eng (Hons)

## பொறியியல் மற்றும் ஏனைய நிறைவேற்றுப் பதவியணியினர் திணைக்கள அடிப்படையில்

| விவசாயப் பொறியியலாளர் மற்றும் அடைக்குப் பிந்திய தொழில்நுட்பத திணைக்களம் | சிவில் பொறியியல் திணைக்களம் |
|---|---|
| **பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்)**<br>பொறியியலாளர் திரு. கே.வை.எச்.டி. சாந்த<br>MSc Eng., BSc Eng, AMIE(SL) | **பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்)**<br>பொறியியலாளர் திருமதி ஜே.ஏ.சீ. கிறிஷாந்தி<br>BSc Eng, C Eng, MIE(SL) |
| **தலைமை ஆய்வுப் பொறியியலாளர்**<br>திருமதி வை.எம்.கே. ரணதுங்க<br>NDT<br><br>பொறியியலாளர் திரு. ஏ.ஜே.ஜீ.எஸ். தஹநாயக - 2016.04.01 முதல்<br>BSc Eng, C Eng, MIE(SL)<br>**தலைமை ஆய்வு விஞ்ஞானி**<br>கலாநிதி திருமதி கே.எம்.டபிள்யு. ரஜவத்த<br>PhD, MSc, BSc.<br><br>**சிரேஷ்ட ஆய்வுப் பொறியியலாளர்**<br>பொறியியலாளர் திருமதி பீ.வை.எஸ் பதிராஜ<br>BSc Eng, MSc, AMIE (SL)<br><br>**ஆய்வுப் பொறியியலாளர்**<br>பொறியியலாளர் திரு. எஸ்.ஏ.பீ. சலிந்த சில்வா<br>BSc Eng, AMIE (SL) | **தலைமை ஆய்வுப் பொறியியலாளர்**<br>பொறியியலாளர் திரு. டபிள்யு..டபிள்யு.பீ.கே. பெரேரா<br>M ENG (STRUCT), BSC ENG (HONS), C ENG , MIE (SL)<br>திரு. டபிள்யு.பீ.ஆர்.டி. வீரசிங்ஹ<br>NDT, CEI PART I, IESL PART I<br><br>**பொறியியலாளர்**<br>திருமதி டி.எம்.ஏ.கே. திகல<br>NDES (Civil Eng), CEI (UK) Part I<br>திருமதி கே.எஸ். வீரசிங்ஹ<br>Special Apprentice (Civil Eng.), IESL (Part I)<br><br>**ஆய்வுப் பொறியியலாளர்**<br>பொறியியலாளர் திரு. ஐ.பீ. படுவிட<br>B Sc Eng, AMIE(SL)<br>பொறியியலாளர் திரு. ஏ.என்.எஸ். அமரதாஸ<br>B Sc Eng, AMIE(SL) |

திரு.கே.டி.எஸ். பேமகுமார - 2016.03.23 வரை
BSc Eng

பொறியியலாளர் திரு.ஜீ.எஃப். சுரேன்
BSc Eng, AMIE(SL) - 2016.12.01 முதல்

**பொறியியலாளர்**

திரு. பீ.ஏ.யூ.டபிள்யு.கே. பரணகம்பொல
NDES

**கட்டடக் கலைஞர்**

திருமதி பி.டி.ஆர். சாமிகா
MSc, B Sc

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திணைக்களம்

**ஆய்வுப் பயிலுர் (திணைக்களத் தலைவர்)**

பொறியியலாளர் திரு. ஜே.ஏ.ஏ.டி. ஜயசூரிய
M Eng, BSc Eng, MIE(SL)

**ஆய்வுப் பயிலுநர்**

பொறியியலாளர் திரு. டபிள்யு.கே.ஆர். பீரிஸ்
MA (Buddhist Stud), BSc Eng, C.Eng. MIE(SL)

பொறியியலாளர் திரு. என்.கே. எதிரிசிங்ஹ
MPhil, BSc Eng, MIE(SL)

**தலைமை ஆய்வுப் பொறியியலாளர்**

கலாநிதி திரு. ஏ.எஸ்.கே. வராஹேன
PhD, M Eng, B Sc Eng

**ஆய்வுப் பொறியியலாளர்**

திரு. ஈ.பி.யூ.சீ. குமார
BSc Eng (Hons)

செல்வி ஈ. நதீஷானி - 2016.10.07 வரை
BSc Eng (Hons)

பொறியியலாளர் திருமதி ஜீ.எஸ்.ஆர். கொஸ்தா
BSc Eng, AMIE(SL)

பொறியியலாளர் திரு. என்.எம்.ஜே.எஸ். நிஸ்ஸங்க
BSc Eng, AMIE(SL)

**பொறியியலாளர்**

திரு. டபிள்யு.ஏ.எல்.எஸ். கருணாவர்தன
HNDE

## மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் திணைக்களம்

**ஆய்வுப் பயிலுர் (திணைக்களத் தலைவர்)**

பொறியியலாளர் திருமதி என்.ஜீ.டி. விஜேசிரிவர்தன
M Eng, C Eng, MIE (SL)

**சிரேஷ்ட ஆய்வுப் பொறியியலாளர்**

பொறியியலாளர் யூ.சீ. பொதேஜு - 2016.04.04 முதல்
MSc., BSc Eng. AMIE(SL)

**ஆய்வுப் பொறியியலாளர்**

பொறியியலாளர் திருமதி டி.ஆர்.எஸ்.கே. விமலரத்ன
BTech Hons, AMIE(SL)

செல்வி வை.எம்.ஏ.ஜீ.எஸ்.கே. குலரத்ன
BSc Eng

பொறியியலாளர் திரு. வை.எஸ்.பீ. வீரசிங்ஹ - 2016.02.01 முதல்
BSc Eng. AMIE(SL)

பொறியியலாளர் திருமதி எச்.சீ. கனேகே - 2016.12.01 முதல்
BSc Eng. AMIE(SL)

**பொறியியலாளர்**

திருமதி எச்.டி.சீ. ஹெட்டிஆரச்சி
NDT

| வரைபு நிர்மாண மற்றும் ஆலோசனைத் திணைக்களம் | எரிச்தி மற்றும் சூழல் முகாமைத் திணைக்களம் |
|---|---|
| **பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்)**<br>பொறியியலாளர் திரு. ஏ.ஏ.எஸ்.பீ. ஜயசிங்ஹ<br>BSc Eng (Hons), MBA, MIE(SL) | **ஆய்வுப் பயிலுர் /திணைக்களத் தலைவர்**<br>பொறியியலாளர் திரு. கே.ரீ. ஜயசிங்ஹ<br>M Eng, BSc Eng, C Eng, MIE(SL) |
| **தலைமை ஆய்வுப் பொறியியலாளர்**<br>பொறியியலாளர் திரு. எச்.எம்.எல்.யூ. ஹேரத்<br>BSc Eng, AMIE(SL)<br><br>பொறியியலாளர் திரு. ஆ.ஆர்.சீ. சல்காது<br>BSc Eng, AMIE(SL)<br><br>**ஆய்வுப் பொறியியலாளர்**<br>பொறியியலாளர் திரு. எஸ்.பீ. பெரேரா<br>EC (UK) Part I & II, NDT, AMIE(SL)<br><br>**பொறியியலாளர்**<br>திரு. என்.ஏ.டி.டி.ஜே. பிரசன்ன<br>NDT<br><br>**நிர்வாகி - வேலைத்தளம்**<br>திரு. டபிள்யு.எச்.எஸ். ரமல் சில்வா<br>NDES | **சிரேஷ்ட ஆய்வுப் பொறியியலாளர்**<br>பொறியியலாளர் செல்வி என்.பீ.ரீ. பெரேரா<br>MSc, BSc Eng (Hons.), AMIE(SL)<br><br>பொறியியலாளர் செல்வி ஏ.ஜீ.எம்.ரீ. சிரிவர்தன<br>MSc, MEng, BSc Eng., AMIE(SL)<br><br>கலாநிதி செல்வி எஸ்.எம். யங்<br>PhD, M Phil, MSc, BSc.<br><br>**ஆய்வுப் பொறியியலாளர்**<br>பொறியியலாளர் திரு. எம்.டி சகதரின்<br>BSc Eng, AMIE(SL)<br><br>பொறியியலாளர் திரு. கே.பீ.டி.டி. ஜயசேகர<br>BSc Eng (Hons), AMIE(SL)<br><br>திரு. ரீ.கே. கீனகே<br>BSc Eng. AMIE(SL) |
| **தொழில்நுட்ப சந்தைப்படுத்தல் திணைக்களம்** | **மெகட்ரோனிக்ஸ் பிரிவு** |
| **பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்)**<br>பொறியியலாளர் திரு எம்.ஏ.எம். பெர்னாண்டோ<br>PG Dip (Energy) IESL Part I & II, CEng, MIE (SL) | தலைமை ஆய்வுப் பொறியியலாளர் (பிரிவுக்குப் பொறுப்பான பொறியியலாளர்)<br>பொறியியலாளர் திரு. டி.எம். புஞ்சிபண்டா<br>BSc Eng, AMIE(SL) |
| **தலைமை ஆய்வுப் பொறியியலாளர்**<br>திரு.டி.வீ. விமலசேன<br>NDT, Dip in Marketing (SL)<br><br>**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்**<br>திரு. எஸ். விஜேசூரிய<br>MBS, BSc (Agriculture) Sp.<br><br>**ஆய்வுப் பொறியியலாளர்**<br>திருமதி பி.டி.பீ.எஸ். ரணவீர - 2016.03.01 முதல்<br>MSc, BSc<br><br>**நிர்வாகி - தொழில்நுட்பப் பூங்கா**<br>திரு.ஏ.ஏ.என்.எஸ் அதிகாரி<br>BSc | **சிரேஷ்ட ஆய்வுப் பொறியியலாளர்**<br>**பொறியியலாளர்** திரு.எச்.பீ.எச் குமார<br>MSc Eng, EC(UK) PART I & II, AMIE(SL)<br><br>**ஆய்வுப் பொறியியலாளர்**<br>பொறியியலாளர் செல்வி எம்.ஏ.என். சுகந்தி - 2016.05.02 வரை<br>B Tech, AMIE (SL)<br><br>செல்வி எல்.என்.ஏ. பெரேரா - 2016.07.31 வரை<br>BSc Eng. (Hons)<br><br>பொறியியலாளர் திரு. எஸ்.எம்.எஸ்.எஸ். சேனாரத்ன<br>B Tech, AMIS(SL)<br><br>பொறியியலாளர் திரு. ஜீ.எம்.சீ.எம். ராஜகருணா - 2016.12.01 முதல்<br>BSc Eng, AMIE(SL)<br><br>பொறியியலாளர் திரு. டபிள்யு..எம்.எஸ்.பீ.கே. வணிங்ஹ - 2016.12.05 முதல்<br>BSc Eng, AMIE(SL) |

| மனித வளத் திணைக்களம் | நிதித் திணைக்களம் |
|---|---|
| **பணிப்பாளர் (மனித வளம்)**<br>செல்வி டி.ஏ.எம். முணசிங்ஹ<br>BSc (HRM), MBA (HRM), AM(IPM) | **பணிப்பாளர் (நிதி)**<br>திருமதி டி.வீ.எஸ். பெரேரா<br>ICMA Professional Part II, IPFA, ICEA |
| **உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)**<br>திரு. ஆர். கமகே<br>B A (Social Sc.) Sp., MA in Sociology | **கணக்காளர்**<br>திரு. ஜே.எம்.ஆர்.எஸ். ஜயசிங்ஹ<br>BBA (Busi. Admin) Sp. , MBA, ICASL - Professional Part I |
| **தகவல் தொழில்நுட்பப் பிரிவு** | **நூலகம்** |
| **வலையமைப்பு நிர்வாகி**<br>திரு. பீ.பீ. விக்ரமசூரிய<br>BSc (Computing & Infor. Systems) | **நூலகர்**<br>திருமதி டி.எம்.ரீ.பீ.கே. தேவகிரி<br>B A (Library Sc. Sp., MSSc, ASLLA |
| **உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு** | **வழங்கல் பிரிவு** |
| **உள்ளகக் கணக்காய்வாளர்**<br>திரு. பி.பி. சுசந்த குமார<br>HNDA | **வழங்கல் உத்தியோகத்தர்**<br>திரு. ஆர்.எச்.ஏ. ஜீவானந்த<br>BSc (Physical Science) |

# 05. மனித வள முகாமைத்துவம்


அதி விசேடமான செயலாற்றுகை மூலம் குறிக்கோள்களையும் இலக்குகளையும் பூர்த்திசெய்வதற்கான ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பிரதான சொத்து மனித வளமாகும். ஏனைய வளங்களின் மூலம் ஏதேனும் நடக்க முடியுமாயினும் எந்தவொன்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு மனித வள அவசியமாகும். உரிய வழிகாட்டல், மனித வளங்களைப் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதன் ஊடாக வினைத்திறன்மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான சேவையினைப் பெறுவதற்கு நேர்ட் நிறுவனத்தின் முகாமைத்துவம் தொடர்ச்சியாக முயற்சி செய்கின்றது.

தகைமைகளைக் கொண்ட பொறியியல் ஆய்வாளர்களையும் விஞ்ஞானிகளையும் ஆட்சேர்ப்புச் செய்து தக்க வைத்துக் கொள்வது நிறுவனத்தின் மனித வள முகாமைத்துவத்தில் அடையாளம் காணப்பட்ட மிக முக்கியமான பிரச்சினையாக உள்ளதுடன் இது இலங்கையிலுள்ள அதிகமான அரசாங் நிறுவனங்கள் எதிர்நோக்கும் ஒரு பொதுப் பிரச்சினையாக உள்ளது. விஞ்ஞான, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையொன்றை உருவாக்குதல், விஞ்ஞான மற்றும் பொறியியல் ஆராய்ச்சிகளைத் தேசிய அபிவிருத்திக்குப் பயன்படுத்துதல், விஞ்ஞானிகளையும்/ ஆராய்ச்சியாளர்களையும் ஆட்சேர்ப்புச் செய்யும் போது அவர்களின் சம்பளங்கள் மற்றும் பயன்கள் என்பவற்றை தொழிற் சந்தை வீதங்களின் அடிப்படையில் முகாமை செய்தல், தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி போன்றவை தொடர்பில் விரிவான ஒருங்கிணைந்த உபாய முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

தற்போது காணப்படும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுச் செயலொழுங்குகளின் கீழ் தேர்ச்சிகளைக் கொண்டுள்ள பொறியியல் ஆராய்ச்சியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் தக்க வைத்துக்கொள்ளும் பிரச்சினைக்கு மத்தியிலும் உயர் கல்வி வாய்ப்புக்களையும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களையும் வழங்குதல், சர்வதேச மாநாடுகளில்/ செயலமர்வுகளில் பங்கேற்கச் செய்தல் என்பன போன்ற திறன் விருத்தி வாய்ப்புக்களுக்கு அனுப்புதல், மிகவும் சிறந்த வேலைச் சூழலொன்றை ஏற்படுத்துதல் மற்றும் தொழில் அபிவிருத்தி வாய்ப்புக்களுக்கான தகைமைகளைய ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி தேர்ச்சி பெற்ற ஆராய்ச்சியாளர்களையுட் விஞ்ஞானிகளையும் ஆட்சேர்ப்புச் செய்து அவர்களை நிறுவனத்தினுள் தக்க வைத்துக்கொள்வதற்கான சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் முகாமைத்துவம் எடுத்து வருகின்றது.

**நிலையத்தின் 2016 ஆம் ஆண்டின் மொத்தப் பதவியணியினதும் தகவல்களின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.**

| சேவை வகுதி | எண்ணிக்கை |
|---|---|
| உயர் முகாமைத்துவ சபை | 3 |
| பொறியியலாளர் பதவியணி | 50 |
| நிறைவேற்றுப் பதவியணி | 10 |
| கனிஷ்ட முகாமைத்துவப் பதவியணி | 10 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம்) | 21 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம் அல்லாத) | 51 |
| ஆரம்ப நிலைப் பதவியணி | 145 |
| **மொத்தம்** | **290** |



### 5.1.1 2016 ஆம் ஆணட்டில் புதிய ஆட்சேர்ப்புக்கள்

| | பெயர் | பதவி | ஆட்சேர்ப்புச் செய்த திகதி |
|---|---|---|---|
| 1 | திரு. வை.எஸ்.பீ. வீரசிங்ஹ | ஆய்வுப் பொறியியலாளர் | 1/2/2016 |
| 2 | திரு. எஸ்.டபிள்யு.ஏ.ரீ. சமரவிக்ரம | கைத்தொழில் உதவியாளர் | 1/2/2016 |
| 3 | செல்வி ஏ.ஜீ.எம்.ரீ சிரிவர்தன | சிரேஷ்ட ஆய்வுப் பொறியியலாளர் | 1/3/2016 |
| 4 | திரு. ஆர்.எம்.ஆர்.எஸ். விஜயபண்டார | மின்சாரத் தொழில்நுட்பவிலயாளர் | 1/3/2016 |
| 5 | திரு.ஜே.பீ.ஜே. ஜயவிகரம | அச்சு தயாரிப்பவர் | 1/3/2016 |
| 6 | திரு எம்.டி.எச். பெர்னாண்டோ | மின்சாரத் தொழில்நுட்பவிலயாளர் | 8/3/2016 |
| 7 | திரு. எம்.எஸ்.வை.வீ.கே. பெரேரா | தொழிலாளர் | 10/3/2016 |
| 8 | திரு. ஏ.ஜே.ஜீ.எஸ். தஹநாயக | தலைமை ஆய்வுப் பொறியியலாளர் | 1/4/2016 |
| 9 | கலாநிதி திருமதி கே.எம்.டபிள்யு. ரஜவத்த | தலைமை ஆய்வு விஞ்ஞானி | 1/4/2016 |
| 10 | திரு. யூ.ஜீ. பொதேஜு | சிரேஷ்ட ஆய்வுப் பொறியியலாளர் | 4/4/2016 |
| 11 | செல்வி பி.கே.ஏ. தர்மரத்ன | முகாமைத்துவ உதவியாளர் | 5/4/2016 |
| 12 | செல்வி ஆர்.எஸ். பிரியதர்ஷனீ | முகாமைத்துவ உதவியாளர் | 5/4/2016 |
| 13 | திரு. கே.ஏ.சீ. மதுசங்க | இயந்திரத் தொழில்நுட்பவியலாளர் | 5/4/2016 |
| 14 | செல்வி எம்.என். மதுஷானி | முகாமைத்துவ உதவியாளர் - கண்காட்சியாளர் | 5/4/2016 |
| 15 | செல்வி திலிணி விஜேகோன் | முகாமைத்துவ உதவியாளர்கள் - விசாரணை | 5/4/2016 |
| 16 | திரு. எம்.டி.ஓ.ஜீ. சேனாநாயக்க | முகாமைத்துவ உதவியாளர்கள் - விசாரணை | 5/4/2016 |
| 17 | செல்வி பீ.எச்.எஸ்.எல். தனபால | வரைபடக் கலைஞர் | 5/4/2016 |
| 18 | திரு. ஜீ.எல். தேவசுரேந்திர | வரைபடக் கலைஞர் | 5/4/2016 |
| 19 | திரு. ஏ.ஆர். கஸ்தூரிரத்ன | மின்சாரத் தொழில்நுட்பவிலயாளர் | 5/4/2016 |
| 20 | திரு. எச்.பீ.எல். சுதேஷ் | சாரதிகள் | 5/4/2016 |
| 21 | கலாநிதி செல்வி எஸ்.எம். யங் | தலைமை ஆய்வு விஞ்ஞானி | 25/4/2016 |
| 22 | திரு. கே.எஸ்.கே.பி.எம்.ஆர்.ஏ. லெனாவல | நிர்வாகி - பராமரிப்பு | 16/5/2016 |
| 23 | திரு. நவீந்திர பிரசாத் | தொழிலாளர் | 16/5/2016 |
| 24 | திரு. ஜீ.ஏ.ஜீ.பீ.எஸ்.கே. கொடபொல | சாரதிகள் | 25/5/2016 |
| 25 | திரு. என்.எம்.ஐ.டி. நவரத்ன | கைத்தொழில் உதவியாளர் | 1/6/2016 |
| 26 | திரு. தினூஷான் நயனஜித் | அலுவலக உதவியாளர் | 6/6/2016 |
| 27 | திரு. சமீர சங்ஜய | சாரதி உதிவயாளர் | 6/6/2016 |
| 28 | திரு. சமீர செனவிரத்ன | ஆயுதப் பொறுப்பாளர் | 6/6/2016 |
| 29 | திரு. சங்ஜய நிரோஷன் | ஆயுதப் பொறுப்பாளர் | 6/6/2016 |
| 30 | திரு. ஜீ.எம். சங்கீத் | நூலக உதவியாளர் | 6/6/2016 |

| | | | |
|---|---|---|---|
| 31 | செல்வி பி.ஐ.ஜீ.ஐ. மதுஷானி | முகாமைத்துவ உதவியாளர் - விசாரணை | 6/6/2016 |
| 32 | செல்வி கே.ரீ.பியூமலி | கைத்தொழில் உதவியாளர் | 1/7/2016 |
| 33 | திரு. பி.டி.ரீ.கே பிரியங்கர | இயந்திரத் தொழில்நுட்பவியலாளர் | 1/7/2016 |
| 34 | திரு. ஈ.ஏ. பிரசாத் சதுரங்க | இயந்திரத் தொழில்நுட்பவியலாளர் | 1/7/2016 |
| 35 | ஏ. திருமதி மஞ்சுளா தமயந்தி | அலுவலக உதவியாளர் | 1/7/2016 |
| 36 | திரு. எம்.டி.பீ.எஸ்.கே. ஜயதிலக | வரைபடக் கலைஞர் | 4/7/2016 |
| 37 | திரு. எச்.எம்.எஸ். சாந்த ஹேரத் | கைத்தொழில் உதவியாளர் | 14/7/2016 |
| 38 | திருமதி டி.எம்.ரீ. வெர்ஜினியா | முகாமைத்துவ உதவியாளர் | 15/7/2016 |
| 39 | திரு. பீ.சீ.என்.பீ. பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | 16/10/2016 |
| 40 | செல்வி எச்.சீ. கனேகே | ஆய்வுப் பொறியியலாளர் | 1/12/2016 |
| 41 | திரு. ஜீ.எம்.சீ.எம். ராஜகருணா | ஆய்வுப் பொறியியலாளர் | 1/12/2016 |
| 42 | திரு. பீ.எஃப். சுரேன் பெரேரா | ஆய்வுப் பொறியியலாளர் | 1/12/2016 |
| 43 | திரு. எச்.டி.எச். ஹிரத்ன | உருக்கி ஒட்டுநர் | 1/12/2016 |
| 44 | திரு. எஸ். சமன்னாத் | கொத்தர் | 1/12/2016 |
| 45 | திரு. டபிள்யு.எம்.எஸ்.பீ.கே. வனசிங்ஹ | ஆய்வுப் பொறியியலாளர் | 5/12/2016 |
| 46 | திரு. என்.எம்.ஜே.எஸ். நிஸ்ஸங்க | ஆய்வுப் பொறியியலாளர் | 14/12/2016 |
| 47 | திரு. ஈ.ஜீ. திலான் சுமிந்த | இயந்திரத் தொழில்நுட்பவியலாளர் | 14/12/2016 |

### 5.1.2 2016 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றவர்கள்

| | பெயர் | பதவி | ஓய்வுபெற்ற திகதி |
|---|---|---|---|
| 1 | திரு. எம்.என்.ஆர். தர்மசேகர | இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர் | 10/02/2016 |
| 2 | திரு. எச். சுனில் பெரேரா | சாரதிகள் | 16/05/2016 |
| 3 | திரு. ஜே.பி. ஷெல்டன் டயஸ் | உருக்கி ஒட்டவைப்பவர்/ வெல்டிங் செய்பவர் | 30/05/2016 |
| 4 | திரு. எஸ்.எச்.ஏ. சோமவீர | தொழிலாளர் | 06/06/2016 |
| 5 | திரு. டபிள்யு.ஏ வீரசிங்ஹ | உருக்கி ஒட்டுநர் | 01/07/2016 |
| 6 | செல்வி ஆர்.கே. வைத்தியசேகர | நிர்வாக உத்தியோகத்தர் | 27/07/2016 |
| 7 | திரு. ஏ.ஏ. அமரசூரிய | முகாமைத்துவ உதவியாளர் | 15/09/2016 |
| 8 | திரு. கே.ஏ. குணரத்ன | உதவி வழங்கல் உத்தியோகத்தர் | 02/11/2016 |

### 5.1.3 2016 ஆம் ஆண்டில் சேவையைவிட்டு விலகியவர்கள்

| | பெயர் | பதவி | விலகிய திகதி |
|---|---|---|---|
| 1 | செல்வி என்.பீ.ஏ. கமகே | கைத்தொழில் உதவியாளர் | 01/03/2016 |
| 2 | திரு.கே.டி.எஸ். பேமகுமார | ஆய்வுப் பொறியியலாளர் | 23/03/2016 |
| 3 | திரு. கே.ஆர்.ஏ.எஸ்.எஸ். கஸ்தூரிரத்ன | மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் | 11/04/2016 |
| 4 | செல்வி எம்.ஏ.என். சுகந்தி | ஆய்வுப் பொறியியலாளர் | 02/05/2016 |
| 5 | திரு. ஜீ.எல். தேவசுரேந்திர | வரைபடக் கலைஞர் | 16/05/2016 |
| 6 | பீ. திரு. பசில் சில்வா | தச்சர் | 18/07/2016 |
| 7 | திரு. எஸ்.டபிள்யு.ஏ.கே.ரீ. சமரவிக்ரம | கைத்தொழில் உதவியாளர் | 28/07/2016 |
| 8 | செல்வி ஏ.எல்.என்.ஏ. பெரேரா | ஆய்வுப் பொறியியலாளர் | 31/07/2016 |
| 9 | திருமதி ஐ.எஸ். திக்கும்புர | கைத்தொழில் உதவியாளர் | 07/09/2016 |
| 10 | செல்வி எச்.டி. மதுவந்தி | கைத்தொழில் உதவியாளர் | 19/09/2016 |
| 11 | செல்வி ஈ. நதீஷானி | ஆய்வுப் பொறியியலாளர் | 07/10/2016 |
| 12 | திருமதி ஏ.ஏ. லக்மாலி | முகாமைத்துவ உதவியாளர் | 08/10/2016 |
| 13 | திரு. எச்..டபிளயூ. ஜகத் நிலமலரத்ன | தொழிலாளர் | 07/11/2016 |
| 14 | திரு. ஏ.என்.எம்.சீ.என். அபேசிரி | ஆய்வுப் பொறியியலாளர் | 14/11/2016 |

### 5.1.4 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உள்ள ஆட்சேர்ப்புக்கள்

| | பெயர் | முன்னைய பதவி மற்றும் சேவை வகுதி | புதிய பதவி மற்றும் சேவை வகுதி | திகதி |
|---|---|---|---|---|
| 1 | செல்வி என்.பீ.ரீ. பெரேரா | ஆய்வுப் பொறியியலாளர் (AR 1) | ஆய்வுப் பொறியியலாளர் (AR 2) | 01/03/2016 |
| 2 | பொறியியலாளர் திருமதி பீ.எம்.வை.எஸ். பதிராஜ | ஆய்வுப் பொறியியலாளர் (AR 1) | ஆய்வுப் பொறியியலாளர் (AR 2) | 01/12/2016 |
| 3 | திருமதி பி.டி.பீ.எஸ். ரணவீர | நிர்வாகி - அருங்காட்சியகம் (JM 1-2) | ஆய்வுப் பொறியியலாளர் (AR 1) | 01/03/2016 |

## 5.2 மனித வள அபிவிருத்தி

நிறுவனம் எப்போதும் மனித வள அபிவிருத்தி தொடர்பில் முன்னுரிமையுடன் கவனம் செலுத்தி வருவதுடன் அதற்காக வசதிகளை வழங்குவதற்கும் தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகின்றது. அறிவு, திறன்கள் மற்றம் சரியான மனப்பாங்கு என்பவற்றை வளர்ப்பதன் மூலம் தேர்ச்சிபெற்ற பயனுறுதி வாய்ந்த ஊழியர் குழாமொன்றை நிலையத்தில் எப்போதும் வைத்திருப்பதற்காக எப்போதும் முயற்சி செய்யப்படுகின்றது. அதற்காக அவர்களால் நிலையத்தில் செய்யப்படும் சேவைகளையும் கடமைகளையும் மிகவும் வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதி வாய்ந்ததாகவும் பெறுவதுடன் அவர்களின் தனிப்பட்ட தொழில் வளர்ச்சியையும் இலக்காகக் கொண்டு திறமைகளை விருத்தி செய்கின்ற மற்றும் அறிவு, திறன்கள், மனப்பாங்கு, தேர்ச்சிகளை வளர்க்கின்ற நிகழ்ச்சிகளுக்கு ஊழியர்களை அனுப்பப்படுகின்றனர்.


2016 ஆம் ஆண்டில் நேர்ட் நிலையத்தின் ஊழியர் குழாத்திற்காகப் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சியும் அபிவிருத்தி வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன.

### 5.2.1 உள்நாட்டு நிகழ்ச்சிகள்

பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் - சேவை வகுதி அடிப்படையில்

| சேவை வகுதி | பயிற்சி வாய்ப்புக்கள் |
|---|---|
| உயர முகாமைத்துவம் | 7 |
| பொறியியலாளர் | 209 |
| நிறைவேற்று | 82 |
| கனிஷ்ட முகாமை | 20 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்ப) | 35 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்ப அல்லாத) | 101 |
| ஆரம்ப நிஎ | 109 |
| **மொத்தம்** | 563 |

**சேவை வகுதி மட்டத்தில் சதவீதமாக**




### 5.2.2 வெளிவாரியான நிகழ்ச்சிகள்

சேவை நிலையத்திற்கு வெளியே நடாத்தப்படும் வதிவிடப் பயிற்சிகள் மற்றும அபிவிருத்திச் செயலமர்வுகள்

நிறுவனத்திற்குப் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர், கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் வகுதிகளைச் சேர்ந்த பதவியணியின 31 பேருக்காக 2016 ஜூலை 20 மற்றும் 21 ஆந் திகதிகளில் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சியொன்று தொழில்நுட்பப் பூங்காவில் நடாத்தப்பட்டது.

### 5.2.3 (அ) உயர்கல்வியை/தொழிற் தகைமைகளைப் பூர்த்தி செய்றவதற்கான வசதிகள்

| 2016 ஆம் ஆண்டில் உயர் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் | | | | |
|---|---|---|---|---|
| | பெயர் மற்றும் முகவரி | தகைமை | நிறுவனம் | பூர்த்திசெய்யப்பட்ட திகதி |
| 01 | பொறியியலாளர் திருமதி பீ.வை.எஸ் பதிராஜ சிரேஷ்ட ஆய்வுப் பொறியியலாளர் | M.Sc/PG Diploma Course in Sustainable Process Eng. | மொரட்டுவை பல்கலைக்கழகம் | 01/07/2016 |

| 2016 ஆம் ஆண்டில் கற்கைள் ஆரம்பிக்கப்பட்ட உயர் கல்வி வாய்ப்புக்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெயர் மற்றும் முகவரி | தகைமை / பாடநெறி | நிறுவனம் | ஆரம்பித்தி திகதி | முடிவடையவுள்ள திகதி |
| 01 | திருமதி ஜீ.எஸ்.ஆர். கொஸ்தா ஆய்வுப் பொறியியலாளர் | M.Eng./PG Diploma Pro.in Energy Technology | மொரட்டுவை பல்கலைக்கழகம் | 06/02/2016 | 05/02/2018 |
| 02 | திரு. ஆர். கமகே உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | Master in Labouer Relations and Human Resources Management - 2016/17 | கொழும்பு பல்கலைக்கழகம் | 01/06/2016 | 31/05/2018 |
| 03 | திருமதி பி.டி.பீ.எஸ். ரணவீர ஆய்வு விஞ்ஞானி | M.Sc Degree Programme in Industrial and Environmental Chemistry 2016-2018 | களனி பல்கலைக்கழகம் | 18/06/2016 | 17/06/2018 |
| 04 | திரு. பி.பீ. விக்ரமசூரிய வலையமைப்பு நிர்வாகி | M.Eng./PG Diploma in Information Tech. -2016 | மொரட்டுவை பல்கலைக்கழகம் | 22/10/2016 | 21/10/2018 |
| 05 | திரு. கே.பீ.டி.டி. ஜயசேகர ஆய்வுப் பொறியியலாளர் | M.Eng./PG Diploma in Environmental Eng. & Mgt. | மொரட்டுவை பல்கலைக்கழகம் | 21/10/2016 | 21/10/2018 |
| 2016 ஆம் ஆண்டில் தொடர்ந்த உயர் கல்விப பாடநெறிகள் | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.பி.எஸ். குமார<br>உள்ளகக்<br>கணக்காய்வாளர் | MPM Programme | SLIDA | 28/02/2015 | 27/02/2017 |
| 02 | திரு. ஐ.பீ. படுவிட<br>ஆய்வுப் பொறியியலாளர் | PG Diploma/M.Eng in Highway &Traffic Eng. | மொரட்டுவை பல்கலைக்கழகம் | 24/07/2015 | 23/07/2017 |
| 03 | திரு. எஸ்.எம்.எஸ்.<br>சேனாநாயக்க<br>ஆய்வுப் பொறியியலாளர் | M.Sc/PG Diploma Course inIndustrial Automation | மொரட்டுவை பல்கலைக்கழகம் | 24/10/2015 | 23/10/2017 |
| 04 | திரு. ரீ.கே. கீனகே<br>ஆய்வுப் பொறியியலாளர் | M.Sc/PG Diploma Course in Sustainable Process Eng. | மொரட்டுவை பல்கலைக்கழகம் | 05/12/2015 | 04/12/2017 |
| 05 | திரு.ஏ.ஏ.என்.எஸ்<br>அதிகாரி<br>நிர்வாகி - தொழில்நுட்பப்<br>பூங்கா | MBA Degree (Master of Business Administration) | கொழும்பு பல்கலைக்கழகம் | 28/11/2015 | 27/11/2017 |

**2016 ஆம் ஆண்டில் உத்தரவுபெற்ற பொறியியலாளர் தகைமைகளைப் பூரத்தி செய்தவர்கள்**

| | பெயர் மற்றும் முகவரி | அங்கத்துவம் | நிறுவனம் | பெறப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| 01 | பொறியியலாளர் இ.ஏ.என்.கே.<br>எதிரிசிங்ஹ<br>ஆய்வுப் பயிலுநர் | Member | இலங்கை பொறியியலாளர் திணைக்களம் | 20/5/2016 |
| 02 | பொறியியலாளர் திரு. ரீ.கே.<br>கீனகே<br>ஆய்வுப் பொறியியலாளர் | Associate Member | இலங்கை பொறியியலாளர் திணைக்களம் | 16/06/2016 |
| 03 | பொறியியலாளர் திரு.<br>டபிள்யு.எம்.எஸ்.பீ.கே.<br>வனசிங்ஹ<br>ஆய்வுப் பொறியியலாளர் | Associate Member | இலங்கை பொறியியலாளர் திணைக்களம் | 01/07/2016 |
| 04 | திரு. ஜே.ஏ.ஏ.டி. ஜயசூரிய ஐயா<br>ஆய்வுப் பயிலுநர் | Member | இலங்கை பொறியியலாளர் திணைக்களம் | 07/10/2016 |
| 05 | ஏ.ஏ.எஸ்.பீ. ஜயசிங்ஹ<br>பணிப்பாளர் நாயகம்<br>(தொழில்நுட்பம்) | Member of Charter | இலங்கை பொறியியலாளர் திணைக்களம் | 07/10/2016 |

## 5.3 வெளிநாட்டுப் புலமைப்பரிசில்/மாநாடுகள்/பயிற்சி நிகழ்ச்சிகள்/ செயலர்வுகளில் பங்கேற்றல்

| | பெயர் மற்றும் முகவரி | நிகழ்ச்சி | நாடு | காலப் பகுதி |
|---|---|---|---|---|
| 01 | பொறியியலாளர் ஜீ.கே.ஏ. டி<br>சில்வா<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம்<br>(ஆய்வு மற்றும் அபிவிருத்தி) | 2016 Seminar on Science and Technology Innovation for Developing Countries | சீனா | 2016.05.26-2016.06.15 |
| 02 | பொறியியலாளர் டி.டி. ஆனந்த<br>நாமல்<br>பணிப்பாளர் நாயகம் | The 2nd forum on China- South Asia Technology Transfer and Collaborative Innovation | சீனா | 2016.06.12-2016.06.14 |
| | | Twelfth Session of the Governing Council of APCTT and the high-level International Conference on Innovation Strategies for Sustainable Development | பாகிஸ்தான் | 2016.12.19-2016.12.21 |
| 03 | பொறியியலாளர் திரு. ரீ.கே.<br>கீனகே<br>ஆய்வுப் பொறியியலாளர் | International Workshop on China-South Asia Technology Manager Training | சீனா | 2016.08.04-2016.08.23 |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | பொறியியலாளர் திரு. எஸ்.ஏ.பீ.ஏ.எஸ். சில்வா ஆய்வு உத்தியோகாத்தர் | International Workshop on China-South Asia Technology Manager Training | சீனா | 2016.08-.04-2016.08.23 |
| 05 | பொறியியலாளர் திரு. ஏ.ஏ.எஸ்.பீ. ஜயசிங்ஹ பணிப்பாளர் - (தொழில்நுட்பம்) | International Training Workshop on Business R & D Building from the perspective of GVC | சீனா | 2016.09.04-2016.09.23 |
| 06 | பொறியியலாளர் திரு. கே.ரீ. ஜயசிங்ஹ ஆய்வுப் பயிலுநர் | Multicounty Observational Study Mission on Advanced Energy Technology | ஈரான் | 2016.10.01-2016.10.05 |
| 07 | பொறியியலாளர் திரு. டபிள்யு.ஜே.எல்.எஸ். பெர்னாண்டோ தலைவர் | International Convention of Science, Technology and Innovation | கியூபா | 2016.10.31-2016.11.04 |
| 08 | திரு. டபிள்யு.ஏ.எல்.எஸ். கருணாவர்தன பொறியியலாளர் | Evolving Energy Models in Emerging Economies – Post COP 21 | இந்தியா | 2016.12.12-2016.12.14 |

## 5.3 சமூக நலனோம்பல் சேவைகள் - 2016

பயிலுநர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல்.

பல்கலைக்கழகங்களாலும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்/ தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களால் அனுப்பப்பட்ட 32 பயிலுநர்களுக்கு 3 மாதம்/ 6 மாதம் / ஒரு வருட ம் போன்ற காலப் பகுதிகளுக்கான தொழில்/ தொழில்நுட்ப பயிற்சி வாய்ப்புக்கள் 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

# 6. 2016 ஆம் ஆண்டின் செயலாற்றுகை வெளிப்பாடு

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், நிறுவனத்தின் இலக்குகளுக்கும் குறிக்கோள்களுக்கும் இணங்க பல்வேறுபட்ட பொறியியல் துறைகளில் ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதலும் அவற்றைப் பிரபல்யப்படுத்துதல், பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள், நிர்மாணச் செயற்பாடுகள் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டதன் மூலம் 2016 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கப்பட்டது. புதிய தொழில்நுட்பங்களையும், உற்பத்திகளையும் முறைமைகளையும் அறிமுகப்படுத்துதல், பல்வேறு கைத்தொழில் துறைகளில் பயனுறுதித் தன்மையையும் வினைத்திறனையும் மேம்படுத்துதல். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாண்மைகளுக்கான முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்குதல். தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்தல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புக்கான வாய்ப்புக்களை மேம்படுத்துதல், வளங்கள் மூலம் உச்ச பயனைப் பெறுதல் போன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## 6.1 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான பொதுச் செயற்பாடுகள்

### 6.1.1 சீமெந்து மற்றும் மணல் கலந்த கூரைத் தகடு உற்பத்தித் தொழில்நுட்பத்தை அறிமுப்படுத்துதல்





நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சீமெந்து, மணல் கலந்து உற்பததி செய்யும் கூரைத் தகட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுமார் 2500 சதுர அடிகள் கொண்ட மாடியொன்றை நிர்மாணிக்கும் முன்னோடிச் செயற்திட்டமொன்று சில வருடங்களுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டது. கடந்த சில வருடங்களாக இந்த தொழில்நுட்பம் தொடர்பில் ஆய்வுகளைச் செய்ததன் பின்னர் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளுக்குப் பதிலாக இந்த புதிய சீமெந்து மணல் தகட்டு உற்பத்தி நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இத்துறையில் ஆர்வம் காட்டும் தரப்பினரும் ஓட்டு மற்றும் அஸ்பெஸ்டஸ் உற்பத்தி நிறுவனங்களும் அதில் பங்கேற்றன.

நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சீமெந்து, மணல் கலந்து உற்பததி செய்யும் கூரைத் தகட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுமார் 2500 சதுர அடிகள் கொண்ட மாடியொன்றை நிர்மாணிக்கும் முன்னோடிச் செயற்திட்டமொன்று சில வருடங்களுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டது. கடந்த சில வருடங்களாக இந்த தொழில்நுட்பம் தொடர்பில் ஆய்வுகளைச் செய்ததன் பின்னர் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளுக்குப் பதிலாக இந்த புதிய சீமெந்து மணல் தகட்டு உற்பத்தி நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இத்துறையில் ஆர்வம் காட்டும் தரப்பினரும் ஓட்டு மற்றும் அஸ்பெஸ்டஸ் உற்பத்தி நிறுவனங்களும் அதில் பங்கேற்றன.

### 6.1.2 எரிசக்தி மற்றும் சூழல் முகாமை நிலையத்தின் புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தை திறந்து வைத்தல்




### 6.1.3 செலவுப் பயனுறுதிக் கொண்ட நிர்மாணத் தொழில்நுட்பம் தொடர்பான கைநூல் வெளியீடு

ஒப்பந்தக்காரர்கள், வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களுக்காகச் செலவுப் பயனுறுதிவாய்ந்த நிர்மாணத் தொழில்நுட்பம் தொடர்பான கைநூலொன்று காணப்படாமை பெரியதொரு குறைவாடாகக் காணப்பட்டது. நிர்மாணத் துறையின் அத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நேர்ட் நிறுவனத்தினால் அனைத்து தொழில்நுட்பத் தரநியமங்களும் விபரக் குறிப்புக்களும் அடங்கிய கைநூல் தரநியமங்களுக்கு இணங்கத் தொகுக்கப்பட்டுள்ளது. செலவுப் பயனுறுதிவாய்ந்த நிர்மாணத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் கட்டடக் கலைஞர்களுக்கும் நிர்மாணத் துறையில் ஈடுபாடுள்ளவர்களுக்கும் இது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

### 6.1.4 பெரசவி, பெரநிமி கொங்கிரீட் பெனல்களால் நிர்மாணிக்கப்பட்ட மதில் - முன்னோடிச் செயற்திட்டம்


பூர்த்திசெய்யப்பட்ட முன்னோடிச் செயற்திட்டம் - தளுப்பிட்டி


தோல்வியடைந்த கொங்கிரீட் மதில் - கொத்மலை

தற்போது காணப்படும் காணிப் பற்றாக்குறையின் காரணமாக சாதாரணக்ககூட மதில்களை நிர்மாணிக்கும் தேவை காணப்படுகின்றது. தற்போது பயன்படுத்தப்படும் மதில் தொழில்நுட்பத்திற்கு அதிக இடமும் செலவும் தேவைப்படுகின்றது. மேற்குறித்த பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வாக இந்த நிறுவனத்தினால் குறைந்த இடமும் குறைந்த செலவும் கொண்ட வலுவூட்டப்பட்ட, தயாரிக்கப்பட்ட மதில் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மஹரை பிரதேச சபையின் தளுப்பிட்டி கிளினிக் கட்டடத்திற்கு அருகில் இந்த புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட மதில் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அது 8 அடி உயரமும் 30 நீளமும் கொண்டது. அதற்கு 250,000.00 ரூபா செலவாகியது. அது RCC மதிலுடன் ஒப்பிடுகையில் 15% செலவு குறைந்ததாகும். தேவையான இடவசதியைக் கவனத்திற் கொள்கையில் அது Random Rubble Masonry மதிலுடன் ஒப்பிடுகையில் 80% மீதப்படுத்தப்பட்டது.

### 6.1.5 திறந்த நாள் கண்காட்சி - நிலையத்தின் தொழில்நுட்பப் பூங்காவில் நடாத்தப்பட்டது.



எமது நாட்டின் பொது மக்கள் மத்தியில் நேர்ட் தொழில்நுட்பத்தை ஊக்குவித்து பிரபல்யப்படுத்துவதற்காக ஒரு நாள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கண்காட்சியொன்று 2016 நவம்பர் 19 ஆந் திகதி நிலையத்தின் தொழில்நுட்பப் பூங்காவில் நடாத்தப்பட்டது. அக்கண்காட்சி நிலையத்தில் பணிபுரியும் அனைத்து தலைவர்களினதும் பங்கேற்புடன் வெகு விமர்சையாக திறந்த வைக்கப்பட்டதுடன் அதனை முன்னிட்டு மரநடுகை நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது.

நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பம், உற்பத்தி முறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட சேவைகளைப் பொது மக்களுக்குக் காட்சிப்படுத்துவதற்காக அக்கண்காட்சியில் பிரயோக மாதிரிகள், செய்துகாட்டல்கள் அறிவூட்டல், ஆலோசனைச் சேவை வழங்கல், மக்கள் எதிர்நோக்கும் நிர்மாணப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கிளினிக்குகளை நடாத்துதல், சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆலோசனை வழங்குதல், பொறியியல் அருங்காட்சியகத்தை கட்டணமின்றிப் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் என்பன நடாத்தப்பட்டன.

### 6.1.6 ஆய்வுகூடத்திற்கு ஐ.எஸ்.ஓ 17025 - சான்றிதலும் தரப்படுத்தலும் கிடைத்தமை




கைத்தொழில்களுக்கும் வைபெறுநர்களுக்கும் மிகவும உச்சளவிலான சேவையினை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டில் எரிசக்தி மற்றும் சுற்றாடல் முகாமை நிலயைத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் கழிவுநீர்ச் பரிசோதனை மற்றும் ஒலி மட்ட அளவீட்டுச் சேவைகளுக்கு ISO 17025 தரச் சான்றிதலும் தரப்படுத்தலும் பெறப்பட்டது.

### 6.1.7 நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள், உற்பத்திகள், வழிமுறைகள் என்பவற்றின் அடிப்படையிலான ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான மாநாடொன்றை நடாத்துதல்.




இதில் 6 ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அவற்றில் சிறந்த 3 ஆய்வு அறிக்கைகள் பாராட்டப்பட்டன.

## 6.2 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

நாட்டின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக புதிய உற்பத்திகள், வழிமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுப்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் பல 2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 6.2.1 நன்னீர் மீன் இனப் பெருக்க நீர்நிலைகளில் காணப்படும் காட்டுச் செடிகளை அகற்றுவதற்கான இயந்திரமொன்றை அறிமுப்படுத்துதல்.





நன்னீர் மீன் நீர்நிலைகளில் காடடுச் செடிகள் நிரம்பிக்க காணப்படுவதும் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலில் காணப்படும் ஒரு பிரதான பிரச்சினையாகும். நீரின் கொள்ளளவு குறைவடைதல், நீர் நிலைகளுக்கு அண்மையில் வாழும் மக்களுக்கப் பொருளாதார மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுதல் என்பன பாதகமான பெறுபேறுகளாகும். தற்போது இந்த காட்டுச் செடிகள் கையால் அகற்றப்படுவதுடன் அதற்காகச் செலவிடும் நேரமும் செலவும் மிகவும் அதிகமாகும்.

தென் மாகாண சபையின் மீன்பிடித் திணைக்களம் இப்பிரச்சினைக்கு முகங்கொடுத்து வந்துள்ளதுடன் அந்த நீர்நிலைகளிலிருந்து காட்டுச் செடிகளை அகற்றுவதற்குப் பொருத்தமான இயந்திரமொன்றை உருவாக்கித் தருமாறு செய்த கோரிக்கைக்கு இணங்க நிலையத்தினால் இந்த நீரியல் செடிகளை வெட்டி அகற்றுவதற்காக செலவு குறைந்ததும் சூழல் நட்புறவானதுமான இயந்திரமொன்றை உற்பத்தி செய்வதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த இயந்திரத்தை படகு ஒன்றின் மீது வைத்துப் பயன்படுத்தக்கூடியதாக உள்ளதுடன் அதன் களப் பரிசோதனைகள் தற்போது நடாத்தப்பட்டு வருகின்றன.

### 6.2.2 தெங்கு உற்பத்திக் கைத்தொழிலுக்கான இயந்திர உபகரணங்களை அறிமுப்படுத்துதல்






தெங்குச் செய்கையாளர்களும் தெங்கு கைத்தொழிலில் ஈடுபடுபவர்களும் எதிர்நோக்கும் பிரதான சவால் தேவையான தொழிலாளர்களைத் தேடுவதும் அதற்குத் தேவையான ஊழியத்திற்காக அதிக செலவு செய்ய வேண்டியிருப்பதுமாகும். அதற்குத் தீர்வுகளை வழங்கும் நோக்கில் தேங்காய பறித்தல், தேங்காய் உரித்தல் ஆகிய செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்ளவதற்குப் பொருத்தமான இயந்திரங்களையும் கருவிகளையும் அறிமுப்படுத்துவதற்கு எதிர்பாரக்கப்படுகின்றது. அதன் போது தேங்காய் உரிக்கும் செயற்பாட்டுக்காக சிறிய மற்றும் பாரியளவிலான இயந்திர உருவாக்கப்பட்டு வருவதுடன் அவற்றுக்கான களப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. தேங்காய் பறிப்பதற்காக அறிமுகப்பட்டுத்தப்பட்ட தேங்காய் பறிக்கும் கொழுக்கி தொடர்பான களப் பரிசோதனைகள் ஏற்கனவே நடாத்தப்பட்டுள்ளன.


### 6.2.3 புகை மீன் தயாரிக்கும் அடுப்பு



தற்போது சந்தையில் காணப்படும் புகை மீனின் விலை அதிகமாகும். அவற்றில் பொலிசைக்கிலின் அரோமட்டிக் ஹைட்ரோகாபன் (PAH ) அதிகளவில் காணப்படுவதனால் அவ் உற்பத்திகளின் தரம் திருப்திகரமானதாக இல்லை. இது NARA நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்திட்டமாகும். இதன் மூலம் புகை மீனின் தரத்தையும் பயனுறுதித்தன்மையையும் மேம்படுத்துவதன் ஊடாக செலவைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அடுப்பின் கொள்ளளவு 25 கிலோ கிராம் ஆகும். புகை மீன தயாரிக்கும் அடுப்பு ஒன்று ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதுடன் மற்றுமொரு அடுப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

### 6.2.4 நோயாளிகளின் காயங்ளுக்கான சிகிச்சையாக உயர் அழுத்தம் கொண்ட ஒட்சிசன் கூடொன்றை உருவாக்கும் ஆய்வுச் செயற்திட்டம்.



நீரிழிவு அல்லது நாட்பட்ட நோய்களால் ஏற்பட்ட காயங்களுக்கு உயர் அழுத்தம் கொண்ட ஒட்சிசன் கூட்டுச் சிகிச்சை ஏற்பட்ட ஒரு சிகிச்சை முறையாகும். ஏனைய நாடுகளில் மிகவும் பிரபல்யமான ஒரு முறையாக இது உள்ள போதிலும் இலங்கை பிரபல்யமானதாக இல்லை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கூடுகளின் விலை அதிகமாக உள்ளமை இதற்குக் காரணமாகும். இச்செயற்திட்டம் வைத்தியர்களின் கோரிக்கையின் பேரில் ஆரம்பிக்கப்பட்டதுடன் $O_2$ (ஒட்சிசன்) கூடொன்றை அறிமுகப்படுத்துவதற்காக இந்த ஆய்வுச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் உற்பத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 6.2.5 சுவர் நிர்மாணிப்பதற்கான இயந்திரத் தொகுதியொன்றை உருவாக்குதல்



கட்டடங்களின் சுவர்களை நிர்மாணிப்பதற்கான மூலப் பொருட்களுக்காகவும் தொழிலாளர்களின் கூலிக்காகவும் பாரியளவில் செலவு ஏற்படுகின்றது. இதற்காக நேர்ட் நிறுவனம் காரையிடலுக்குத் தேவையான சீமெந்து, கற் தூள் கலவையினால் நிர்மாணிக்கப்படும் க்ளிப்ஃபோம் சுவர்த் தொழில்நுட்ப அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் நிர்மாணத் துறையில் காணப்படும் குறைபாடுகள், பலவீனங்கங்களின் காரணமாக எதிர்பார்த்த விதத்தில் அத்தொழில்நுட்பம் பிரபல்யமடையவில்லை.

இது தொடர்பில் நடாத்தப்பட்ட விரிவான ஆய்வுகளின் பின்னர் க்ளிப்ஃபோம் சுவர்களை நிர்மாணிப்பதற்காக ஹைட்ரோலிக் தொகுதியினால் இயங்கும் இயந்திரத் தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அவ் இயந்திரத் தொகுதியின் ஆய்வுக் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு உற்பத்தியை மேம்படுத்தும் செயற்பாடுகள. ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 6.2.6 அரைத் தன்னிச்சையான அப்பம் தயாரிக்கும் இயந்திரத்தை மேம்படுத்துதல்.



அப்பம் தயாரிக்கும் செயற்பாட்டின் பயனுறுதித் தன்மையையும் அப்பங்களின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக றுஹுணுப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்திட்டம் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் அத்தொழில்நுட்பத்தை உரிய ஆட்களுக்கு வழங்கும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. இந்த இயந்திரத்தின் மூலம் ஒரு மணித்தியாலத்தில் 350 அப்பங்களைத் தயாரிக்க முடியும்.

### 6.2.7 மேம்படுத்தப்பட்ட பால் கறக்கும் இயந்திரத்தை அறிமுப்படுத்துதல்

இயந்திரத்தின் உற்பத்திச் செயற்பாடுகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளதுடன் களப் பரிசோதனைக்காக விவசாயிகளுக்கு 10 இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் செய்யப்பட்ட வேண்டிய மாற்றங்களும் மேம்பாடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அந்த மாற்றங்களும் மேம்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த இயந்திரத்தின் மூலம் பால் கறக்கும் செயற்பாடுகளின் உற்பத்தி விரயத்தை குறைக்க முடிவதுடன் செயற்பாடுகளின் வேகத்தை அதிகரித்துக் கொள்ளவும் முடியும்.

### 6.2.8 அரைத் தன்னியக்கமான மருந்து இடும் உறை உற்பத்தி இயந்திர அபிவிருத்தி



மருந்து இடும் உறைகள் உற்பத்தியாளரிடமிருந்து கிடைக்கும் கோரிக்கையின் பேரில் இச்செயற்திட்டம் இறுதிக் கட்டத்தில் உள்ளது. இச்செயற்திட்டம் தற்போது அதன் இறுதிக் கட்டத்தில் உள்ளது. இந்த இயநதிரத்தின் எதிர்பார்க்கப்படும் வெளியீட்டு அளவு ஒரு மணித்தியாலத்தில் 1000 உறைகளாகும். அவற்றின் அளவு 70 மி.மீ x 95 மி.மீ ஆகும்.

### 6.2.9 கட்டட முகாமைத் தொகுதிகளுக்கான தரவுகளைச் சேகரிக்கும் உலகளாவிய மொடியூலை அறிமுப்படுத்துதல் - Universal Data Acquisition Module

கட்டட முகாமைத் தொகுதியின் வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் கைத்தொழில் தொகுதிகளைத் தானியக்கமாக மாற்றும் நோக்கிலும் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்தொகுதியை உருவாக்கும் செயற்பாடுகள ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் அதனைக் கைத்தொழில்களில் பயன்படுத்துவதன் பொருத்தப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே களப் பரிசோதனைகளுக்குத் தேவையான செயற்பாடுகள மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6.2.10 “L” வடிவ வலுவூட்டப்பட்ட - தயாரித்த கொங்கிரீட் படிகளை அறிமுப்படுத்துதல்




பாரம்பரியத் தொழில்நுட்பங்களின் ஊடாக வீடுகளில் நிர்மாணிக்கப்படும் மாடிப் படிகளுக்காக அதிக பணம் செலவாவதனால் “L” தயாரிக்கப்பட்ட கொங்கிரீட் மாடிப் படிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆய்வுச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு முன்னோடிச் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாடிப் படிகளை நிர்மாணிக்கின்ற போது 25% இற்கு மேற்பட்ட பொருளாதாரப் பயன்களை நுகர்வோரினால் பெற முடியும்.

மாடிப் படிகளின் ஏறும் பகுதி மூடப்பட்டிருத்தல், கவர்ச்சியான வடிவம், உறுதித்தன்மை என்பன உயர் மட்டத்தில் காணப்படுகின்றன.

## 6.2.11 சிக்கனமான கூரை யன்னல் சட்டங்களை நிர்மாணித்தல்




பலகைகளுக்குச் செலவாகும் அதிக விலைக் குறைக்கும் நோக்கில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது ஆய்வுச் செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் முன்னோடிச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 6.2.12 சீமெந்து நிலையான அமுக்கம் கொண்ட மண் கற்களினால் (CSCSB) நிர்மாணிக்கப்பட்ட சுவர்களுக்கான பெயிண்ட் பூச்சுக்களை அறிமுப்படுத்துதல்




(CSCSB) அச்சுக் கற்களினால் அமைக்கப்பட்ட சுவர்களுக்கு பெயிண்ட் பூசுவதற்கு சந்தையில் காணப்படும் பெயிண்ட் வகைகளைப் பயன்படுத்துவது மிகவும் செலவு அதிகமானது என்பதுடன் CSCSB யின் இயற்கைத் தோற்றமும் குறைவடையக் காரணமாக அமைகின்றது. இதற்காக விசேடமான பெயிண்ட் வகையொன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முன்னோடிச் செயற்திட்டமும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### 6.2.13 வாகனத் தரிப்படங்களில் வாகனங்களை நிறுத்தி வைக்க முடியுமான இடவசதிகளை பிரதான நுழைவாயிலிலேயே அறிந்து கொள்வதற்கான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்



தற்போது பொது இடங்களில் (சந்தைத் தொகுதிகள் மற்றும் அலுவலகங்கள் போன்றவை) வாகனங்களை நிறுத்தும் போது சாரதிகள் எதிர்நோக்கும் சிரமங்களைத் தவிர்ப்பதற்காக இந்த ஆய்வு நடாத்தப்பட்டது. ஆய்வுச் செயற்பாடுகளும் களப் பரிசோதனைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த முன்னோடிச் செயற்திட்டம் டயலொக் கம்பனியின் அலுவலக வாகனத் தரிப்பிடத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. புதிய தொழில்நுட்பத்திற்கு மூலம் வெற்றிடமாகவுள்ள வாகனத் தரிப்பிடத்தை பிரதான நுழையில் இருந்தே அறிந்துகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 6.3 முன்னோடிச் செயற்திட்டம்

நேர்ட் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட உற்பத்தி இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்ப முறைகள் என்பவற்றை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல், மாதிரிகளை உருவாக்குதல் மற்றும் மென்மேலும் கற்றல் செயற்பாடுகள் என்பவற்றுக்காக பின்வரும் முன்னோடிச் செயற்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டன.

### 6.3.1 நடைபாலங்கள் அமைத்தல்





ஃபரோ சீமெந்துத் தொழில்நுட்பம் முன் வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் தொழில்நுட்பம் என்பவற்றின் மூலமான 2 நடைபாலங்கள் நேர்ட் நிறுவனத்தின் தொழில்நுட்பப் பூங்காவினுள் மீள்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன.

### 6.3.2 குறைந்த பரப்பைக் கொண்ட கழிவுநீர்த் தொகுதி



சிறியளவிலான வாகனம் கழுவும் நிலையயங்களின் கழிவுநீர் முறையாகச் சூழலுக்கு விடுவிக்கப்படாமையினால் ஏற்படுகின்ற சூழல் பிரச்சினைகளைக் குறைப்பதற்காக இந்த கழிவுநீர்த் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டது. முன்னோடிச் செயற்திட்டமாக ஏகலை பிரதேசத்திலுள்ள வாகனம் கழுவும் நிலையைமொன்றில் இந்த கழிவுநீர் சுத்தீகரிப்புத் தொகுதி நிறுவப்பட்டு முன்னோடிச் செயற்திட்டம் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.

## 6.4 நிர்மாண ஆலோசனைச் சேவை வழங்கல்


### 6.4.1 மருத்துவ உத்தியோகத்தர் கட்டட நிர்மாணம் - வாத்துவை




சிக்கனமான கட்டடத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இரண்டு கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஆலோசனைச் சேவைகள் வழங்கப்படவுள்ளன. தற்போது திட்டமிடல் பூரத்தி செய்யப்பட்டு விலைமனுக் கோரலுக்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆலோசனைச் சேவையின் பெறுமதி 2.8 மில்லியன் ரூபா

வாடிக்கையாளர்: பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்

### 6.4.2 தூபி நிர்மாணம் - விமல மகா விகாரை, கொட்டுகொடை



கொங்கிரீட் சலாகைகள் மீது உட்பகுதி வெற்றிடமான கூட்டுக்கு மறைப்பு ஒன்றை மாத்திரம் பயன்படுத்தி சைத்தியங்ககளை நிர்மாணிப்பது இதன் குறிக்கோளாகும். திட்டமிடல் வேலைகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன.

ஆலோசனைச் சேவையின் பெறுமதி 113,000.00 ரூபா

### 6.4.3 2 தகனக்கிரியை மண்டபங்களை நிர்மாணிக்கப்பதற்கு ஆலோசனைச் சேவை வழங்குதல் / அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்ட 02 தகனக்கிரியை மண்டபங்கள்

ஆலோசனைச் சேவைக் கட்டணம்: – 4,00,000/- ரூபா ஏற்கனவே செயற்திட்டத்தின் 75% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## 6.5 பொறியியல் திட்டமிடல் மற்றும் புத்தாக்கங்களுக்குத் தேவையான சேவைகள வழங்குதல்

இந்த சேவைகள் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படும். பின்வருவன அத்தகைய பிரதான சேவைகளாகும்.

- சிக்கலான அச்சுக்களைச் சரியான முறையில் திட்டமிடுதல் மற்றும் உற்பத்தி செய்தல்.
- அச்சுக்களை உருவாக்குதல் மற்றும் திருத்தங்கள் செய்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திக் கைத்தொழில்களுக்கான ஆலோசனை மற்றும் உதவிச் சேவைகளை வழங்குதல்.

மேற்குறித்த சேவைகளுக்காகக் கிடைத்த வருமானம் கீழே காட்டப்பப்பட்டுள்ளது.

| **சேவை** | **பெறுமதி (மில்லியன் ரூபா)** |
|---|---|
| - திட்டமிடல் மற்றும் உற்பத்தி செய்தல் | - 1.41 |
| - ஆக்கக்கூறுகளை உற்பத்தி செய்தல் | - 0.67 |
| - பரீட்சிப்பதற்காக | - 1.23 |
| - பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக | - 0.27 |

## 6.6 கைத்தொழில்களுக்கான சேவைகள் வழங்குதல்

6.6.1 பின்வரும் சேவைகளுக்காக கைத்தொழில் துறையில் ஈடுபட்டு சேவைபெறுநர்களின் கோரிக்கையின் பேரில் சேவை வழங்கல் மேற்கொள்ளப்பட்டது.

- எரிசக்தி சார்ந்த சேவைகள்
- எரிசக்திக் கணக்காய்வுச் சேவைகள்
- வினைததிறன்மிக்க எரிசக்திப் பயன்பாடுத் தொகுதிகளை நிர்மாணித்தல்.
- கைத்தொழிற் செயன்முறைகளை மேற்பார்வை செய்தல்.
- பொய்லர்களைப் பகுப்பாய்வு செய்தலும் உகப்பாக்கம் செய்தலும்
- பொய்லர்களின் tunning தொகுதிகளை உருவாக்குதல்
- குளிரூட்டித் தொகுதிகளை உருவாக்குதல்

- ISO 50000 தரச் சான்றிதழ்களின் கீழ் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- எரிசக்தி முகாமை மற்றும் பாதுகாப்புத் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- சூழல் நட்புறவான சேவைகளை வழங்குதல்
- சூழல் வளி நிலைமைகளைப் பரிசோதனை செய்தல்
- கைத்தொழில் உமிழ்வுகளையும் தூசுகளையும் கட்டுப்படுத்தும் தொகுதி உருவாக்குதல்.
- ஒலி அளவீடுகளையும் அவற்றைக் கட்டுப்படுத்தும் தொகுதிகளையும் திட்டமிடுதல்
- சுற்றாடல் முகாமை முறைமைகள் தொடர்பான அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- கழிவுநீர்ப் பரிசோதனை மற்றும் கழிவுநீர் சுத்தீகரிப்புத் தொகுதிகளை வடிவமைத்தல்

### 6.6.2 எரிசக்தி மற்றும் சுற்றாடல் முகாமைத் தொகுதிகளின் ஊடாக கைத்தொழில்களுக்காகச் செய்யப்பட்ட சேவைகளின் பெறுமதி

| **செயற்பாடு** | **பெறுமதி (ரூபா மில்லியன்)** |
|---|---|
| - சுற்றாடல் ஆய்வுகூடத் தொகுதி | - 1.34 |
| - கைத்தொழில்களுக்கான சுற்றாடல் | - 0.71 |
| பிரச்சினைகளைத் தீர்த்தல் | - 4.62 |
| - சட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்கிய முறையில் சுற்றாடல் அவதானிப்பு மற்றும் சேவைகளை வழங்குதல் | - 5.7 |
| - பொய்லர்களின் செயற்பாடுகளை மதிப்பீடு | - 1.2 |
| செய்தலும் அவற்றிலிருந்து வெளியேறும் | - 0.18 |
| வாயுக்களைப் பகுப்பாய்வு செய்தலும் | - 0.28 |
| - கைத்தொழிற் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் ஆலோசனைச் சேவைகளும் | |
| - பயிற்சி நிகழ்ச்சிகள் | |
| - எரிசக்திக் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல் | |

## 6.7 நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களின் அடிப்படையில் வர்த்தகச் செயற்பாடுகள்

### 6.7.1 உள்நாட்டு ஆயுர்வேதத் துறைக்கான இயந்திர உபகரணங்களைத் தயாரித்தல்

நேர்ட் நிறுவனம் ஆயுர்வேதத் துறைக்கான இயந்திர உபரகணங்கள் பலவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆயுர்வேத மருந்துகளுக்கு அவசியமான இலைகளையும் விதைகளையும் தூளாக்கும் இயந்திரங்களை உற்பத்தி செய்து ஹைட்ரோலிக் ஜக்குகளைப் பயன்படுத்தி இயக்கப்படும் சாறுகளை அகற்றும் இயந்திரங்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் உள்நாட்டு வைத்தியர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

*ஆயுர்வேதத் துறைக்கான இயந்திர உபகரணங்களைத் தயாரித்தல்*

| இயந்திரத்தின் பெயர் | பூர்த்தி செய்யப்பட்ட இயந்திரங்களின எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| ஹைட்ரோலிக் ஜக்குகளைப் பயன்படுத்திச் செயற்படும் எண்ணெய்/ சாறு பிழியும் இயந்திரம் | 10 | 645,000/- |
| இலைகளையும் விதைகளையும் தூளாக்கும் இயந்திரம் | 07 | 408,000/- |
| மரவள்ளி அரியும் இயந்தரம் | 01 | 30,000/- |

### 6.7.2 புடவைகளின் தரத்தைப் பரிசோதிக்கும் நோக்கில் கைத்தறி நெசுக் கைத்தொழில்லுக்கான இயந்திரமொன்றை அறிமுப்படுத்துதல்



கைத்தறி நெசவுக் கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படும் புடவைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான இயந்திரமொன்று மேல் மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சின் கோரிக்கையின் பேரில் உற்பத்தி செய்யப்பட்டது.

இயந்திரத்தின் நிர்மாணச் செயற்பாடுகள ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளதுடன் இஅதன் பெறுமதி 798,000/- ஆகும். இப்பணி பூர்த்திசெய்யப்பட்டு மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 6.8 ஆய்வுகூடச் சேவைகள்

கைத்தொழில் மற்றும் நிர்மாணத் துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப இந்த ஆய்வுகூடச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 6.8.1 சிவில் பொறியியல் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூடப் பரிசோதனைகள்

ஆய்வுகூடப் பரிசோதனைகள்

| பரிசோதனையின் பெயர் | மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
|---|---|---|
| - கொங்கிரீட் செங்கற்களின் அமுக்கத்தின் உண்மையான சக்தியை அளவிடுதல். | 468 | 2,45,700/- |
| - சீமெந்துக் செங்கற்களின் அமுக்கத்தின் உண்மையான சக்தியை அளவிடுதல் | 60 | 31,500/- |
| - மண் செங்கற்களின் அமுக்கத்தின் உண்மையான சகத்தியை அளவிடுதல் | 42 | 22,050/- |
| - நிலத்தில் பரப்பும் கற்களின் அமுக்கத்தின் உண்மையான சகத்தியை அளவிடுதல் | 350 | 183,750/- |
| - கம்பிகளின் சக்தியைப் பரிசோதித்தல் | 42 | 50,400/- |

### 6.8.2 மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியல் திணைக்களத்தின் ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் மற்றும் பரிசோதனைகளின் பெறுமதிகள்

| பரிசோதனையின் பெயர் | மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| - விளக்குப் பரிசோதனைகள் | 225 | 1.3 |
| - பற்றரிப் பரிசோதனைகள் | 06 | 0.15 |
| - அளவுத் திருத்தம் செய்தல் | 23 | 0.15 |

## 6.9 பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள்

### 6.9.1 நேர்ட் நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்

கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் அறிவை மேம்படுத்துவதற்காகவும் தொழில்நுட்பங்களைப் பிரபல்யப்படுத்துவதற்கக பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. அப்பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

நேர்ட் நிறுவனத்தின் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுடபங்கள் தொடர்பான நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்.

| நிகழ்ச்சியின் பெயர் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
|---|---|---|---|
| - சீமெந்து நிரந்தர அமுக்கம் செய்யப்பட்ட மண் கல் உற்பத்திக்கான பயிற்சிநெறி | 06 | 85 | 322,000/- |
| - கட்டட நிர்மாணத்திற்கான செலவுப் பயனுறுதி வாய்ந்த தொழில்நுட்பத்தை (நேர்ட் தொழில்நுட்பம்) வழங்குவதற்காக வழங்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் | 04 | 75 | 44.000/- |
| - முன்வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் கட்டடப் பொருட்கள் நிர்மாணம்.<br>நேர்ட் நிறுவனத்தினால் ஊக்குவிப்படும் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான சுயதொழில் வாய்ப்பு உருவாக்கம் பற்றிய அறிவூட்டல். | 04 | 200 | 100,000/- |

| நிகழ்ச்சியின் பெயர் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
|---|---|---|---|
| - நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை மற்றும் புத்தாக்கவியலாளர்களின் ஆணைக்குழுவுடன் இணைந்து மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் எரிசக்தி முகாமை தொடர்பான அறிவை மேம்படுத்துதல். | 04<br>04 | 210<br>146 | 100,000/-<br>100,900/- |
| - கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் விஞ்ஞான ஆசிரியர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதற்கான விசேட நிகழ்ச்சிகள் | 08 | 343 | 44,000/- |

### 6.9.2 கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் அறிவ ம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சிகள்

கைத்தொழில்களின் பயிற்சித் தேவைகளை இனங் கண்டதன் பின்னர் அக் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆட்களின் உரிய துறைசார் அறிவை மேம்படுத்துவதற்காகப் பல பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

| பயிற்சி நிகழ்ச்சியின் பெயர் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்கேற்றோர் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
|---|---|---|---|
| - கட்டட நிர்மாணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் | 01 | 31 | 102,415/- |
| - முயற்சியாண்மை அபிவிருத்தி | 01 | 21 | 27,810/- |
| - உயிர் வாயு அலகுகள் அமைத்தல், தொழிற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | 01 | 13 | 71,500/- |
| - கைத்தொழில் பம்பிகளின் கோட்பாட்டு மற்றும் நடைமுறைசார் காட்சிப் பொருட்கள் | 01 | 23 | 158,000/- |
| - தகனக்கிரியை மண்டபங்களின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு | 01 | 60 | 170,000/- |
| - வரையறுத்த அளவிலான மாதிரிகளை உருவாக்குதலும் பகுப்பாய்வு செய்தலும் | 01 | 08 | 48,000/- |
| - இரசாயனப் பொருட்களிலிருந்து பாதுகாப்புப் பெற்தல் மற்றும் அபாயகரமான இரசாயனங்களைப் பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தி வைத்தல் | 01 | 53 | 189,000/- |
| - Programmable Logic Control Programme | 11 | 140 | 709,322/- |
| - Industrial – 1 மற்றும் கட்டுப்பாட்டுத் தொகுதி | 02 | 30 | 135,000/- |
| - கைத்தொழில் உள்ளீடுகளுக்காக வாயுவைப் பயன்படுத்துதல் | 04 | 50 | 250,000/- |
| - Forklift களைப் பராமரித்தல் | 02 | 43 | 225,000/- |
| - மோட்டார் வாகன தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சிகள் | 01 | 05 | 30,000/- |

## 6.10 தொழில்நுட்பங்களைப் பிரபல்யப்படுத்தும் செயற்பாடுகள்

நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட உற்பத்திகளையும் தொழில்நுட்பங்ளையும் பிரபல்யப்படுத்துவது எமது பிரதான பொறுப்ப்பாகும். எனினும் இது வரையில் மேற்கொள்ளப்பட்ட பிரபல்யப்படுத்தும் செயற்பாடுகள் போதுமானவையாக இல்லை. அதற்காக, பத்திரிகைக் கட்டுரைகள், ஆய்வுப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை நடாத்துதல், கண்காட்சிகளில் பங்கேற்றல் என்பன மேற்கொள்ளப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- டெக்னோ கண்காட்சி, இலங்கையைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சி உள்ளிட்ட தேசிய மட்டத்திலான 11 கண்காட்சிகளில் பங்கேற்றமை.
- தினமின மற்றும் தருணி பத்திரிகைகள் உள்ளிட்ட தேசிய மட்டத்திலான பத்திரிகைகளில் 15 கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.
- ரூபவாஹினியிலும் சுயாதீன தொலைக்காட்சியிலும் 4 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- நேர்ட் தொழில்நுட்பப் பூங்காவில் “திறந்த நாள்” கண்காட்சியொன்று நடாத்தப்பட்டது. அது பொது மக்களுக்கு எதுவிதக் கட்டணமும் இன்றி காட்டப்பட்துடன் அதில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அதில் பொது மக்களின் வீடமைப்பு எரிசக்தித் துறையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கட்டட கிளினிக் ஒன்றும் எரிசக்தி கிளினிக் ஒன்றும் நடாத்தப்பட்டன.

## 6.11 நேர்ட் தொழில்நுட்ப வழங்கல் செயற்பாடுகள்

2016 ஆம் ஆண்டில் தொழில்முய்றியாளர்களுக்காக தொழில்நுட்ப வழங்கல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் புதிய தொழில்நுட்பங்களுக்குக் காப்புரிமைகளுக்கு விண்ணப்பித்தல் மேற்கொள்ளப்பட்டது.

### 6.11.1 தொழில்நுட்ப வழங்கல் தொடர்பான விபரங்கள்

**தொழில்நுட்ப ஒப்படைப்பு**

| நடாத்தப்படும் தொழில்நுட்பங்கள் | தொழில்நுட்பம் ஒப்படைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| செலவுப் பயனுறுதிவாய்ந்த கட்டட நிர்மாணத் தொழில்நுட்பம் | 11 |
| அமுக்கப்பட்ட சீமெந்தினால் உறதியாக்கப்பட்ட மண் செங்கல் உற்பத்தி (CCSB) | 01 |
| CCSB செய்யும் உபகரணங்கள் (கையினால் இயக்கக்கூடியவை) | 01 |
| ஃபெரோ சீமெந்தினால் செய்யப்பட்ட நடைபாலங்கள் நிர்மாணித்தல் | 01 |
| முன் வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் நடை பாலங்கள் நிர்மாணித்தல. | 01 |
| முன்வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் சலாகைகளின் நிர்மாணம். | 01 |

### 6.11.2 தொழில்நுட்பங்களுக்காக வழங்கும் வருடாந்த உரிமப் பத்திரங்களைப் புதுப்பித்தல்

அடுத்த வருடத்திற்கான நேர்ட் நிறுவனத்தின் உரிமப்பத்திரப் பெறுநர்களாகத் தமது கைத்தொழிலைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான உரிமப்பத்திரங்களைப் புதுப்பிப்பது அவசியமாகும். 2016 ஆம் ஆண்டிற்கான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தொழில்நுட்பம் | பதிவு செய்த உரிமப் பத்திரம்பெற்றவர்கள் எண்ணிக்கை |
|---|---|
| - செலவுப் பயனுறுதிவாய்ந்த கட்டட நிர்மாணத் தொழில்நுட்பம்<br>- சுவர்களை நிர்மாணிப்பதற்கான CCSB தொழில்நுட்பம் | - 32<br>- 01<br>- 04 |

| தொழில்நுட்பம் | பதிவு செய்த உரிமப் பத்திரம்பெற்றவர்கள் எண்ணிக்கை |
|---|---|
| - CCSB உற்பத்தி இயந்திர உற்பத்தி | - 01 |
| - காய்கறிகளில் நீர் அகற்றும் இயந்திர உற்பத்தி | - 05 |
| - முன் வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் முற்றம் அமைத்தல் | - 06 |
| - தகனக்கிரியை மண்டபங்கள் நிர்மாணித்தல் | - 06 |
| உயிர் வாயு அலகுகள் நிர்மாணித்தல் | - 01 |
| - உயிர் வாயுவின் மூலம் சோறு சமைத்தல் | - 01 |
| - மரமுந்திரிகை உலர்த்துதல் சூரிய வெப்பமேற்றல | - 02 |

### 6.11.3 காப்புரிமை உரிமப்பத்திரங்களுக்கு விண்ணப்பித்தல்

2016 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய தொழில்நுட்பங்களின் காப்புரிமைப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது.

| உரிமப் பத்திர இலக்கம் | உரிமப் பத்திரத்துக்கு விண்ணப்பித்த திகதி | |
|---|---|---|
| 18639 | நீர்க் கட்டுப்பாட்டு வான் கதவுகள் | 2016.02.11 |
| 18792 | மரவள்ளி அரியும் இயந்திரம் | 2016.05.16 |
| 18904 | கழிவுநீர் சுத்தீகரிப்புத் தொகுதி | 2016.07.28 |
| 18967 | நெல் செய்கையில் காட்டுச் செடிகளை அகற்றும் இயந்திரம் | 2016.09.07 |
| 19102 | பசும் தேயிலைக் கொழுந்துகளின் மேற்பரப்பு ஈரலிப்பை அளவிடும் உபகரணம் | 2016.11.30 |

# 07. நலனோம்பல் மற்றும் சமய விவகாரங்கள்

நிறுவனப் பதவியணியின் தனிநபர் தொடர்புகள், ஒத்துழைப்பு, குழு உணர்வு, நிறுவனத்தின் பொதுச் செயற்பாடுகளில் காட்டும் அர்ப்பணிப்பு போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்கில் ஊழியர் நலன்புரி மற்றும் சமயச் செயற்பாடுகள் தொடர்பிலும் இந்நிறுவனம் விசேட கவனம் செலுத்துகின்றது. அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டில் நிலையத்தின் நலன்புரிச் சங்கத்தினாலும் சமயங் சங்கங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

## 7.1 நலன்புரிச் சங்கம்

2016 ஆம் ஆண்டில் நிலையத்தின் நலன்புரிச் சங்கத்தினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. நிறுவனத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவரான வித்யாஜோதி ஏ.என்.எஸ். குலசிங்ஹ அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு 2016.11.28 ஆந் திகதி நிலையத்தில் இரத்த தான நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.
2. 2016.11.19 ஆந் திகதி நேர்ட் நிலையத்தின் பதவியணியினரின் 5 ஆந் தர புலமைப்பரிசியில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்குதல்.
3. நேர்ட் ஊழியர் குழாத்தினதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினதும் பங்கேற்புடன் 2016.12.29 ஆந் திகதி ஒன்றுகூடல் ஒன்று நடாத்தப்பட்டதி.

## 7.2 சமயச் சங்கங்கள்

பௌத்த சங்கம் மற்றும் கத்தோலிக்கச் சங்கம் ஆகிய இரண்டு சங்கங்களும் நிலையத்தினுள் சமயச் செயற்பாடுகள் தொடர்பில் முன்னின்று செயற்படுகின்றன. நிறுவனத்தின் ஊழியர்களின் ஆன்மதிக மற்றும் உளவில அபிவிருத்திக்காகப் பல்வேறு நிகழச்சிகள் இச்சங்கங்களின் தலைமையில் மேற்கொள்ளப்படுகின்றன. நிலையத்தின் அனைத்து ஊழியர்களும் இச்சங்கங்களில் ஒன்றில் தன்னார்வமாக அங்கத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அச்சங்கங்கள் 2016 ஆம் ஆண்டில் பின்வரும் சமய மற்றும் சமுக செயற்பாடுகளில் ஈடுபட்டன.

### 7.2.1 பௌத்த சங்கம்

- 2016.01.02 ஆந் திகதி நிலையத்தின் புது வருடச் செயற்பாடுகள் ஆரம்பித்த முன்னிட்டு பிரித் பாராயணம் செய்யும் நிகழ்ச்சியொன்றை நடாத்தியது.
- கம்பஹா பஹலயாகொட செத் செவன சந்தஹம் விகாரையின் விகாராதிபதி, பஹலயாகொட ஸ்ரீ ஸ்சுவர்ணபாலி வித்தியாலயத்தின் பிரதி அதிபர் கவிமணி காவிய சிரோமணி அதி வணக்கத்துக்குரிய சன்னஸ்கம புத்தப்பிரிய தேரர் அவர்களும் அலவதுகொடை சந்தகிரி விகாரையின் வசிக்கும் கண்டி கிங்ஸ்வூட் வித்தியாலயத்தின் ஆசிரியர் அதி வணக்கத்துக்குரிய அலவதுகொடை மேதவா தேரர் ஆகியோரினால் நடாத்தப்பட்ட யுகாசன கவிதை தர்ம உரை 2016.01.29
- பொசன் போயா தினத்தை முன்னிட்டு 2016.06.16 ஆந் திகதி ஜா எல ஜயந்தி வித்தியாலயத்தின் பிரதி அதிபர் வணக்கத்துக்குரிய கிம்புலாப்பிட்டி விமலானந்த தேரர் அவர்களின் சுமதுர தர்ம உரியொன்றை நடாத்துதல்.
- 2016.10.25 ஆந் திகதி ஜா-எலை, வலிகம்பிட்டி ஜயவர்தன சிறுவர் இல்லத்தின் பிள்ளைகளுக்கான பகலுணவும் அன்பளிப்புக்களும் வழங்குதல்.

### 7.2.2 கத்தோலிக்கச் சங்கம்

- நேர்ட் நிறுவனத்தின் ஊழியர் குழாத்தினரதும் அவர்களின் குடும்பங் அங்கத்தவர்களினதும் பங்கேற்புடன் 2016.09.24 மற்றும் 25 ஆம் திகதிகளில் மடு தேவாலயத்துக்கு யாத்திரை மேற்கொண்டமை.
- நிறுவனத்தில் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற நத்தார் தேவ ஆராதனை அருட்தந்தை அன்டன் ஜயமான்ன அவர்களினால் 2016.12.20 ஆந் திகதி நிலைய வளவினுள் நடாத்தப்பட்டது.

## 08. 2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய சொத்துக்கள்/ உரிமையாளர்மை மாற்றங்கள்

(நாணய அலகு – ரூபா)

| | 2016 | மீளாய்வுசெய்யப்பட்டது 2015 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் அதற்குச் சமனானவைகள் | 95,484,593.69 | 105,890,568.07 |
| வியாபாரக் கடன் பட்டோர் | 27,969,438.62 | 14,788,493.00 |
| கையிருப்பு | 8,195,538.40 | 8,380,528.01 |
| முற்பணம் | 701,155.98 | 615,504.27 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 46,912,749.13 | 63,154,210.32 |
| | 179,263,475.82 | 192,829,303.67 |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | |
| ஆதனங்கள் பொறித் தொகுதிகளும் | 580,620,198.75 | 604,186,443.92 |
| ஏனைய அருவச் சொத்துக்கள் | 312,420.45 | 247,480.45 |
| ஏனைய நடைமுயல்லாச் சொத்துக்கள் | 25,651,942.83 | 25,041,481.58 |
| | 606,584,562.03 | 629,475,405.95 |
| மொத்தச் சொத்துக்கள் | 785,848,037.85 | 822,304,709.62 |
| **பொறுப்புக்கள்** | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| வியாபாரம் மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவைகள் | 33,877,432.09 | 43,496,287.61 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | 33,877,432.09 | 43,496,287.61 |
| **நடமுயல்லாப் பொறுப்புக்கள்** | | |
| பாதுகாப்பான வைப்புக்கள் | 98,094,019.75 | 96,421,087.25 |
| | 6,200.00 | 7,200.00 |
| | 98,100,219.75 | 96,428,287.25 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 131,977,651.84 | 139,924,574.86 |
| தேறிய சொத்துக்கள் | 653,870,386.01 | 682,380,134.76 |
| **தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை** | | |
| தவறிய வருமானங்கள் | 103,962,903.00 | 120,285,393.23 |
| அரசாங்கத்தின் மூலதனக் கொடைகள் | 250,560,299.26 | 257,002,660.64 |
| மீள்கணக்கிடப்பட்ட ஒதுக்கம் | 535,275,831.83 | 535,275,831.83 |
| திரட்டிய மிகை/(பற்றாக்குறை) | (235,928,648.08) | (230,183,750.94) |
| **மொத்த தேறிய சொத்துக்ககள்/ உரிமையாண்மை** | 653,870,386.01 | 682,380,134.76 |

| | | |
|---|---|---|
| பொறி. டபிள்யு.ஜே.எல்.எஸ்.பெர்னாண்டோ<br>தலைவர் | பொறி. டி.டி.ஏ. நாமல்<br>பணிப்பாளர் நாயகம் | டி.வீ.எஸ். பெரேரா<br>பணிப்பாளர் நிதி |

## 09. 2016.12.31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான செலவு வகைப்படுத்தல் செயற்பாட்டு அடிப்படையிலான விரிவான விளக்கம்

| | 2016 | நாணய அலகு – ரூபா<br>*மீள் வெளியீடு 2015* |
|---|---|---|
| **வருமானம்** | | |
| *ஏனைய அரச நிறுவனங்களுடனான பரிமாற்றம்* | 231,025,150.00 | 209,954,373.00 |
| *பிற்போடப்பட்ட வருமானம்* | 53,879,815.61 | 39,230,133.16 |
| *ஏனைய வருமானம்* | 27,311,316.95 | 29,968,832.81 |
| *மொத்த வருமானம்* | 312,216,282.56 | 279,153,338.97 |
| **செலவுகள்** | | |
| *நிர்வாகச் செலவு* | 237,527,385.28 | 231,142,402.86 |
| *ஏனைய செலவுகள்* | 20,738,992.04 | 10,314,061.28 |
| *பெறுமானத் தேய்வு* | 59,600,362.75 | 39,889,214.21 |
| *நிதிச் செலவு* | 94,439.63 | 46,315.71 |
| *மொத்தச் செலவு* | 317,961,179.70 | 281,391,994.06 |
| *காலப்பகுதிக்கான மேலதிகம்/ (பற்றாக்குறை)* | (5,744,897.14) | (2,238,655.09) |

## 10. *2016.12.31* இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2016 | *(நாணய அலகு – ரூபா)*<br>*மீள் வெளியீடு 2015* |
|---|---|---|
| *தொழிற்பாடுகள் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல்*<br>*சாதாரண செயற்பாடுகளின் மூலமான மேலதிகம்/ பற்றாக்குறை* | (5,744,897.14) | (2,238,655.09) |
| ***காசல்லாத மாற்றங்கள்*** | | |
| *பெறுமானத் தேய்வு* | 59,600,362.75 | 39,889,214.21 |
| *நிச்சயமற்ற கடன்களுக்கான ஒதுக்கங்களில ஏற்பட்ட அதிகரிப்பு* | (1,042,716.03) | (52,387.81) |
| *பிற்போடப்பட்ட வருமானம் (அதிகரிப்பு/வீழ்ச்சி)* | (53,879,815.61) | (39,230,133.16) |
| *செலுத்த வேண்டிய செலவுகளில் ஏற்படட் அதிகரிப்பு /வீழ்ச்சி* | (7,913,454.27) | 8,482,434.22 |
| *ஊழியர் செலவு (அதிகரிப்பு/வீழ்ச்சி)* | (33,468.75) | 19,143,127.50 |
| *சொத்துக்கள் மற்றும் பொறிகள் விற்பனை (இலாபம்/நட்டம்)* | 1,523,208.79 | 10,205.65 |
| *ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் (அதிகரிப்பு/வீழ்ச்சி)* | 15,730,337.84 | (11,635,745.80) |
| *கிடைப்பனவுகளின் (அதிகரிப்பு/வீழ்ச்சி)* | (12,138,229.59) | (6,232,386.55) |
| ***தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சல்*** | (3,898,672.01) | 8,135,673.17 |
| ***முதலீட்டு செயற்பாடுகளின் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்*** | | |
| *பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு* | (37,622,266.37) | (27,798,491.11) |
| *பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனை* | - | 2,207.20 |
| ***முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்*** | (37,622,266.37) | (27,796,283.91) |
| ***நிதிச் செயற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சல்***<br>*மூலதனக் கிடைப்பனவுகள்* | 31,114,964.00 | 31,798,897.00 |
| ***நிதிச் செயற்பாடுகளின் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்*** | 31,114,964.00 | 31,798,897.00 |
| *காசு மற்றும் அதற்குச் சமனான சொத்துக்களின் தேறிய (அதிகரிப்பு/வீழ்ச்சி)* | (10,405,974.38) | 12,138,286.26 |
| *காலப் பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசு மற்றும் அதற்குச் சமனானவைகள்* | 105,890,568.07 | 93,752,281.81 |
| *காலப் பகுதியின் இறுதியில் காணப்பட்ட காசு மற்றும் அதற்குச் சமனானவைகள்* | 95,484,593.69 | 105,890,568.07 |

## 11. *2016.12.31* இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பான கூற்று

| | ரம்ப மூலதனம் | அரசாங்க மூலதனக் கொடை | திறைசேரியினால் வழங்கப்பட்ட காசு அல்லாத கொடைகள் | பிற்போடப்பட்ட வருமானம் | ஏனைய வழிகளில் கிடைத்த கொடைகள் | மீள உருவாக்கப்பட்ட மீளக் கணக்கிடப்பட்ட தொகுதி | திரட்டிய இலாபம்/ நட்டம் | மொத்த தேறிய உரிமையாண்மை | *2015.12.31* ஆந் திகதியில் மீளத் தயாரிக்கப்பட்ட மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *2015.01.01* இல் உள்ளவாறன மீதி | 1,000,000.00 | 61,378,800.39 | 43,350,000.00 | 122,461,854.77 | 119,985,089.87 | 354,564,874.91 | (227,945,095.85) | 474,795,524.09 | 494,180,401.66 |
| 2015 இன் சொத்து உரிமையாண்மையில் மாற்றங்கள் | | | | | | | | - | |
| கிடைத்த மூலதனக் கொடைகள் | | 31,798,897.00 | | | | | | 31,798,897.00 | 43,026,477.00 |
| வாகன நன்கொடைகள் | | | 7,975,000.00 | | | | | 7,975,000.00 | 9,500,000.00 |
| பிற்போடப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்பட்ட மூலதனக் கொடைகள் | | (37,053,671.62) | | (2,176,461.54) | | | | (39,230,133.16) | (53,806,701.25) |
| ஏனைய வழிகளில் கிடைத்த மூலதனம் | | | | | 28,568,545.00 | | | 28,568,545.00 | |
| காலப்பகுதிக்கான மிகை/(பற்றாக்குறை) | | | | | | | (2,238,655.09) | (2,238,655.09) | (17,016,180.49) |
| மீளக்கணக்கிடப்பட்ட தொகுதியின் மிகை | | | | | | 180,710,956.92 | | 180,710,956.92 | (1,088,472.83) |
| *2015.12.31* இல் உள்ளவாறான மீதி | 1,000,000.00 | 56,124,025.77 | 51,325,000.00 | 120,285,393.23 | 148,553,634.87 | 535,275,831.83 | (230,183,750.94) | 682,380,134.76 | 474,795,524.09 |
| ***2016 இன் உரிமையாண்மை மாற்றங்கள்*** | | | | | | | | | |
| கிடைத்த மூலதனக் கொடைகள் | | 31,114,964.00 | | | | | | 31,114,964.00 | 31,798,897.00 |
| வாகன நன்கொடைகள் | | | - | | | | | - | 7,975,000.00 |
| பிற்போடப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்பட்ட மூலதனக் கொடைகள் | | (37,557,325.38) | | (16,322,490.23) | | | | (53,879,815.61) | (39,230,133.16) |
| ஏனைய வழிகளில் கிடைத்த மூலதனம் | | | | | - | | | - | 28,568,545.00 |
| காலப்பகுதிக்கான மிகை/(பற்றாக்குறை) | | | | | | | (5,744,897.14) | (5,744,897.14) | (2,238,655.09) |
| மீளக்கணக்கிடப்பட்ட தொகுதியின் மிகை | | | | | | - | | - | 180,710,956.92 |
| *2016.12.31* இல் உள்ளவாறான மீதி | **1,000,000.00** | **49,681,664.39** | **51,325,000.00** | **103,962,903.00** | **148,553,634.87** | **535,275,831.83** | **(235,928,648.08)** | **653,870,386.01** | **682,380,134.76** |

# 12. அடிப்படைக் கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. பொதுத் தகவல்கள்

தேசிய பொறியியில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம், 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும் இந்நிலையம் 2016 ஆம் ஆண்டு முதல் விஞ்சான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சன் கீழ் தொழிற்படுகின்றது. நிலையத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், ஜா-எலை, ஏகலை, கைத்தொழில் குடியிருப்பு, 2பீ/17பி என்ற முகவரியில் அமைந்துள்ளது.

பிரதான பணிகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

- இலங்கையின் புதிய கண்டுபிடிப்பு மற்றும் நிர்மாணத் திறன்களுக்கு தைரியமூட்டி, அவற்றின் அபிவிருத்தி உதவி வழங்குவதன் மூலமும், உள்நாட்டு தொழில்நுட்ப அபிவிருத்திக்குத் தேவையான நிறுவன முறைமையை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்
- கூட்டு முயற்சிகளைப் பயனுறுதிவாய்ந்த அரச துறையினதும் தனியார் துறையினதும் பல்வேறு கைத்தொழில்களினதும் நிறுவனங்களினதும் தொழில்நுட்ப நிபுணத்துவப் பொறியியல் மற்றும் ஆய்வுத் திறன்களை ஒருங்கிணைப்பதற்கான வசதிகளைச் செய்தல்.
- நாட்டின் வளங்களுக்கும் தேசிய திட்டமிடல் குறிக்கோள்களுக்கு இணங்கிய முறையில் தொழில்நுட்ப முறைகளைச் சேர்த்தலும் அவற்றைப் பயன்படுத்துதலும்.
- தேவையான போது இலங்கையின் அரச மற்றும் தனியார் துறையிலுள்ள பொருத்தமான நிறுவனங்களுக்கு நேரடியாகவும மறைமுகமாகவும் தொழில்நுட்ப முறைகளை பரிமாற்றம் செய்வதற்கான உபாயமுறைகளைப் பரீட்சித்தலும் அந்த நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குதலும்.
- தொழில்நுட்ப முறைகளை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் மனித மற்றும் பொருள் வளங்களின் மூலம் குறிப்பாக ஊழியம் மற்றும் மூலப்பொருட்களின் மூலம் உச்ச பயனைப் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- கைத்தொழில், வர்த்தக மற்றும் வேறு நோக்கங்களுக்காக இயந்திரங்களைப் பயன்படுத்துபவர்களிடமிருந்து கோரிக்கைகள் கிடைக்குமிடத்து மாதிரி இயந்திரங்களையும் முன்னோடி இயந்திரங்களையும் சிக்கமாகத் திட்டமிடுதல், உற்பத்திசெய்தல் மற்றும் பரீட்சித்தல்.
- பொறியியல் கலை திட்டமிடல் ஆய்வு தொடர்பான தொழில்நுட்பத் தரவுகளையும் ஆவணங்களையும் சர்வதேச மற்றும் தேசிய முகவர் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தொடர்ச்சியாக ஆய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.
- அரசாங்க மற்றும் தனியார் துறை முயற்சியாண்மைக்குத் தொடர்ச்சியாக ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், நாட்டின் பொறியியல் மற்றும் கைத்தொழில் திட்டமிடலின் அடிப்படைகளையும் ஆய்வு ஆற்றல்களையும் விரிவுபடுத்துவதற்காக ஆய்வுச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்றலும் பயிற்சிச் செயற்பாடுகளை மேம்படுத்துதலும்.
- மேற்படி விடயங்களுக்கான பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

## 2. நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட அடிப்படைகள்

இதில் அடங்கியுள்ள நிதி நிலைமை தொடர்பான கூற்று, நிதிப் பெறுபேறுகள் தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று என்பன இலங்கையின் அரசாங்கத் துறை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க த் தயாரிகக்ப்பட்டுள்ளன.

நடப்பு கணக்கீட்டு வருடம் 2016.01.01. முதல் 2016.12.31 வரையான காலப் பகுதியாகும்.

### 2.2 பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்

நிலையத்தின் நிதிக் கூற்றுக்களின் நிலைமை தொடார்பான கூற்று, நிதிப் பெறுபேறுகள் தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன தொடர்ச்சியான இருப்பு மற்றும் வரலாற்று ரீதியான செலவுக் கோட்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டள்ளன.

### 2.3 கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட நாணய அலகுகள்

இந்த நிதிக் கூற்றுக்கள் மூலம் எடுத்துக் காட்டப்படும் கொடுக்கல் வாங்கல்கள், இந்த நிலையம் இயங்கும் அடிப்படைப் பொருளாதாரச் சூழல்களில் பயன்படுத்தப்படும் நாணய அலகான இலங்கை ரூபாவிலாகும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் குறிப்பிடப்படும்.

### 2.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

2015.12.31 ஆந் திகதி முடிவடைந்த காலப் பகுதிக்கான ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதன் போது நிதி நிலையைக் கூற்று, தொழிற்பாட்டுக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டு குறிப்புக்கள் என்பவற்றை நடப்புக் காலப் பகுதியுடன் ஒப்பிடக் கூடியதாக உள்ளது.

### 2.5 முக்கியமான கணக்கீடுகளை உறுதிப்படுத்துதல், மதிப்பீடு செய்தல் மற்றும் எடுகோள்கள்

இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய கொள்கைகள், சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமான, எதிர்பாராத பொறுப்புக்களை அடையாளம் காண்பது தொடர்பான முகாமைத்துவத்தை மதிப்பீடு செய்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் எடுகோள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் தொடர்பிலான நிச்சயமற்ற தன்மைகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் போதியளவு செம்மையாள செம்மையாக்கங்கள் எதிர்காலத்தில் செய்யப்படலாம். இதன் போது நிலையத்தின் எதிர்கால தொடர்ச்சியான இருப்பு மற்றும் வளங்களின் போதியளவுதன்மை தொடர்பில் முகாமைத்துவத்தினால் உரிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், நிலையத்தின் இருப்பு தொடர்பில் தாக்கம் செலுத்துகின்ற நிச்சமயற்ற நிலைமைகள் அல்லது சந்தேகங்கள் முகாமைத்துவத்திற்கு இல்லை. அதனால் தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையிலேயே நிதிக் கூற்றுக்களின் அடிப்படையிலாகும்.

## 3. சொத்துக்கள் மற்றும் பொறித் தொகுதி

### 3.1 இனங்காணல் மற்றும் மதிப்பீடு

மொத்தச் செலவு எனக் கருதப்படுவது நேரடியாகக் கொள்வனவு செய்வதுடன் தொடர்புடைய செலவுகளாகும். நிலையத்தினால் கட்டியெழுப்பப்பட்ட சொத்துக்களின் செலவாக அவற்றின் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் நிறைவேறும் மட்டம் வரையில் செய்யப்பட்ட மூலப்பொருட்கள், நேரடி ஊழியம் மற்றும் ஏனைய நேரடியாக அடையாளம் காண முடியுமான செலவுகள் கிரயமாகக் கருதப்படும். மூலதன மறுசீரமைப்புக் நிர்மாணங்களின் போது கட்டடங்களை அகற்றுவதற்கான கிரயம் மற்றும் உரிய கடன் வட்டிக் கிரயம் என்பன மூலதனமாக்கப்படும். ஏதேனும் மூலதனப் பண்டமொன்றின் நேர் எதிர் விளைவான ஒரு பகுதியாக மென்பொருட்கள் காணப்படும் போது மென்பொருளுக்கான கிரயம் பௌதிக உபகரணத்துடன் மூலதனமாக்கப்படும். மூலதனப் பண்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகள், தனித் தனியான பயனுறுதி வாய்ந்த ஆயுட்காலத்தைக் கொண்டுள்ளவிடத்து

அப்பொருள் தனியாக அடையாளம் காணப்படும். நிலையான சொத்துக்களை அகற்றும் போது ஏற்படும இலாபம் அல்லது நட்டம், அச்சொத்தின் விற்பனை விலையையும் ஏடுகளில் உள்ள தேறிய பெறுமதியையும் ஒப்பிடுவதன் கணிக்கப்படும். அந்த சேரவேண்டிய இலாபம்/நட்டம் மேலதிக வருமானமாக அல்லது மேலதிகச் செலவாக அடையாளம் காணப்படும். மீள் கணக்கிடப்பட்ட சொத்துக்களை கைவிடும் சந்தர்ப்பத்தில் அதனுடன் தொடர்புடைய பெறுமதி மீள் கணக்கீட்டுத் தொகுதியினுள் காணப்படுமாயின் அது முன்கொண்டு வரப்பட்ட இலாப நட்ட மீதிகளுடன் செம்மையாக்கம் செய்யப்படும்.

### 3.2 மீள் மதிப்பீடு

சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் போது தொடர்புடைய மொத்தச் சொத்துக் குழுவும் மீள் மதிப்பீடு செய்யப்படும். அது தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளை மாத்திரம் மீள் மதிப்பீடு செய்வதைத் தடுப்பதற்கும் சொத்தின் ஒரு பகுதி கிரயமாகக் காணப்படுவதனால் ஏற்படும் கலப்பு நிலையைத் தவிர்ப்பதற்கும் ஆகும்.

சொத்துக்கள் நியாயமான பெறுமதியைப் பெறும் போது சந்தைத்த தகவல்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும். அவ்வாறு நியாயமான பெறுமதியானது, சொத்துக்களை மதிப்பிடும் தொழில்சார்ந்த நிபுணத்துவம் கொண்ட குழுவொன்றின் ஊடாகத் தீர்மானிக்கப்படும்.

மீள்மதிப்பீட்டின் போது ஏதேனும் சொத்து ஒன்றின் பெறுமதி அதிகரிக்குமாயின் அவ்வதிகரிப்பு நேரடியாக மீள்மதிப்பீட்டு மேலதிகக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

மீள்மதிப்பீட்டின் விளைவாக சொத்து வகையொன்றின் பெறுமதி குறைவடையுமாயின், இந்தப் பெறுமதிக் குறைவை மீள் கணிப்பீட்டுத் தொகுதியுடன் செம்மையாக்கம் செய்தல், இந்தச் சொத்துக்களின் வகையில் ஏற்படும் மேலதிக எல்லை வரை மேற்கொள்ளப்படும்.

மீள் கணிப்பீட்டின் போது ஏற்படும் மேலதிகங்களையும் பற்றாக்குறைகளையும் ஒன்றுக்கு ஒன்று பதிலீடு செய்தல் அந்தச் சொத்து வகைக்குள் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வகையினுள் அடங்காத சொத்துக்கள் மூலம் செம்மையாக்கம் செய்யப்படமாட்டாது.

### 3.3 பெறுமானத் தேய்வு

சொத்துக்களின் பெறுமானத் தேய்வு, சொத்துக்களின் மொத்தச் செலவிலிருந்து அழிவடைந்தவற்றின் பெறுமதியைக் கழிப்பதன் மூலம் கிடைக்கும் பெறுமதியை அடிப்படையில் கணிக்கப்படுகின்றது ஒரு சொத்து தொகுதியிலுள்ள போதியளவு முக்கியமான துறைகளின் பயனுள்ள ஆயுட் காலம் வேறுபட்டதாக அமைகின்ற போது அவற்றைத் தனித் தனியாகக் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சொத்துக்களின் பெறுமானத் தேய்வுகள் அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயுட் காலத்தில் இலாப நட்டக் கணக்கில் காட்டப்படும். கவனத்திற் கொள்ளப்படும் ஆம் ஆண்டிலும் கடந்த வருடங்களிலும் இந்த மதிப்பீடப்படட வீதம்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆதன வகை | பெறுமானத் தேய்வு% |
|---|---|
| கட்டடங்கள் | 2.5 |
| அலுவலக உபகரணங்கள் | 15 |
| உபகரணங்கள் | 15 |
| கண்காட்சிப் பொருட்கள | 15 |
| கணினி இயந்திரங்கள் | 1/3 |
| மோட்டார் வாகனங்கள் | 15 |
| தளபாடங்கள் | 10 |
| இயந்திர உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட வசதிகள் | 15 |
| நூலகத்திற்கான நூல்கள் | 05 |
| உட்கட்டமைப்பு வசதிகள் | 15 |
| மென்பொருட்கள் | 33 1/3 |

### 3.4 ஏடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்தல்

தற்போதைய பெறுமதியை ஏடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்தல், அவற்றின் எதிர் காலத்திற்கான மதிப்பிடப்பட்ட பயன்கள் இல்லாதவிடத்து அல்லது அவற்றை அகற்றும் போது மேற்கொள்ளப்படும். சொத்துக்களை அகற்றுகின்ற போது ஏற்படுகின்ற இலாப நட்டங்கள், சொத்துக்களின் விற்பனைப் பெறுமதி மற்றும் தேறிய பெறுமதி என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பெறப்படுவதுடன் அவை தொழிற்பாட்டு அறிக்கைகளில் ஏனைய வருமானங்கள் என்பதன் கீழ் குறிப்பிடப்படும்.

### 3.5 தொட்டுணர முடியாச் சொத்துக்கள்

நிலையத்தினால் கையகப்படுத்தப்பட்ட குறிப்பான ஆயுட் காலத்தைக் கொண்ட தொட்டுணர முடியாச் சொத்துக்கள் மொத்தச் செலவிலிருந்து அவற்றின் முழுமையான இழிவு நிலை மற்றும் மொத்தப் பெறுமதி என்பவற்றைச் செம்மையாக்கம் செய்வதன் மூலமாகும். பின்னர் அந்த செலவின் காரணமாக உரிய தொட்டுணர முடியாச் சொத்துக்களின் எதிர் காலப் பயன்கள் அதிகரிக்கும் தன்மையைக் கொண்டிருந்தால் மாத்திரமே அவ்வாறு கிடைக்கும் செலவுகள் மூலதனமாக்கப்படும். மொத்தச் செலவுக்கும் இறுதிப் பெறுமதிமதிக்கும் இடையிலான வேறுபாடு இழிவு நிலைப்படுத்தப்படும். இழிவுப் பெறுமதி தொழிற்பாட்டுக் கூற்றுக்களின் எளிய பெறுமானத் தேய்வு முறைகளுக்கான வீதத்தின் அடிப்படையில் காட்டப்படும். இழிவு நிலைப்படுத்தப்படுத்தல் தொட்டுணர முடியாச் சொத்துக்கள் நிலையத்தில் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்ட திகதியில் ஆரம்பிக்கும். தொட்டுணரமுடியாச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட வீதங்களும் இழிவு வருடங்களும் கீழே தரப்படுகின்றன.

- **மென்பொருட்கள் - 33 1/3 %**

  இழிவு வருடமும் பயனுறுதி வாய்ந்த ஆயுட் காலம் மற்றும் இறுதிப் பெறுமதி என்பன ஒவ்வொரு காலப் பகுதியிலும் மீளாய்வு செய்யப்படும்.

### 4. கையிருப்பு

மொத்தச் செலவு மற்றும் தேறிய பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்ததைக் கவனத்தில் எடுத்து கையிருப்பு கணிக்கப்படும். கையிருப்பு மொத்தச் செலவு FIFO கையிருப்பு விநியோகக் கோட்டுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளது. கையிருப்புக்களை தற்போதைய நிலைக்கு அல்லது இடத்திற்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட செலவுகள் அவற்றின் மொத்த செலவாகும்.

### 5. கிடைக்க வேண்டிய வியாபார மீதிகள்

வியாபார மீதிகள் முதலில் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் அடையாளம் காணப்படும். பின்னர் பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் பெறுமதி தேய்வடையும் தள்ளுபடி மற்றும் பெறுமதி குறைவடைதல் அடிப்படையில் ஒதுக்கீடும் செய்யப்படும்.

### 6. பணம் மற்றும் அதற்குச் சமனானவைகள்

கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு, தற்காலிக அழைப்பு வைப்புக்கள், அரசாங்க நிறுவனங்களின் மேலதிக வைப்புக் கணக்குகள் என்பன காசுப் பாய்ச்சல் கூற்றுக்களில் பணம் மற்றும் அதற்குச் சமனானவைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

### 7. வழங்கிய கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய கணக்குகள்

ஏதேனும் நிலையான அல்லது குறிப்பான கொடுப்பனவுகளைச் செய்கின்ற மற்றும் சந்தையில் சுழற்சியடையாத கடன் வழங்கல் முதலில் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் அடையாளம் காணப்படும்.

### 8. நிதிப் பொறுப்புக்கள்

மூலத்திலிருந்து பெறப்படாத நிதிப் பொறுப்புக்கள் ஏனைய நிதிப் பொறுப்புக்களாகக் அடையாளம் காணப்படும். இந்த ஏனைய நிதிப் பொறுப்புக்கள் என்பது வியாபார கொடுக்க வேண்டிய கணக்குகளையும் தொடர்புடைய தரப்புக்களுக்கான கொடுப்பனவுககளையும் குறிக்கும். இந்தப் பொறுப்பு முதலில் நியாயமான பெறுமதியில் அடையாளம் காண முடியுமான செலவுகளைச் செம்மையாக்கம் செய்வதன் ஊடாக அடையாளம் காணப்படும். நிறுவனத்திற்குச் சட்டரீதியான உரிமை இருந்தால் மாத்திரமே நிதி நிலைமை அறிக்கையில் நிதிப் பொறுப்புக்களும் நிதிச் சொத்துக்களும் ஒன்றுக்கு ஒன்று பதிலீடு செய்து காட்டப்படும்.

### 9. ஊழியர் பயன் பொறுப்புக்கள்
#### வேலையை வீட்டு நீங்குவதற்கான பயன்கள்

சேவையிலிருந்து விலகிச் செல்லும் போது செலுத்தப்படும் பயன்கள் நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு நிறுவனம் வழங்கிய பங்களிப்புக்கள் முறையே 15% மற்றும் 3% ஆகக் காணப்பட்டன. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்திற்கு இணங்க பணிக்கொடைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பணிக்கொடைகளை ஒதுக்குவதற்காகப் பொதுத் திறைசேரியின் ஊடாக நிதி வழங்கப்படும். இந்த பணிக்கொடை ஒதுக்கீடு பின்வருமாறு கணக்கிடப்படும்.

(இறுதியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் + வாழ்க்கைச் செலவுப்படி) x (பூர்த்திசெய்த வருடங்களின் எண்ணிக்கை/2)

### 10. ஒதுக்கீடு செய்தல்

இது கடந்த காலங்களில் ஏற்பட்ட நிகழ்வொன்றின் அடிப்படையில் நிலையத்தினால் தற்போது அடையாளம் காண முடியுமான சட்ட மற்றும் பயனுறுதித் தன்மையிலான கடப்பாட்டின் அடிப்படையில் நம்பகமான முறையில் எதிர்வுகூறக்கூடிய எதிர் கால காசு வெளிப்பாய்ச்சலைக் குறிக்கின்து.

### 11. ஒதுக்கீடு, நானாவிதச் சொத்துக்கள் மற்றும் நானாவிதப் பொறுப்புக்கள்

ஐந்தொகைத் திகதியில் நிலையத்திடம் காணப்படும் அளவை மதிப்பீட செய்ய முடியமான எதிர் கால வளங்களிலிருந்து வெளியேற்றப்படுவதற்கான அளவிலிருந்து ஒதுக்கி வைக்கப்படும். நானாவித பொறுப்புக்கள் ஐந்தொகையில் குறிப்புக்களாகக் பதியப்பட்டுள்ளன.

### 12. வருமானங்களை அடையாளம் காணுதல்

ஏதேனும் ஒரு வருமானத்தை நம்பகமான முறையில் கணக்கிட முடியுமாக இருந்து அதற்கான பொருளாதாரப் பயன்களைப் பெறுவதற்காக நிலைலயத்தினால் முடியுமாகவுள்ள சந்தர்ப்பத்தில் அடையாளம் காணப்படும். கிடைத்த மற்றும் கிடைக்கவுள்ள பெறுமதிகளிலிருந்து கழிப்பனவுகளையும் வரிகளையும் நீக்குவதன் மூலம் வருமானம் அடையாளம் காணப்படும். வருமானங்களை அடையாளம் காணும் போதுத பின்வரும் விசேட பண்புகள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

#### a) அபிவிருத்தி செய்யப்படும் தொழில்நுட்பங்களை விற்பனை செய்தல்

உரிய தொழில்நுட்பங்கள் தொடர்பில் போதியளவு பயன்களினதும் இழப்பபாயங்களின் உரிமை மாற்றங்கள் நிகழ்கின்ற சந்தர்ப்பத்தில் வருமானம் அடையாளம் காணப்படும். ஒப்படைக்கப்படும் தொழில்நுட்பங்கள் தொடர்பில் கடந்த கால முகாமைத்துவம் அல்லது நிர்வாகத் தலையீடு நிலையத்தினால் மேற்கொள்ப்படமாட்டாது.

#### b) சேவை வழங்கல்

குறித்த சேவை எழுந்த அல்லது செய்யப்பட்ட காலப் பகுதிக்காக சேவை வருமானம் அடையாளம் காணப்படும்.

#### c) ஒப்பந்த வருமானம்

ஒப்பந்தமொன்றின் வருமானம் அதன் ஒட்டுமொத்தப் பெறுபேறுகளை நம்பிக்கையான முறையில் மதிப்பிட முடியாத சந்தர்ப்பத்தில் ஆற்றியுள்ள வேலைகளின் சதவீதத்தின் அடிப்படையில் பெறப்படும்.

#### d) வரிகள்

நியதிச் சட்ட அடிப்படையில் நிலையம் செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி, நாட்டைக்கட்டியெழுப்பும வரி என்பன இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

**e) வட்டி வருமானம்**

சேர வேண்டிய சந்தர்ப்பத்தில் வட்டி வருமானம் அடையாளம் காணப்படும்.

**f) நடைமுறையல்லாச் சொத்துக்களை அகற்றுவதன் இலாபங்கள் மற்றும் நட்டங்கள்**

நடைமுறையல்லாச் சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை விலையில் அச்சொத்துக்களின் தேறிய ஏட்டுப் பெறுமதியையும் அவற்றை அகற்றுக்கு ஏற்படும் ஏனைய செலவுகளையும் கழித்ததன் பின்னர் கிடைக்கப்பெறும் பெறுபேறு வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும். மேலும் குறைந்த பெறுமதியைக் கொண்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் அகற்றல் ஒவ்வொன்றும் தனித்தனியாகவன்று பொதுவாக தேறிய பெறுமதி காட்டப்படும்.

**g) ஏனைய வருமானங்கள்**

தொழில்நுட்ப ஒப்படைப்புக்களின் தேறிய இலாபம், அழைப்பு வைப்புக்கள் மற்றும் பிணைமுறி வட்டி வருமானம் கால தாமதத்திற்கான தண்டப்பணம், கொடுத்த கடன்களுக்கான வட்டி, மீளச் செலுத்தாத வைப்புக்கள், வழங்குநர் பதிவு, சிறு வருமானங்கள், சேதமடைந்த பொருட்களின் விற்பனை, நடைமுறையல்லாச் சொத்துக்களை அகற்றிய வருமானம், பொது நோக்கங்களுக்கான அறவீடுகள் என்பன மேலதிக வருமானங்களாகக் காட்டப்படும்.

**h) பிற்போடப்பட்ட வருமானம்**

அரசாங்க மூலதன மானியங்கள் மூலம் கையகப்படுத்தப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதப்படும்.

**13. மானியங்கள்**

கிடைப்பனவுக்கான நியாயமான உறுதிப்படுத்தலைக் கொண்டதும் பெறுவதற்கான அனைத்து நிபந்தனைகளும் நிலையத்தினால் பூர்த்திசெய்யப்பட்ட கிடைப்பனவுகள் வருமானக் கூற்றுக்களில் மானியங்களாகக் காட்டப்பட்டுள்ளன. மானியம் கிடைக்கும் போது அது உரிய காலப் பகுதியில் வருமானமாகக் கருதப்பட்டு அதன் மூலம் உள்ளடக்கப்படும் செலவுகளுடன் இணக்கம் செய்யப்பட்டுள்ளன. ஏதேனும் ஒரு நிலையான சொத்தின் கொள்ளலுக்காகக் கிடைத்துள்ள மானியங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வருமானங்கள் கணக்கிடப்படும். நிலையத்திற்கு நிதியல்லாத மானியங்கள் கிடைக்கும் போது நியாயமான பெறுமதியின் அடிப்படையில் கணிக்கீடு செய்யப்படும்.

## 14. வருமானக் கூற்றுக்களில் செலவுகளைச் சமர்ப்பித்தல்

வருமானக் கூற்றுக்களில் வருமானத்துடன் தொடர்புடையதாக எழுந்த செலவுகள் செம்மையாக்கம் செய்யப்பட்டுள்ளன. நிறுவத்தின் நாளாந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான செலவு, நடமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு போன்ற வருமானங்களுக்கு எதிராக எழும் செலவுகள் கவனத்திற் கொள்ளப்படும்.

## 15. ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செலவு

ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செலவுக்கான முதன்மையான நிதியீட்டம் திறைசேரியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டமொன்றுக்கு சேவைவழங்குர் ஒருவினால் நிதியீட்டம் செய்யப்படுமாயின் அதன் செலவுக்கி எதிராக வருமானமாகப் பதியப்படும். செலவாக நேரடிச் செலவுகள் மாத்திரம் கருதப்படும்.

## 16. ஆய்வகளுக்கான பரிசில்களை ஒதுக்குதல்

நிலையத்தின் அபிவிருத்திக்காக கிடைத்த அன்பளிப்புக்களை உரிய ஆய்வுப் பொறியியலாளர்கள் மத்தியில் பகிர்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

a அன்பளிப்புக்கள் கிடைப்பதற்குக் காரணமாக அமைந்த ஆய்வுகளுக்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்த ஆய்வுப் பொறியியலாளர்கள் மத்தியில் அப்பரிசுகளில் 60% ஐப் பகிர்ந்தளித்தல். இதற்காக ஆய்வாளர்களாக குறித்த பரிசுகளுக்கு விண்ணப்பிக்கும் ஆய்வுப் பொறியியலாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

b. இந்த பெறுமதியைப் பகிரும் போது, குறித்த பரிசுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குரிய சம்பளம் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

c. இந்த பரிசு வழங்கல் முறையானது கடந்த கால அன்பளிப்புக்கள் மற்றும் எதிர் கால அன்பளிப்புக்கள் இரண்டுக்கும் ஏற்புடையதாகும்.

ஈ. கடந்த காலப் பரிசுகளை வழங்குகின்ற போது அவை வழங்கப்படுகின்ற திகதியில் நிறுவனத்தில் உள்ள ஆய்வாளர்கள் மாத்திரமே அவற்றைப் பெறுவர். (எனினும் கணக்கிடுவதற்காக அனைத்து குழு அங்கத்தவர்களும் கவனத்திற் கொள்ளப்படுவர்)

e. சேவையில் இல்லாத ஊழியர்களுக்கான பகுதியும் மீதமுள்ள 40% உம் நேர்ட் நிறுவனத்தின் எதிர்கால ஆய்வுகள், கலாசார முன்னேற்றம் என்பவற்றுக்காகப் பயன்படுத்தப்படும் என்று தலைவர் பணிப்பாளர் சபைக்கு அறிவித்துள்ளார்.

# 13. 2016.12.31 இல் உள்ளவாறான கணக்கீட்டுக் குறிப்புக்கள்

முன்னைய வருடங்களுக்கான செம்மையாக்கம் (பெறுமதி - ரூபா)

| இலக்கம் குறிப்பு | விபரம் | தொழிற்பாட்டுப் பெறுபேறுகளில் ஏற்படும் தாக்கம் | | நிதி நிலைமையின் மீது ஏற்படும் தாக்கம் |
|---|---|---|---|---|
| | | 2015 | 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் | |
| 1.1 | RED/COM/2/95/14<br>2014 ஆம் ஆண்டில் விற்கப்பட்டதன் பின்னர் சேவை மேலதிக ஒதுக்கீடு<br>2014/12/31 ஆந் திகதியில் செம்மையாக்கத்தின் பின்னரான பெறுமதி<br>வருமானம்: 537,200.00 537,200.00<br>செலவு: 437,775.06 432,775.06<br>தேறிய இலாபம் 99,424.94 104,424.94 | | 5,000.00 | பொறுப்புக்கள் குறைதல் |
| 1.2 | CIVIL/COM/86/11<br>சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படாமையினால் ஒப்பந்தக்காரரின் நிறுத்திவைக்கப்பட்ட கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டமை | | 300,755.00 | பொறுப்புக்கள் குறைதல் |
| 1.3 | ஊக்குவிப்புக் கொடுப்பனவு மேலதிக ஒதுக்கீடு - 2015 | 438,698.98 | | பொறுப்புக்கள் குறைதல் |
| 1.4 | CIVIL/COM/86/11<br>அமைச்சரவையினால் அனுமதியளிக்கப்பட்ட வீதக் குழுவொன்றிடமிருந்து கிடைத்த வீதத் திருத்தங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட வேலைப் பெறுமதி மாற்றமடைந்தமை | | (1,912,770.73) | கடன்பெற்றோர் குறைவடைந்தமை |
| 1.5 | DFCI/COM/119/14- செலவு மிகை ஒதுக்கீடு சரிசெய்தல்<br>ஊழியச் செலவுகள் 25,872.00<br>பொதுச் செயற்பாட்டுச் செலவுகள் 9,055.20<br>இயந்திரச் செலவுகள் 49,780.00 | | (84,707.20) | செய்யப்படும் வேலைகளின் பெறுமதி குறைவடைதல் |
| 1.6 | வகைப்படுத்தலைச் சரிசெய்தலும் பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டுத் தாக்கமும்<br>கட்டட பற்றாக்குறை ஒதுக்கீடு = ரூ.1,656,030.81<br>கட்டடங்கள் ஏனைய மூலங்களின் அடிப்படையில் பற்றாக்குறைகளை ஒதுக்குதல் ரூபா 3,611.40<br>உட்கட்டமைப்பு வசதிகளுக்கான பற்றாக்குறை ஒதுக்கீடு = ரு.1,815,988.67<br>நூலக நூல்களுக்கான பற்றாக்குறை ஒதுக்கீடு = ரூபா.1,187,281.78 | | (1,656,030.81)<br>(3,611.40)<br>(1,815,988.67)<br>(1,187,281.78) | திரட்டிய பெறுமானத் தேய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| 1.7 | CIVIL/COM/103/15 –<br>வருமானப் பற்றாக்குறை ஒதுக்கீடு - ரூபா. 8,521.74 2014/12/31 ஆந் திகதிய செம்மையாக்கத்தின் பின்னரான பெறுமதி<br>வருமானம்: 167,747.75 176,269.49<br>செலவு: 114,500.00 114,500.00<br>தேறிய இலாபம் 53,247.75 61,769.49 | 8,521.74 | | கடன்பெற்றோர் அதிகரித்தமை |
| 1.8 | திறமை அதிகரிப்புக்கான கிடைப்பனவுகள் ரூபா.3,918,417.00<br>2015 ஆம் ஆண்டின் தொழிற்பாட்டுப் பெறுபேறுகள் அறிக்கையில் வருமானங்கள் என்பதன் கீழ் செம்மையாக்கம் செய்யப்பட்டுள்ளது. | 3,918,417.00 | | தேறிய சொத்துக்கள் அதிகரித்தல் |
| 1.9 | APH/COM/3//79/14 – செலவுகளுக்கான பற்றாக்குறை ஒதுக்கீடு<br>014/12/31 ஆந் திகதியில் செம்மையாக்கத்தின் பின்னரான பெறுமதி<br>வருமானம்: 3,505,829.50 3,505,829.50<br>செலவு: 2,706,830.96 2,692,406.55<br>தேறிய இலாபம் 798,988.54 813,422.73 | | 14,424.41 | தேறிய சொத்துக்கள் அதிகரித்தல் |
| 1.20 | 2015 ஆம் ஆண்டில் 4,820.73 ரூபா பெறுமதியான நல்ல கையிருப்பு அசையாக் கையிருப்பாக கருதப்பட்டுள்ளமை | 4,820.73 | | கையிருப்பின் அளவு வீழ்ச்சியடைதல் |
| 1.21 | மீளக் கிடைத்த பொருட்கள் எழுதுபொருட்களை கணக்கிற்கு மாற்றுதல் | 15.00 | 106.00 | தேறிய சொத்துக்கள் அதிகரித்தல் |
| 1.22 | RED/COM/106/2013 | | (34,050.00) | செய்யப்பட்டு வரும் வேலைகள குறைவடைதல் |
| 1.23 | ELE//COM/6/55/2014<br>வருமானம் கூடுதலாகக் கணக்கிடப்படுதல் | | (1,67,800.00) | கொடுக்கல் வாங்கல் முற்பணங்கள் குறைவடைதல் |
| 1.24 | RED/COM/121/14<br>2015 செய்யப்பட்டு வரும் வேலைகள் குறைவாக மதிப்பிடப்பட்டமை | 3,14,558.56 | | செய்யப்பட்டு வரும் வேலைகள் குறைவடைதல் |

**2. பாதுகாப்புக்காக வைக்கப்பட்ட பிணை வைப்புக்கள்**

| பிணை வழங்கியது | பிணை இலக்கம்/திகதி | பாதுகாப்புக்காக வைக்கபட்டுள்ள சான்றிதழ்கள் | பாதுகாப்பின் பெறுமதி | வங்கி | பிணை இலக்கம் |
|---|---|---|---|---|---|
| டொயோட்டா லங்கா தனியார் கம்பனி | Bank Guarantee - 15/2008- 18/12/2014 | C/33734579- 507908 | 1,00,000.00 | இலங்கை வங்கி ஜா-எலை | 75.000.00 |

**3. தற்காலிக அழைப்பு வைப்புக்கள்**

சேவையிலிருந்து நீங்கிய ஊழியர்களினால் செலுத்தப்பட்ட பிணைகளின் பெறுமதியான 8,994,089.90 ரூபா 2012/07/30 திகதி வரையில் இலங்கை வங்கியின் அரசாங்க நிறுவனங்களின் தற்காலிகமாக மேலதிக நிதியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் மூலம் உழைத்த பங்கிலாபங்கள் மற்றும் வட்டியின் மூலம் முதலீட்டுத் தொகை 11,467,716.93 ரூபா வரை அதிகரித்துள்ளது.

வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த முற்பணங்கள் தற்காலிகமான அழைப்பு வைப்புக்களாக உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது இவற்றின் மூலம் கிடைத்த வட்டி வருமானங்கள் ஏனைய வருமானங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

**4. எரிசக்தி, சுற்றாடல் முகாமைப் பிரிவில் ஏற்பட்ட தீயினால் ஏற்பட்ட நட்டங்களைப் பதிவழிப்புச் செய்தல்**

வளிச் சீராச்சல் இயந்திரமொன்றில் ஏற்பட்ட மின் கசிவினால் 2016/04/05 ஆந் திகதி எரிசக்தி, சுற்றாடல் முகாமைப் பிரிவில் தீ பரவியது.

அது தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

* ஜா-எலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தல்
* பணிப்பாளர் நாயகத்தி◌ால் 02 குழுக்கள் நியமிக்கப்பட்டமை
* சம்பவம் தொடர்பில் முழுயான விசாரணைகள் நடாத்தப்பட்டமை
* இழப்புக்களை மதிப்பீடு செய்தமை

**ஏற்பட்ட நட்டம்**

| | |
|---|---|
| சொத்துக்களின் கிரயம் | ரூபா |
| மின் தொகுதிக்கு ஏற்பட்ட நட்டம் | 351,830.00 |
| கட்டடத்திற்கு ஏற்பட்ட நட்டம் | 1,051,650.00 |
| மின் உபகரணங்கள் | 165,416.67 |
| உபகரணங்கள் | 151,000.00 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 95,665.00 |
| கணினி மற்றும் ஏனையவை | 10,000.00 |
| | 1,825,561.67 |
| கழி: திரட்டிய பெறுமானத் தேய்வு | (302,352.88) |
| | 1,523,208.79 |

சிறு உபகரணங்களுக்கு ஏற்பட்ட நட்டம்

| | |
|---|---|
| கண்ணாடிப் பொருட்கள் | 8,182.78 |

## நிலையான சொத்துப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சொத்துக்கள்

| Asset Code | Description | Category | Dept. | Date | Rate | Cost | Depreciation for the 2016 | Cumulative Depreciation a up to disposal | Profit/(Loss) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| FA0005203 | Emc Building (Revaluation 31/12/2007) | BU | EMC | 04/05/16 | 3 | 1,386,380.00 | 9,020.97 | 286,581.84 | (1,099,798.16) |
| FA0002175 | IR Colour SD Camera,HD Camera,8Channel Dual (Cctv) | OE | COM | 04/05/16 | 15 | 17,100.00 | 667.60 | 667.60 | (16,432.40) |
| FA0002484 | 21 Colour T V No 1- 25333.33" | OE | EMC | 04/05/16 | 15 | 27,000.00 | 1,054.11 | 1,054.11 | (25,945.89) |
| FA0002400 | Vacuum Cleaner A - 2004 (Wet/Dry) | OE | EMC | 04/05/16 | 15 | 11,000.00 | 429.45 | 429.45 | (10,570.55) |
| FA0002142 | Air Conditioner Split Type 36000 | OE | EMC | 04/05/16 | 15 | 112,416.67 | 4,388.87 | 4,388.87 | (108,027.80) |
| FA0002272 | Wall Fan 16 Kdk" | OE | EMC | 04/05/16 | 15 | 5,000.00 | 195.21 | 195.21 | (4,804.79) |
| FA0002273 | Wall Fan 16 Kdk" | OE | EMC | 04/05/16 | 15 | 5,000.00 | 195.21 | 195.21 | (4,804.79) |
| FA0002274 | Wall Fan 16 Kdk" | OE | EMC | 04/05/16 | 15 | 5,000.00 | 195.21 | 195.21 | (4,804.79) |
| FA0003558 | High Temperature Probe Nos. 2, Thermocouple Thermometer No.1 | EQ | EMC | 04/05/16 | 15 | 115,000.00 | 4,489.73 | 4,489.73 | (110,510.27) |
| FA0003047 | Stop Watch | EQ | EMC | 04/05/16 | 15 | 2,000.00 | 78.08 | 78.08 | (1,921.92) |
| FA0003038 | Impressure Meter 0-5 Ps C9505/190 | EQ | EMC | 04/05/16 | 15 | 22,000.00 | 858.90 | 858.90 | (21,141.10) |
| FA0003022 | Pressure Gauge 0.15 Bar, No 1 - 3656.25 | EQ | EMC | 04/05/16 | 15 | 3,000.00 | 117.12 | 117.12 | (2,882.88) |
| FA0003023 | Pressure Gauge 0.30 Bar, No 1 - 3656.26 | EQ | EMC | 04/05/16 | 15 | 3,000.00 | 117.12 | 117.12 | (2,882.88) |
| FA0003282 | Desicator 300Mm 12 Wheel Brand | EQ | EMC | 04/05/16 | 15 | 6,000.00 | 234.25 | 234.25 | (5,765.75) |
| FA0001792 | Laboratory Stool (China) | FU | EMC | 04/05/16 | 10.00 | 3,000.00 | 78.08 | 78.08 | 2,921.92 |
| FA0001793 | Laboratory Stool (China) | FU | EMC | 04/05/16 | 10.00 | 3,000.00 | 78.08 | 78.08 | 2,921.92 |
| FA0001505 | Wall Cupboard Upper Floor (Lf 23.08) | FU | EMC | 04/05/16 | 10.00 | 42,000.00 | 1,093.15 | 1,093.15 | 40,906.85 |
| FA0001499 | MDF Cupboard, NOS.4 | FU | EMC | 04/05/16 | 10.00 | 40,665.00 | 1,058.40 | 1,058.40 | 39,606.60 |
| FA0001507 | Cupboard 36 30" | FU | EMC | 04/05/16 | 10.00 | 7,000.00 | 182.19 | 182.19 | 6,817.81 |
| FA0000080 | Intel Pentium Computer | CM | EMC | 04/05/16 | 10.00 | 10,000.00 | 260.27 | 260.27 | 9,739.73 |
| | | | | | | 1,825,561.67 | 24,792.01 | 302,352.88 | (1,317,379.16) |

**4. வருடத்தினுள் நிறுவனத்தின் வாகன விபத்துக்கள்**

| வாகன இலக்கம் | விபத்து நிகழ்ந்த திகதி | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை | காப்புறுதிப் முகவர் | இழப்பீடு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஒப்படைத்த திகதி | பெறுமதி ரூபா | பொறுப்பேற்ற திகதி |
| 62-4004 | 2016/11/ 17 | 164,000.00 | NITF | 2017/01/11 | இதுவரையில தீர்மானம் எதுவும் இல்லை | |
| KX-7908 | 2016/11/10 | 58,647.70 | SLIC | 2016/12/30 | 58,647.69 | 2017/01/20 |
| 301-3740 | 2016/12/22 | 82,350.00 | NITF | இதுவரையில தீர்மானம் எதுவும் இல்லை | இதுவரையில தீர்மானம் எதுவும் இல்லை | |

**5. அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடு**

வட்டி வீதமாக 11.81% ஐ எடுகோளாகக் கொண்டு அறவிட முடியாக் கடன் ஒதுக்கப்பட்டுள்ளது.

| கடன்பெற்ற நிறுவனம் | தொகை | அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடு |
|---|---|---|
| தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு | 6,553,446.40 | |
| பிரதேச சபை, களுத்துறை | 5,965.00 | |
| ஹேலீஸ் ஃபப்ரிக் கம்பனி | 12,782.00 | |
| போதனா வைத்தியசாலை, குருநாகல் | 8,62,920.00 | |
| தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் | 35,45,336.70 | |
| கைத்தொழில் திணைக்களம் | 4,22,747.00 | |
| மிருக உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 1,169.57 | |
| நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம் | 46,023.17 | |
| புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகம் | 1,368,236.73 | |
| நகர சபை, அம்பலாங்கொடை | 420,964.29 | 44,599.26 |
| மாவட்ட செயலகம், அம்பாந்தோட்டை | 70,435.00 | 7,462.27 |
| போதனா வைத்தியசாலை, அநுராதபுரம் | 304,217.14 | 61,046.18 |
| மொத்தம் | 13,614,243.00 | 113,107.71 |

**2017 ஆம் ஆண்டின் அறிக்கைத் திகதி வரையில் அறவிடப்பட்ட கடன்பெற்றோர் மீதிகளுக்கு அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.**

**6. 2016 ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்ட கடன்பெற்றோர் மீதி**

| கடன்பெற்ற நிறுவனம் | தொகை | பணிப்பாளர் சபையின் தீர்மான இலக்கம் | திகதி |
|---|---|---|---|
| ஹிரியாலை பொருளாதார நிலையம் | 637,056.40 | 5 -2016,3.2 | 2016/06/28 |
| கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் | 316,342.86 | 3 -2016,3.2 | 2016/03/23 |
| ஏ.ஈ. பிரதீப், "சஞ்சீவ நிவஸ" | 7,200.00 | 5 -2016,6.3 | 2016/06/28 |
| லக்லிய மகளிர் விவசாய அமைப்பு | 60,171.42 | 4 -2016,3.8 | 2016/05/18 |
| தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு | 104,968.29 | 5 -2016,6.3 | 2016/06/28 |
| எஸ்.எம். அஸாம் | 42,048.83 | 9 -2016,4.1 | 2016/10/25 |

***2016.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று***

Figures in Rs.

| | 2016 | 2015 |
|---|---|---|
| *01. தொழிற்பாட்டு அடிப்படையிலான தேறிய காசுப் பாய்ச்சல்.* | | |
| *கிடைப்பனவுகள்* | 57,985,333.07 | 66,444,541.38 |
| *மீளெழும் மற்றும் ஆய்வுக் கிடைப்பனவுகள் கிடைத்த* | 231,025,150.00 | 209,954,373.00 |
| *வட்டி* | 4,904,542.35 | 3,975,587.71 |
| *ஏனைய கிடைப்பனவுகள்* | 1,716,378.23 | 1,073,498.79 |
| *கொடுப்பனவுகள்* | | |
| *ஊழியர்களுக்கான செலவு* | (190,684,509.32) | (173,377,977.53) |
| *ஓய்வூதியம்* | (6,498,572.75) | (2,664,694.66) |
| *வழங்கல்கள்* | (78,776,793.81) | (75,377,777.74) |
| *ஏனைய கொடுப்பனவுகள்* | (23,570,199.78) | (21,891,877.78) |
| *தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்* | (3,898,672.01) | 8,135,673.17 |
| *முதலீடுகள் மூலம் உழைத்த தேறிய காசுப் பாய்ச்சால்* | | |
| *உபகரணங்கள் மற்றும் கருவிகள் கொள்வனவு* | (37,622,266.37) | (27,798,491.11) |
| *உபகரணங்கள் மற்றும் கருவிகள் விற்பனை* | - | 2,207.20 |
| *முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்* | (37,622,266.37) | (27,796,283.91) |
| *நிதிச் செயற்பாடுகளின் மூலம் உழைத்த காசுப் பாய்ச்சல்* | | |
| *மூலதனக் கிடைப்பனவுகள்* | 31,114,964.00 | 31,798,897.00 |
| *நிதிச் செயற்பாடுகளின் மூலமான தேறிய நிதிப் பாய்ச்சல்* | 31,114,964.00 | 31,798,897.00 |
| *காசு மற்றும் அதற்குச் சமனான சொத்துக்களின் தேறிய (அதிகரிப்பு/வீழ்ச்சி)* | (10,405,974.38) | 12,138,286.26 |
| *காலப்பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசு மற்றும் அதற்குச் சமனானவைகள்* | 105,890,568.07 | 93,752,281.81 |
| *காலப் பகுதியின் இறுதியில் காணப்பட்ட காசு மற்றும் அதற்குச் சமனானவைகள்* | 95,484,593.69 | 105,890,568.07 |

***2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று***

| ***2. காசு அல்லாத கொடுக்கல் வாங்கல்கள்*** | ***(பெறுமதி – ரூபா)*** | |
|---|---|---|
| | *2016* | *2015* |
| திறைசேரியிலிருந்து கிடைத்த வாகனங்கள் | - | *7,975,000.00* |
| | --------------- | ---------------- |
| | - | *7,975,000.00* |

***3. காசு மற்றும் அதற்குச் சமனான சொத்துகள்***

| | | |
|---|---|---|
| *நடைமுறைக் கணக்கு இல. 404949 இலங்கை வங்கி ஜாஎலைக் கிளை* | *2,173,287.47* | *392,345.92* |
| *நடைமுறைக் கணக்கு இல 405005 இலங்கை வங்கி ஜாஎலைக் கிளை* | *106,287.36* | *159,300.51* |
| *நடைமுறைக் கணக்கு இல. 404956 இலங்கை வங்கி ஜாஎலைக் கிளை* | *429,001.16* | *904,924.84* |
| *நடைமுறைக் கணக்கு இல 1667 இலங்கை வங்கி, நிறுவனக் கிளை* | *1,222,056.52* | *2,140,477.33* |
| *கையிலுள்ள காசு* | *91,473.87* | *1,0055,802.54* |
| *தற்காலிக அழைப்பு வைப்புக்கள் – ஜாஎலைக் கிளை* | *39,800,000.00* | *34,000,000.00* |
| *தற்காலிக அழைப்பு வைப்புக்கள் –நிறுவனக் கிளை* | *39,500,000.00* | *34,000,000.00* |
| *அரசாங்க நிறுவன தற்காலிக மேலதிக நிதியம்* | *12,162,490.31* | *11,467,716.93* |
| | *95,484,490.31* | *105,890,568.07* |

## 14. இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையத்தின் 2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார ச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமைஅதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| මගේ අංකය / எனது இல. / My No. | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date |
|---|---|---|
| ரீஈசீ/பீ/என்ஈஆர்டீசீ/1/16/46 | | 2017 செப்தெம்பர் 24 |

தலைவர்,
இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையம்.

**இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2017 ஜுலை 13 ஆம் திகதி நிலையத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

2

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 பெற வேண்டிய கணக்குகள்**

நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த குறைபாடுகளுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய காலம் முடிவடைந்திருந்த 03 வாணிப செயற்திட்டங்களின் ரூபா 749,110 தொகைக்கான தடுத்து வைத்தல் பணம் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஜுலை 30 திகதி வரை உரிய நிறுவனங்களிலிருந்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலையத்தின் நிதி விளைவுகள் ரூபா 5,744,897 இற்கான பற்றாக்குறை ஒன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,238,655 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3,506,242 இனால் வளர்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்யும் போது மீளாய்வாண்டின் அரச மானியம் ரூபா 21,070,777 இனால் மற்றும் காலத்தேய்மான சீராக்கல் ரூபா 14,649,682 இனால் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 36,569,186 இனால் அதிகரித்தல் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 2,657,516 இனால் குறைவடைதல் இப் பற்றாக்குறை அதிகரிப்பதற்கு முக்கியமாக பாதித்திருந்தது.

முன்னைய ஆண்டினதும் கடந்த 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது, 2012 ஆண்டின் போது ரூபா 26,982,577 தொகைக்கான பற்றாக்குறை 2015 ஆண்டு அளவில் ரூபா 2,238,655 தொகை வரை குறைந்திருந்த போதிலும் 2016 ஆண்டின் போது அது மீண்டும் ரூபா 5,744,897 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்யும் போது 2012 ஆண்டின் போது ரூபா 179,994,271 தொகைக்கான நிலையத்தின் பங்களிப்பு இடையறாது வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 260,341,682 தொகையாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1974 இன் 14 ஆம் இலக்கம் மற்றும் 124/6 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் நிலையத்தை செயற்படுத்துவதன் பிரதான குறிக்கோள்களாவன,

- இலங்கையில் நவீனமய மற்றும் வடிவமைத்தல் திறமைகளுக்கு தைரியம் அளிப்பதன் மூலமும், உதவி வழங்குவதன் மூலமும், தொழில்நுட்பவியல் அபிவிருத்திக்கு தேவையான நிருவாக ரீதியான முறைமையினை ஏற்படுத்துவதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளல்.
- அரச மற்றும் தனியார் துறையின் பல்வேறு கைத்தொழில்களில் மற்றும் நிறுவனங்களின் தொழிநுட்பவியல், பொறியியல் மற்றும் ஆய்வுத் திறமைகளை ஒன்றிணைப்பதற்காக வசதிகளை ஏற்படுத்தல்.
- நாட்டின் மூலவள செல்வத்திற்கு மற்றும் தேசிய திட்டமிடலின் குறிக்கோள்களுக்கு இணங்கும் தொழிநுட்பம் சார் கலையினை மாற்றி இசைவுறுத்துவதற்கு மற்றும் அவற்றை பயன்படுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல்.
- அரச மற்றும் தனியார் துறைகளில் பொறுத்தமான நிறுவனங்களுக்கு நேரடியாக மற்றும் மறைவான முறையிலும் தொழிநுட்ப முறையினை மாற்றும் யுக்திகளை பரிசோதனை செய்தல் மற்றும் அந்த நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கள்.
- பொருத்தமான தொழிநுட்பவியல் முறையினை முன்னேற்றுவதன் மூலம் விஷேடமாக தொழில் உழைப்பு மற்றும் மூலப்பொருள் வளங்களின் மூலம் உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு ஆதரவு வழங்குதல்.

- விண்ணப்பிக்கும் போது மாதிரி இயந்திரங்கள் மற்றும் முன்னோடி இயந்திர அறைகள் சிக்கனத்துடன் திட்டமிடல், உற்பத்தி செய்தல் மற்றும் பரிசோதனை மேற்கொள்ளல்.
- பொறியியல் தொழிநுட்ப திட்டங்கள் மற்றும் ஆய்வுகள் மீதான தொழிநுட்ப தரவுகள் மற்றும் பதிவேடுகள் இடையறாது கணிப்பீடு செய்வதற்காக நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.
- அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் முயற்சிகளுக்கு இடையறாத உசாத்துணை சேவைகள் வழங்கள், பொறியியல் மற்றும் தொழிநுட்ப திட்டமிடல் அடிப்படை போலவே ஆய்வு இயலுமைகளை விரிவாக்குவதற்காக ஆய்வு விவகாரங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் பயிற்சி வழங்கள் விடயங்களை முன்னேற்றல்.

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் செயலாற்றுகையை பரிசோதனை செய்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 70 தொழிநுட்ப சாட்டுதல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் ரூபா 502,000 தொகை மற்றும் 137 அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தலினால் ரூபா 200,000 இற்கான வருமானமொன்றினை உழைப்பதற்கு இலக்காக இருந்த போதிலும், சில தொழிநுட்பங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் சில தொழில்நுட்பங்களுக்கு கேள்விகள் காணப்படாமையினால் 18 அனுமதிப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் ரூபா 76,000 தொகை மற்றும் 60 அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்ததன் மூலம் ரூபா 89,000 இற்கான வருமானம் ஒன்று மாத்திரம் உழைப்பதற்கு முடியுமாக இருந்தது.

(ஆ) நிலையத்தினால் அறிமுகப்படுத்திய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி 24 குறைந்த செலவில் நிர்மாண வேலைகள் மற்றும் பழுதுபார்த்தல் வேலைகள் வழங்கியதன் மூலம் ரூபா 68,000,000 இற்கான வருமானமொன்று 22 கட்டிட நிர்மாண வேலைகளுக்கு உசாத்துணை சேவைகள் வழங்கியதன் மூலம் ரூபா 6,160,000 இற்கான வருமானமொன்று மற்றும் பண்டங்கள்/ இயந்திரங்கள் மற்றும் கொங்கிரீட் துணைக் கருவிகள் வழங்கியதன் மூலம் ரூபா 7,800,000 இற்கான வருமானமொன்றினை உழைத்தல் இலக்காத இருந்த போதிலும், புதிய நிர்மாண வேலைகள் கவர்வதற்கு முடியாமை, பொறியியல் மற்றும் தொழிநுட்பவியலாளர்களை தடுத்து வைக்க முடியாமையின் காரணமாக நெருங்கியிருந்த இலக்குகளாவன. 12 நிர்மாண வேலைகளில் இருந்து

ரூபா 21,165,000 உம், இயந்திரங்கள் வழங்கியதன் மூலமாக ரூபா 2,400,000 உம் மற்றும் 16 உசாத்துணை சேவைகளின் மூலம் ரூபா 2,780,000 இற்கான வருமானம் மாத்திரமே.

(இ) திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் கைத்தொழல்களுக்கு ஆலோசனை வழங்கும் துறையின் மூலம் மேற்கொள்ளும் பல்வேறு அச்சுகள் வடிவமைப்பதற்காக 140 வேலைக் கட்டளைகள் பெற்றதன் மூலம் ரூபா 7,500,000 இற்கான வருமானமொன்றினை உழைத்தல் இலக்காக இருந்த போதிலும், உரிய சந்தர்ப்பங்களில் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படாமையால் 40 சேவைகள் வழங்கியதன் மூலம் ரூபா 1,967,000 இற்கான வருமானம் ஒன்றினை மாத்திரம் உழைத்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்ப்பார்த்திருந்த 12 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 32 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு 55 சதவீதம் முதல் 72 சதவீதம் வரை மற்றும் 78 சதவீத முன்னேற்றம் ஒன்றினை எதிர்ப்பார்த்த 3 செயற்திட்டங்கள் நெருங்கிய முன்னேற்றம் முறையே 16 சதவீதம், 55 சதவீதம் மற்றும் 30 சதவீதம் மாத்திரமாகும். நிலையத்தின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர் விளகிச் செல்லல் மற்றும் வெளிசாராருடன் முறையான இணக்கப்பாட்டுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை இதற்கான காரணமாக இருந்தது.

(உ) இறக்குமதி செய்யப்பட்ட பட்டரிகளின் நியமங்களை பரிசோதனை செய்யும் வாணிப செயற்திட்டத்தின் மூலம் கிடைத்த வருமானம் 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2014, 2015 மற்றும் மீளாய்வாண்டின் போது முறையே 79 சதவீதத்தினால், 87 இனால் மற்றும் 60 இனால் குறைவடைந்திருந்தது. சில பரிசோதனைக்காக வசதிகள் காணப்படாமை, ஆய்வு அறிக்கைகள் தாமதமடைதல் காரணத்தினால் முக்கிய சேவை நாடும் நிறுவனம் ஆகிய இலங்கை கட்டளைகள் நிறுவனத்திலிருந்து கிடைத்த கட்டளைகளின் எண்ணிக்கை குறைந்திருந்தது. மேலும், கட்டளைகளை பெறுவதற்காக சேவை நாடும் நிறுவனத்துடன் இணக்கமொன்று வராமல் இச் செயற்திட்டங்களுக்காக 2011 ஆண்டின் போது ரூபா 10,669,625 இற்கான கிரயத்திற்கு பட்டரி பரிசோதனை செய்யும் உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் அவ் உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரத்தொட்டுவில மிதிகமுவ ஓடையில் சுயமாக இயங்கும் மூடி ஒன்றினை கொண்ட படலை ஒன்றினை பொருத்தும் வாணிப செயற்திட்டம் 2013 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 பெப்ரவரி மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு எதிர்ப்பார்த்திருந்த போதிலும், அதனைப் பூர்த்தி செய்வதற்கு 2017 ஜூலை வரை 03 வருடங்கள் கடந்துள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பீட்டு வருமானம் ரூபா 227,000 தொகை மற்றும் மதிப்பீட்டு செலவு ரூபா 187,838 தொகை எனினும் முறையான ஆய்வு ஒன்றின் பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்படாமையினால் ரூபா 412,417 இற்கான உள்ளவாறான கிரயமொன்றினை மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) நிலையத்தினால் ரன்டம்பே மாணவ படைச் சேனை நிலைய உயிர்வாயு அலகினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 2014 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2015 பெப்ரவரி மாத இறுதியில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஜூலை வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், செயற்திட்டம் செயற்படாத செயற்திட்டமொன்றெ‌ன காணப்பட்டது. இரு சாராருடன் முறையான உடன்படிக்கையொன்று அல்லது மேலதிகக் கிரயம் மேற்கொள்ளல் தொடர்பாக தெளிவான இணக்கமொன்று மேற்கொண்டிருக்காததுடன் செயற்திட்டத்தின் மதிப்பீட்டு வருமானம் ரூபா 104,995 தொகை மற்றும் மதிப்பீட்டுச் செலவு ரூபா 95,450 தொகையெனினும் மீளாய்வாண்டின் இறுதி அளவில் ரூபா 122,063 இற்கான கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தின் பிரதான இருப்புக் களஞ்சியத்தில் ரூபா 404,404 தொகைக்கான 104 இருப்பு விடயங்கள் 05 வருடங்கள் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) திட்டங்கள் வடிவமைத்தல் மற்றும் ஆலோசனைகள் வழங்கள் துறையில் ரூபா 10,459,163 தொகை பெறுமதியான 05 உபகரணங்கள் 2015 ஆண்டு

முதல் விளைவற்றும் மற்றும் ரூபா 51,267,312 தொகை பெறுமதியான 05 உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

உரிய சந்தர்ப்பத்தில் இயந்திரங்களை பழுதுபார்க்காமை, மதிப்பீடு போதியளவினதாக காணப்படாமை, வெளித் தரப்பினருடன் முறையான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த 4 வாணிப செயற்திட்டங்களில் இருந்து கிடைத்திருந்த ரூபா 5,643,133 வருமானத்தை மிகைத்து ரூபா 7,929,857 தொகைக்கான செலவு ஒன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தமையால் ரூபா 2,286,724 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**4.5 தாமதமாகிய செயற்திட்டங்கள்**

வெளித் தரப்பினருடன் முறையான உடன்படிக்கையொன்று அல்லது இணக்கமொன்று இன்மையால் 2015 மற்றும் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானித்திருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 15,158,706 தொகைக்கான 04 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதித் தினம் வரை பூர்த்தி செயற்படாமல் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டம் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது. அச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டிய நாளை நீடிப்பதற்கு அல்லது செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு மற்றும் உள்ளவாறான பெறுமதிகளிடையே 15 சதவீதம் முதல் 67 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினீ விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## 15. கணக்காளர் நாயகத்தின் நிதி அறிக்கை மீதான பணிப்பாளர் சபையின்

***இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2016 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) உறுப்புரையின் அடிப்படையிலான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை***

---

*இதற்கான பதில் உப தலைப்பு இலக்கங்கள் கணக்காய்வாளர் நாயகத்தின் 2017 செப்டம்பர் 24 ஆந் திகதிய கடிதத்துடன் தொடர்புடையது.*

*2. நிதிக் கூற்றுக்கள்*

*2.1 கருத்துக்கள்*

*2.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்*

*சாய்ந்தமருது விதாதா நிலைய நிர்மாணம், திம்புலாகல மற்றும் அலஹர தகனக்கிரியை மண்டப நிர்மாணம் என்பனவே இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மூன்று செயற்திட்டங்களாகும். சாய்ந்தமருது விதாதா மத்திய நிலையத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்ட தொகை எமது அமைச்சுக்கு கிடைக்க வேண்டும். அமைச்சின் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த பணத்தை வழங்குவதாக அமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தகனக் கிரியை மண்படபங்களுக்கான நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தையும் வழங்குமாறு எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் கோரிய போதிலும் இது வரையில் கிடைக்கவில்லை. இது தொடர்பில் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

*3. நிதி மீளாய்வு*

*3.1 நிதிப் பெறுபேறுகள்*

*நிதிப் பெறுபேறுகள் தொடர்பான அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன்.*

*மீளாய்வாண்டில் அதற்கு முந்திய 4 வருடங்களிலும் பங்களிப்புக்கள் தொடர்பில உடன்படுகின்றேன.*

*4. தொழிற்பாட்டு மீளாய்வு*

*4.1 செயலாற்றுகை*

*(அ) ஒப்படைப்பதற்கு எதிர்பார்த்த சில புதிய தொழில்நுட்பங்களைச் சிறப்பாகப் பூர்த்தி செய்ய முடியாமல் போனமையினாலும், எதிர்பார்த்த முறையில் சில தொழில்நுட்பங்களுக்கு கேள்வி காணப்படாமையினாலும், இலக்குகளை அடைய முடியாமல் போனது. எவ்வாறாயினும், எதிர்கால இந்த நிலைமையை மேற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

*(ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிர்மாணத் துறைகளில் காணப்பட்ட மந்தமான போக்கு மற்றும் எமது நிறுவனத்திற்கான பொறியியலாளர்களையும் தொழில்நுட்பவியலாளர்களையும் ஆட்சேர்ப்புச் செய்தில் காணப்பட்ட சிரமங்கள் ஆகிய காரணங்களினால் மேற்படி இலக்குகளை*

*அடைவது சாத்தியப்படவிலலை.*

*(இ) சாயம் மற்றும் அச்சு உற்பத்தி செய்யும் இயந்திரசாலை 2000 ஆம் ஆண்டில் நிறுவப்படக் காரணம் அக்காலப்பகுதியில் மிகப் புதியதாகக் காணப்பட்ட இத்தொழில்நுட்பம் இலங்கையில் பிரபல்யமடைந்திருக்காததனால் அதனைப் பிரபல்யப்படுத்துவதற்காகும். இந்த இயந்திரசாலை அமைத்து அதன் மூலம் தொழில்நுட்பம் தொடர்பில் இலங்கையின் கைத்தொழிலளார்களுக்கு அறிவூட்டியதன் பின்னர், தற்போது தனியார் தொழில்முயற்சியாளர்கள் பலர் இத்தகைய இயந்திரசாலைகளை பாரியளவில் அமைத்து சேவைகளை வழங்கி வருகின்றார்கள். இந்த இயந்திரசாலையை அமைத்ததன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோளும் அதுவாகும். இவ்வாறு தனியார் துறையினரிடம அதிக வசதிகள் கொண்ட அதிகமான இயந்திரங்கள் காணப்படுவதனால் எமக்கு கிடைக்கின்ற கொள்வனவுக் கட்டளைகள் குறைவடைந்துள்ளன. மேலும் எம்மிடம் காணப்படும் இரண்டு சீஎன்சீ இயந்திரங்களில் ஏற்பட்ட கோளாறுகளைச் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனாலும் கிடைக்கக் கூடிய கொள்வனவுக் கட்டளைகளின் எண்ணிககை குறைந்துள்ளது.*

(ஈ) *மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 12 செயற்திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.*

| | | |
|---|---|---|
| *1. RED/RES/124/2014* | - | *Development of an Aquatic Weeder* |
| *2. E&EM/RES/76/2014* | - | *Smart Parking Monitoring System* |
| *3. MD/RES/145/2014* | - | *Field Trial & Dissemination of Milking Machine* |
| *4. MD/RES/80/2015* | - | *Development of Automated Water Regulation Method for Flap Gate* |
| *5. E&EM/RES/77/2014* | - | *Study & Development of Image Processing* |
| *6. A&PHT/RES/77/2016* | - | *Modified Version of Semi-Automatic String Hopper Machine* |
| *7. A&PHT/RES/74/2016* | - | *Development of Smoked fish Processing Unit* |
| *8. RED/RES/78/2016* | - | *Advancement of NERD Cremator for Improved* |
| *9. RED/RES/81/2016* | - | *Development of a Roof Tile Drier* |
| *10. CVL/RES/111/2016* | - | *Pre-stressed Masonry Retaining Wall* |
| *11. MD/RES/79/2016* | - | *Data Acquisition Module* |
| *12. DF&CI/RES/91/2016* | - | *Artificial Arm for Disables* |

*அவற்றில் பின்வரும் எட்டுச் செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை அடைய முடியாமல் போனமைக்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

| | | |
|---|---|---|
| *1. RED/RES/124/2014* | - | *Development of an Aquatic Weeder* |
| *2. E&EM/RES/76/2014* | - | *Smart Parking Monitoring System* |
| *3. MD/RES/80/2015* | - | *Development of Automated Water Regulation Method for Flap Gate* |
| *4. A&PHT/RES/77/2016* | - | *Modified Version of Semi-Automatic String Hopper Machine* |
| *5. A&PHT/RES/74/2016* | - | *Development of Smoked fish Processing Unit* |
| *6. CVL/RES/111/2016* | - | *Pre-stressed Masonry Retaining Wall* |
| *7. MD/RES/79/2016* | - | *Data Acquisition Module* |
| *8. DF&CI/RES/91/2016* | - | *Artificial Arm for Disables* |

*ஆய்வுச் செயற்திட்டங்களை மேற்கொள்ளும் போது ஏனைய செயற்திட்டங்களைப் போலன்றி எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட போதிலும் இலக்குகளை அடைவது பெரும்பாலும் சாத்தியப்படுவதில்லை. நாங்கள் ஆய்வை மேற்கொள்ளும் தொழில்நுட்ப முறை, தெரிவு செய்யும் மூலப் பொருளின் தரம், பங்குபற்றும் தொழிலாளர்களின் அறிவு மற்றும் அனுபவம், எடுகோளாகக் கொண்ட விடயங்கள் என்பன செயற்திட்டத்தின் முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் காரணிகளாகும். மேற்குறித்த ஆய்வுச் செயற்திட்டங்களின் திட்டமிடப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்களின் படி மேற்கொள்கின்ற போது உரிய சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் கிடைக்காமையினால் காலம் நீண்டு கொண்டு சென்ற போதிலும் முன்னேற்றம் மாற்றமடையமாட்டாது. மேற்குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தில் மேற்குறித்த காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன. அவை தவிர, உரிய செயற்திட்டங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் செல்கின்றமையும் அவற்றுக்கு வேறு பொறியியலாளர்களை பயன்படுத்த முடியாமல் போகின்றமையும் செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை இலக்காகக் கொள்ள முடியாமல் போவததில் பாரிய தாக்கம் செலுத்தும் காரணிகளாகும்.*

***9. MD/RES/145/2014 - Field Trial & Dissemination of Milking Machine***

*இது தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபையும் நேரட் நிலையமும் கூட்டாக மேற்கொள்ளும் ஒரு செயற்திட்டமாகும். ஏற்கனவே 10 இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் களப் பரிசோதனை மேற்கொள்வதற்குப் பொருத்தமான இடங்களை திட்டமிட்ட காலப் பகுதியில் முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபையினால் கண்டுபிடிக்க முடியாது போனதால் முன்னேற்றம் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும் நேரட் நிறுவனம் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து களப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது.*

***10. E&EM/RES/77/2014 - Study & Development of Image Processing***

*நோயாளர்களின் காயங்களின் படங்களின் மூலம் தரவுகளைப் பெற்று பகுப்பாய்வு செய்து நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காக இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அடிப்படை உபகரணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், களப் பரிசோதனைகளுக்குப் பொருத்தமான வாட்டு/ கிளினிக் ஒன்றைத் தேடுவது தற்போது சிரமமாகவுள்ளது. ஏற்கனவே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வைத்தியசாலையொன்றில் பொருத்தமான கிளினிக் ஒன்று கிடைத்து களப்பரிசோதைன மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் இச்செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.*

***11. RED/RES/78/2016- Advancement of NERD Cremator for Improved environmental performances***

இச்செயற்திட்டம் நேர்ட் தகனக்கிரியை மண்டபங்களின் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டதுடன் எம்மால் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை பரீட்சித்துப் பார்ப்பதற்குப் புதிய தகனக்கிரியை மண்டபமொன்று தேவைப்படுகின்றது. அதற்காக புதிய தகனக்கிரியை மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்கு குருநாகல் பிரதேச சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டு பின்னர் நடுவில் இடைநிறுத்தப்பட்டது. தகனக்கிரியை மண்டபத்தை உரிய நேரத்தில் நிர்மாணிக்காமையினால் ஆய்வுச் செயற்திட்டம் மிகவும் குறைந்த முன்னேற்றத்துடன் காணபபட்டதுடன் குருநாகல் பிரதேச சபை மீண்டும் இதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. தற்போது தகனக்கிரியை மண்டபத்தின் கட்டடம் பூரத்தியடைந்துள்ளதுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திப்பட்டதன் பின்னர் செயற்திட்டத்தை மீண்டும் சுமுக நிலைக்கு கொண்டு வர முடியும்.

***12. RED/RES/81/2016 - Development of a Roof Tile Drier for traditional roof tile industry: A collaborative project with NERDC, Ministry of Industry and Commerce (MOIC), and Roof Tile Industry Association (RTIA)***

இச்செயற்திட்டம் அடைந்துள்ள முன்னேற்றம் 40% ஆகும். இச்செயற்திட்டத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, ஓட்டு உற்பத்தியாளர்கள் சங்களம் என்பனவும் பங்கேற்கின்றன. நேர்ட் நிறுவனம், ஓட்டு உற்பத்தியாளர்கள் சங்கம், வர்த்தக கைத்தொழில் அமைச்சு என்வற்றுக்கிடையிலான ஒப்பந்தத்தை தயாரித்தல், கைச்சாத்திடுதல் என்பவற்றை திட்டமிட்ட காலப் பகுதியினுள் மேற்கொள்ள முடியவில்லை.

இதில் பின்வரும் மூன்று செயற்திட்டங்களும் உள்ளடங்கும்:

***1. Design and Fabrication of a Hyperbaric Oxygen Chamber for Hyperbaric Oxygen Therapy***

இச்செயற்திட்டத்தினால், 2010 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க உரிய முன்னேற்றத்தை அடைய முடியாமல் போனவைக்கு பின்வரும் காரணங்கள் ஏதுவாயின.

சில பகுதிகளை உற்பத்தி செய்வதற்காகத் திட்டமிட்டதை அதிக காலம் செலவாகியமை. இந்த உபகரணத்தினுள் நோயாளிகளை அனுப்பி குறித்துரைக்கப்பட்ட அமுக்கமொன்றின் கீழ் சிகிச்சையளிக்கப்படும். இந்த உபகரணத்தின் துல்லியத்தன்மை மற்றும் பாதுகாப்பு மிகவும் முன்னுரிமை பெறுவதனால் விசேடமான மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. அந்த மூலப் பொருட்களைத் தெரிவு செய்வதற்கு அதிககாலம் எடுத்தமையும் தேவையான வைத்திய ஆலோசனைகள் உரிய நேரத்தில் கிடைக்காமையும் இலக்குகளை அடைய முடியாமல் போனமைக்கு காரணமாகின. 2017 ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

***2. Development of an automated water regulating method with flap gate to mitigate flood and salt water intrusion to uplands through canal opened to sea in coastal planes***

இச்செயற்திட்டம் முக்கியமான இரண்டு பகுதிகளைக் கொண்டது.

1. **உவர்த் தன்மை கொண்ட கடல் நீர், வறட்சி காலத்தில் கால்வாய்களில் செல்வதையும் மழை காலத்தில் வெள்ளத்தையும் கட்டுப்படுத்துவதற்காக நேர்ட் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நீரக் கட்டுப்பாட்டு கதவைப் பொருத்துதல்.**

   இந்தக் கதவைப் பொருத்துவதற்கான செலவு கமநல சேவைகள் திணைக்களத்தினால் செலுத்தப்படுவதுடன் கதவைப் பொருத்துவதற்கான ஏனைய சிவில் பொறியியல் நிர்மாணங்கள் கமநல சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

**2. இந்த நீர்க் கட்டுப்பாட்டு வான் கதவு பொருத்தப்பட்டதன் பின்னர் கடல் நீர், கால்வாயின் ஊடாக உள் வருவதைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஆய்வுச் செயற்திட்டம்**

இந்தச் செயற்திட்டம் எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நோக்களுக்காக கமநல சேவைகள் திணைக்களத்தினால் காலி, வக்கல்மோதரையில் கால்வாய் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் எமது நிறுவனத்தினால் அவிவிடத்திற்குத் தேவையான நீர்க் கட்டுப்பாட்டுக் கதவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும் அந்த இடத்திற்குப் பொறுப்பான மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் கமநல சேவைகள் திணைக்களத்திற்கும் இடையிலான தொடர்புகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் சாதாரண உயர்த்துத் தாழ்த்தும் கதவு ஒன்றை நிர்மாணிப்பதற்காக பிறிதொரு நிறுவ வழங்கி அது செய்து முடிக்கப்பட்டுள்ளது. அதனால், கமநல சேவைகள் திணைக்களம் எமக்கு எமது ஆரம்ப ஆய்வு மூலம் கதவைப் பொருத்துதவற்கு பெந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிலையத்தின் நீர் வெளியேற்றும் கால்வாயொன்று தெரிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் நாம் அவ்விடத்தில் உரிய கதவுக்குத் தேவையான மாற்றங்களைச் செய்ததுடன் உரிய கொங்கிரீட் கட்டமைப்பின் அளவீடுகள் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. எனினும் இது வரையில் கொங்கிரீட் கட்டமைப்பு அவர்களால் நிர்மாணிக்கப்படவில்லை. இந்த கொங்கிரீட் கட்டமைப்பு நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் எமது ஆய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

***3. Study and Development of Image Processing Solution for Wound Treatment***

நோயாளர்களின் காயங்களை வர்ண நிழற்படம் பிடித்து குறித்த காயத்தின் நிலைமையைப் பரிசோதிப்பதற்கு வைத்தியர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பது இச்செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாக உள்ளதுடன் சிகிச்சையளிக்கும் வைத்தியரின் தேவையின் அடிப்படையில் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எம்மால் இதற்காக தொழில்நுட்ப முறையொன்று கண்டுபிடிக்கப்பட்டதுடன் இந்த முறையின் ஊடாகக் களப் பரிசோதனை மேற்கொள்வது இச்செயற்திட்டத்தின் அடுத்த கட்டமாகும். சீதுவை விஜயகுமாரதுங்க வைத்தியசாலையில் ஆரம்ப ஆய்வுகள் நடாத்தப்பட்டதுடன் அங்கு காணப்படும் அதிகரித்த நோயாளிகளின் காரணமாக இடவசதி போதாத பிரச்சினை ஏற்பட்டது.

இதற்காக நாங்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வசதிகளைப் பெறுவதற்குப் பல்வேற வைத்தியர்களுடனும் உரிய நிறுவனங்களுடன் பல தடவைகள் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் அதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இறுதியில் எமது தேவை தொடர்பில் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டதுடன் அதன் போது அவர் எமது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு உடன்பட்ட போதிலும் பல தடவைகள் விசாரித்த போதிலும் அவர்கள் எமது கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

மருத்துவ ஆய்வு நிறுவனம் இதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது என்று எம்முடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது கூறியது. இந்நிலைமைகளின் கீழ் இச்செயற்திட்டத்தை முன்னெடுப்பது சாத்தியப்படவில்லை.

எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இச்செயற்திட்டத்திற்கு 8700 ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் குறித்த சுகாதாரப் பிரிவுகளின் பங்களிப்பைப் பெற்று செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அவ்வாறில்லாதவிடத்து இச்செயற்திட்டை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) இந்த பற்றரி டெஸ்டரை நிறுவுவதற்கு முன்னர் அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. (சுமார் 5 வருடங்களுக்கு முன்னர்) கடந்த இரண்டு வருடங்களில் எந்தவொரு தாமதமும் ஏற்படவில்லை. வருமானம் குறைவதற்குக் காரணம் எமக்குக் கிடைக்கும் கொள்வனவுக் கட்டளைகளின் எண்ணிக்கை குறைந்தமையாகும். இவ்வாறு கொள்வனவுக் கட்டளைகள் குறைவடைந்தமையின் காரணமாக இந்த உபகரணங்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

(அ) இது ஒரு வர்த்தகச் செயற்திட்டமாக இருந்த போதிலும் இங்கு புதியதொரு முறை பின்பற்றப்பட்டுள்ளது. வடிகாலொன்றில் நீர் காணப்படும் போதே உவர்நீர் கட்டுப்பாட்டுக் கதவு பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த இடம், கிரேன்கள் போன்றவற்றைக் கொண்டு செல்வதற்கு மிகவும் சிரமமான ஒரு பிரதேசத்தில் அமைந்துள்ளதனாலும், அடிக்கடி ஏற்பட்டன. வெள்ளப் பெருக்குகளினாலும் குறித்த நிர்மாணப் பணிகளை ஒரே தடவையில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் கால தாமதமும் அதிகரித்த செலவும் ஏற்பட்டது.

(ஆ) இச்செயற்திட்டத்திற்கான மதிப்பீடானது செரிமாணத் தாங்கியை பார்வையிட்ட சந்தர்ப்பத்தில் கழிவுகளை முழுமையாக அகற்றி தாங்கியின் உட்பகுதியை சுத்தம் செய்து சிறு திருத்த வேலைகளைச் செய்வதற்காகச் செய்யப்பட்டதாகும்.

திருத்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த செரிபாட்டு தாங்கிகள் முழுமையாக வெறுமையாக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. அதன் போது செரிமானத் தாங்கிகளின் சுவர்களில் பாரிய பிளவுக் கோடுகள் காணப்பட்டதுடன், அவற்றை நாங்கள் மதிப்பீடு செய்த காலம் மற்றும் தொகைக்குள் செய்ய முடியாது என்பது தெளிவாகியதுடன், இது தொடர்பில் ரன்டம்பே மாணவர் படை உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன் நாங்கள் மிகவும் கவனமான முறையில் திருத்த வேலைகளை மேற்கொள்ளப்பட்டு 02 தாங்கிகளின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

அறவிடப்பட வேண்டிய பாக்கிப் பணத்தைப் பெறுவதற்காகவும் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நாங்கள் உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதிலும் இது வரையில் அவர்களிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் இது வரையில் நாங்கள் எமது பாக்கிப் பணத்தைப் பெறுவதற்கு பல தடவைகள் முயற்சி செய்த போதிலும், அது தொடர்பில் செயற்திட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. அதனால் இந்த வருடத்தில் இப்பிரச்சினையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4.3 செயற்பாடற்ற மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்கள்

(அ) நிலையத்தின் தொகைக் கையிருப்புக் களஞ்சியத்திலுள்ள சில பொருட்கள் அசையா நிலையை அடைந்துள்ளமைக்கு காரணம் அவற்றின் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமையாகும். எதிர்காலத்தில் இவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) இந்த செயற்பாடற்று காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள உபகரணங்கள் ஏனைய பிரதான இயந்திரங்கள் செயற்படும் போது அவசியப்படும் துணை உபகரணங்களாகும். இந்த துணை உபகரணங்கள் பிரதான இயந்திரங்களின் செயற்பாட்டுக்கு அத்தியவசியமாக இருப்பதனால், அந்த உபகரணங்கள் மூலம் அதிக பயன்களை எதிர்பார்க்க முடியாது. இந்த இயந்திரங்கள் செயற்பாடற்ற நிலையில் இல்லாததுடன் தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த 5 இயந்திரங்களும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதற்குப் பின்வரும் விடயங்கள் ஏதுவாக அமைந்தன.

இப்பிரிவு 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அக்கால அதிகமான கொள்வனவுக் கட்டளைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அக்காலத்தில் மதிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவுக் கட்டளைகளின் எண்ணிக்கை எமக்கு கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக பெரும்பாலான நிறுவனங்களில் CNC தொழில்நுட்பமும் இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றமையாகும். அதனால் எமக்கு கிடைக்கக் கூடிய கொள்வனவுக் கட்டளைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அது எமது இயந்திரங்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

மேலும் Wire Cut மற்றும் EDM ஆகிய இரண்டு பிரதான இயந்திரங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகளின் காரணமாக அந்த கோளாறுகள் சீர்செய்யப்படும் வரையில் எமக்குக் கிடைத்த சில கொள்வனவுக் கட்டளைகளை பொறுப்பேற்க முடியாமல் போனது. அதுவும், இந்த இயந்திரங்களின் குறை பயன்பாட்டு நிலைக்குக் காரணமாகியது.

ஆடை உற்பத்தித் துறைக்கான அச்சுக்களை நிர்மாணிப்பதற்காகவே Scanning இயந்திரம் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வாறு உருவாக்கப்படும் அச்சுக்களை நீண்ட காலம் பயன்படுத்த முடியுமாக இருப்பதனால் மீண்டும் அச்சுக்களை உற்பத்தி செய்வது குறைவடையும். அதனால், எமக்கு கிடைக்கப்பெறும் கொள்வனவுக் கட்டளைகளின் எண்ணிக்கை குறைவடையும். அதனால் Scanning இயந்திரம் குறை பயன்பாட்டு நிலையை அடைந்தது.

*4.4 அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்*

*................................*

*பின்வரும் 4 செயற்திட்டங்களும் இவ்வாறு நட்டமடைந்ததாக கூறப்பட்டுள்ளது.*

1. *Design& Manufactures Modules & Dies*
2. *Flat gate Athuruwella*
3. *Flap Gate Vilgoda*
4. *Bio gas digesters Kurunagala*

***Design & Manufactures Modules & Die***

*நாங்கள் கொள்வனவுக் கட்டளைகளைப் பொறுப்பேற்கின்ற போது நிறுவனத்தின் இயந்திரங்களையும் மனித வளங்களையும் பயன்படுத்துவதாக உத்தேசித்து ஆறு இலட்சம் ரூபா செலவாக மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இந்தக் கொள்வனவுக் கட்டளையைப் பூர்த்தி செய்கின்ற போது எமது குறித்த இயந்திரங்கள் சில செயலிழந்தமையினால் வேறு நிறுவனங்களின் சேவையைப் பெற வேண்டி ஏற்பட்டது. அதற்காக 200,772.00 ரூபாவைச் செலுத்த வேண்டி ஏற்பட்டதுடன் அத்தொகை எம்மால் மதிப்பிடப்பட்ட தொகைக்கு மேலதிகமானதாகும். குறித்த நுகர்வோனின் கடுமையான தேவையின் அடிப்படையில் எதிர்பார்த்த தினத்தில் இப்பணியைப் பூர்த்திசெய்ய வேண்டி ஏற்பட்டமையினால் ஏற்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு மேலும் நிதி செலவாகியது. அதனால், மதிப்பிடப்பட்ட செலவுகளை விட அதிகமான செலவுகள் ஏற்பட்டன.*

***Flap gate Athuruwella***

*இந்த வர்த்தகச் செயற்திட்ட்தின் நட்டம் 385,306/- ரூபாவாகும். இதற்குக் காரணம் மணல் மூடைகளைப் போட்டு வடிகாலின் நீரைப் பகுதிகளாகப் பிரிப்பதற்கு எதிர்பார்த்ததை விட அதிக காலமும் ஊழியமும் செலவாகியமையாகும்.*

***Flap gate Vilgoda***

*இங்கு அடையாளம் காணப்படாத ஒரு குழுவினரால் கதவுக்கான சீரமைப்புக்களைப் பொருட்படுத்தாது ஒரே தடவையில் (நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்பியுள்ள போது) திறந்தமையினால் கதவை இயக்கும் இயந்திரத்திற்குச் சேதம் ஏற்பட்டமையினால் அதனைச் சீர்செய்து கதவை இயல்புநிலைக்குக் கொண்டுவதற்கு அதிக காலமும் ஊழியமும் செலவாகியது.*

***Biogas Digester Kurunegala***

*செரிமானத் தாங்கித் தயாரிப்பதற்காக ஆரம்பத்தில் தீரமானிக்கப்பட்ட இடம் வைத்தியசாலையின் தேவையின் அடிப்படையில் மாற்றப்பட்டதனால் செரிமானத் தாங்கி நிர்மாணத்திற்குத் தீர்மானிக்கப்பட்ட இடத்தில் பெக்ஹோ இயந்திரங்களைப் பயன்படுத்தி குழிகள் தோண்டுவது சிரமமாகியது (இரண்டு வாட்டுக்களின் பின் பகுதியில் செரிமானத் தாங்கி நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையினால்)*

*அதனால், செரிமானக் குழிகளைத் தோண்டுவதற்காக பெக்ஹோ இயந்திரங்களைத் தோண்டுவதாக மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட போதிலும் பெக்ஹோ இயந்திரங்களை வேலைத் தளத்தினுள் கொண்டு செல்ல முடியாமையினால் மனித ஊழியத்தைப் பயன்படுத்தி அப்பணியை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.*

*செரிமானக் குழிகள் தோண்டியதன் பின்னரும், அதிக மழை நிலவியதனால் குழிகளின் கரைகள் உடைந்து செரிமானக் குழிகளில் மண்ணும் நீரும் நிரம்பின. பின்னர் மனித ஊழியத்தைப் பயன்படுத்தி அவை அகற்றப்பட்டன.*

*செரிமானக் குழிகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களை வேலைத் தளத்தினுள் கொண்டு செல்வதற்கு முடியமாமையினாலும் மழையின் காரணமாகவும் மூலப்பொருட்களைப் பெறும் பணி மனிதர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.*

*எதிர்பாராத இந்த நிலைமைகளின் காரணமாக தொழிலாளர் கூலி மற்றும் அவர்களின் ஏனைய கொடுப்பனவுகளுக்காக அதிக பணத்தை செலவிட்டமையினால் இச்செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட தொகையை அதிக தொகை செலவாகியது. இந்த மேலதிக செலவுத் தொகையை நாங்கள் வைத்தியசாலை அதிகாரிகளிடம் கோரிய போதிலும் அவர்கள் அதற்குச் சாதகமான பதிலை வழங்கவில்லை.*

எவ்வாறாயினும், இச்செயற்திட்டம் வைத்தியசாலையின் கழிவுகளைப (எஞ்சும் உணவுகள் மற்றும் அடுக்களையில் சேரும் கழிவுகள்) பயன்படுத்தி உயிர்வாயு உற்பத்தி செய்வதற்காக வைத்தியசாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்திட்டமாகும் இத்தகைய செயற்திட்டங்கள் மூலம் தொழில்நுட்பம் பிரபல்யமடைவைதயும், அதன் மூலம் தேசிய ரீதியில் நிகழும் சேவையையும் கவனத்தில் கொண்டு நாங்கள் இச்செயற்திட்டத்தை முன்னெடுத்தோம்.

*4.5* <u>தாமதடைந்த செயற்திட்டங்கள்</u>

இவ்வாறு தாமதடைந்ததாக 4 செயற்திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**RED/RES/92/2013 Implementing fuel wood chip feeding system**

தேயிலையைக் உலர்த்துவத்றகான வெப்பத்தை வழங்குவதற்காக க்ளிடிசியா விறகுக் கட்டைகளை விறகுச் சூளைக்கு அனுப்புவதற்காக எமது நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இயந்திரம் பலாங்கொடை New Hope Well தேயிலைத் தொழிற்சாலையில் பொருத்தி காட்சிப்படுத்துதல் இந்தசெயற்திட்டத்தின் குறிக்கோளாரகும்

பலாங்கொடை New Hope Well தேயிலைத் தொழிற்சாலையுடன் இணைந்து இச்செயற்திட்டத்தின் களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், அத்தொழிற்சாலைத் தரப்பினர் இவ் ஆய்வுச் செயற்திட்டத்திற்குத் தேவையான சந்தர்ப்பத்தை வழங்காமையினால் இச்செயற்திட்டத்தை எதிர்பார்த்தவாறு 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய முடியவில்லை.

அதன் பின்னர் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேயிலைத் தொழிற்சாலையுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது இச்செயற்திட்டத்தை இத்தொழிற்சாலையில் மேற்கொள்வதற்கு அவர்கள் தமது விருப்பமின்மைய வெளிப்படுத்தினர். முன்வைக்கப்பட்ட மாற்றீடுகளுக்கும் இரு தரப்பினரும் உடன்பாடு காணாமையினால் இச்செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு இச்செயற்திட்டம் செயற்பாட்டில் இருக்காமையினால் கால நீடிப்பு பெறப்படவில்லை.

**RED/COM/11/121/2014 - Flap gate for Waggalmodara**

இந்த கதவுப் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் பொருத்தும் பணி மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்குக் காரணம், இந்த கதவைப் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இடம் இதன் ஒரு தரப்பான கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் மாற்றப்பட்டமையாகும் ( காலி வக்கல்மோதரை முதல் பெந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிலையத்தின் கழிவுநீர் கால்வாய் வரையில்) கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் இந்த இடத்தில் கொங்கிரீட் கட்டமைப்பொன்று நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அதனைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. அதனால் இந்தக் கதவைப் பொருத்தி பூர்த்தி செய்ய முடியவில்லை. இந்த கொங்கிரீட் கட்டமைப்பு அவர்களால் நிர்மாணிக்கப்படும் வரையில் தேவையான செயற்பாடுகள் எதுவும் காணப்படாமையினால் செயற்திட்டக் காலம் நீடிக்கப்படவில்லை.

**RED/COM/02/95/2015 - Repairing of stack of incinerator of Kurunegala hospital**

பின்வரும் காரணங்களினால் உரிய காலத்தினுள் இச்செயற்திட்டத்தை பூர்த்தி செய்வது சாத்தியப்படவில்லை.

1. குருநாகல் ஆஸ்பத்திரியின் பெர்னர் இயந்திரம் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வந்தமையினால் திருத்த வேலைகளுக்காக அதனை நிறுத்துவதற்காகவும் தேவையான வசதிகளை வழங்குவதற்காகவும் ஒரு நாளை ஒதுக்குவதற்கு முடியமாமை போனமை 2 எமது நிறுவனத்தின் பெருந்தொகையான ஊழியர்களும் வளங்களும் வர்த்தகச் செயற்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றமை.

3. இடைப்பட்ட காலத்தில் அவர்கள் 2 நாட்களை ஒதுக்கிய போதிலும் எமது வேலைப்பளுவின் காரணமாக இப்பணியைப் பூர்த்தி செய்ய முடியாது போனதுடன், மூன்றாவது சந்தர்ப்பத்தில் அதாவது 2017 மார்ச் மாதத்தில் இசெயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டது.

***RES/81/2016 - Development of Roof Tile Drier***

*கைத்தொழில் அமைச்சும் எமது நிறுவனமும் இணைந்து மேற்கொள்ளும் இச்செயற்திட்டத்தை 2016 ஜனவரியில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்துடன் செயற்திட்டத்திற்கான திட்டமும் பொருட்பட்டியலும் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படடன. உரிய (நேர்ட் நிறுவனத்திற்கும் கைத்தொழில் அமைச்சுக்கும் இடையிலான) புரிந்துணர்வு ஒப்பந்தம் 2016 டிசம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்டதுடன் நிர்மாணப் பணிகள் 2017 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டன. 2017 டிசம்பர் மாதமளவில் இம்முன்னோடிச் செயற்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*5. கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி*

*5.1 வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடு*

*மீளாய்வாண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தில் உள்ள விடயங்களில் தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்புச் செயற்பாடுகளில் அதிக வேறுபாடுகள் காரணப்படுகின்றன. திட்டமிட்டவாறு விற்பனை தொடர்பில் பரந்தளவிலான விளம்பரம் செய்யப்பட்டிருக்கவில்லை.*

*மேலும் நிறுவனத்தின் நிர்வாக சபையானது செலவுகள் தொடர்பில் கடுமையான கட்டுப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துவதனால் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் அவை கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.*

*பொறியிலாளர் டி.டி. ஆனந்த நாமல்*
*பணிப்பாளர் நாயகம்*

*பொறியியலாளர் டபிள்யு.ஜே.எல்.எஸ். பெர்னாண்டோ*
*தலைவர்*